# தேவனால் அனுப்பப்பட்ட ஒரு மனுஷன்

போதகர். கெ. ஜெ. ஆபிரகாம்

(முண்டக்கயம் குட்டப்பன்)

## இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக *(E-Books)* இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் *(Download)* செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: *www.WordOfGod.in*

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் *(E-Book)* வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய *WhatsApp* எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ *(Email)* எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

*WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599*

*Email: wordofgod@wordofgod.in*

## *Wishing you in the mighty name of Jesus Christ*

*We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.*

*95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.*

*WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599*

*Email: wordofgod@wordofgod.in*

# தேவனால் அனுப்பப்பட்ட ஒரு மனுஷன்

**BIOGRAPHY**

**போதகர். கெ. ஜெ. ஆபிரகாம்**
(முண்டக்கயம் குட்டப்பன்)

**Eva. Jai Mohan,**
*Athirunkal*

---

*Published By*
**EMMANUEL PUBLICATIONS**
*No. (48) 12, West Mada Street,*
*Nungambakkam, Chennai - 600 034* 52174490
*Phone : (R) 044 - 28250887, (O) 044 - ~~28239042~~*
*E-mail : emmanuel_pub@rediffmail.com*

**DEVANAAL ANUPPAPATTA ORU MANUSHAN**
**PASTOR. K.J. ABRAHAM**

| | | |
|---|---|---|
| *1st Impression* | : | *May 2004* |
| *Author* | : | *Eva. Jai Mohan, Athirunkal* |
| *Translated into Tamil by* | : | *Bro. P. D. Paul* |
| *Printed at* | : | EBENEZER PRINTERS<br>*Trichur - 12, Kerala.*<br>*Ph : 0487 - 2361892 / 2360992* |
| *Published by* | : | *Eva. C.I. George*<br>*Chennai - 34*<br>*Ph : (O) 52068991,*<br>*Cell : 31013991* |


*Reserved*
*Emmanuel Publications*
*Chennai - 6000 34*

Price Rs. 40/-

## உள்ளே.....


பக்கம்

1. பதிப்பாளர் உரை ..... V
2. அணிந்துரை ..... IX
3. முகவுரை ..... XIII
4. மதிப்புரை ..... XV
5. அறிமுகம் ..... XVII
6. ஒரு சில வார்த்தைகள் ..... XX
7. "நான் இரண்டு முறை மூழ்கினேனா? இல்லை" ..... 1
8. "எல்லோரும் என்னை கைவிட்டார்கள்" ..... 9
9. நான் நேசிக்கும் என் பரலோக தகப்பன் அறிவதற்கு! ..... 21
10. ஆவடியப்பனும் கறுப்புநாயும் ..... 35
11. எல்லைகள் பெரிதாகிறது ..... 45
12. அற்புதங்களினாலும் அடையாளங்களினாலும் ..... 69
13. தொடர்ச்சி ..... 117
    a. யூசுப்
    b. திருமதி கெ. ஜெ. ஆபிரகாம்
    c. போதகர் கெ. சி. வர்க்கீஸ்
    d. குடும்பத்தை குறித்து
    d. அனுபவ சாட்சிகள்
14. முடிவுரை ..... 143

# பதிப்பாளர் உரை

எல்லா காலத்தையும்விட இந்நாட்களில் சுவிசேஷ வேலையானது அதிக வல்லமையோடு உலகமெங்கும் நடைபெற்று வருகிறது. அதுமட்டுமல்ல, சுவிசேஷம் அறிவிப்பதென்பது, மானமுள்ளதும் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளக்கூடியதுமான ஒரு தொழிலாகவும் ஏறக்குறைய மாறிவிட்டது. குறிப்பாகச் சொல்வேனானால் எந்த வீட்டிலும் எந்த நேரத்திலும் செல்லக்கூடியவரும் நன்றாக வரவேற்புடன் ஏற்றுகொள்ளகூடியவரும் இன்றைய சுவிசேஷ ஊழியக்காரரே. சொல்லக்கூடிய அளவிற்கு கஷ்டங்களோ, பாடுகளோ, பட்டினியோ அனுபவிக்க வேண்டிய சூழ்நிலைகள் இன்றைய ஊழியக்காரர்களுக்கு இல்லை. ஆனாலும் இவைகளெல்லாம் அனுபவிக்கும் ஊழியக்காரர்களும் உண்டு என்பதையும் நான் மறந்துவிடவில்லை. ஆனால், அவர்கள் மிகவும் குறைவுதான்.

கடந்த நூற்றாண்டுகளில் இயேசுகிறிஸ்துவைச் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு வசனங்களுக்குத் தங்களை முற்றிலுமாக ஒப்புக்கொடுத்ததின் நிமித்தம் நிந்தையும் பாடுகளும் தனிமையும் அனுபவிக்க நேர்ந்தவர்கள் அநேகர். பாரம்பரிய சபையில் இருக்கவே இயேசுகிறிஸ்துவை இரட்சகரும் கர்த்தருமாக ஏற்றுக்கொண்டு விசுவாச ஸ்நானம் எடுத்துக்கொண்டதற்காக மேற்கூறின உபத்திரவங்களெல்லாம் அனுபவித்தவர்தான் போதகர். கே.ஜெ. ஆபிரகாம் எனும் முண்டக்கயம் குட்டியப்பன். அணிவதற்கு மாற்று ஆடைக்கூட இல்லாமல் பதினெட்டாவது வயதில் வீட்டிலிருந்து துரத்தினார்கள். அவருடைய தகப்பனார் பணக்காரரும் ஊர்த் தலைவருமாயிருந்தார். சபை வைராக்கியம் காரணமாக தன் மகனிடம் அவர் மிகவும் கடினமாகச் செயல்பட்டார். பெற்ற தாய் மறந்தாலும் நான் (கர்த்தர்) உன்னை மறக்கமாட்டேன் என்ற வசனம் இங்கே

கிரியை செய்வதை நாம் காணலாம். நம் கதாபாத்திரத்தை தகப்பனார் வீட்டை விட்டு வெளியேற்றியபொழுது தாயாரும் கசப்புத்தன்மையோடு காணப்பட்டதாக இந்த நூலில் நாம் காணமுடிகிறது.

கர்த்தரால் தெரிந்துகொள்ளப்பட்ட சுவிசேஷ ஊழியரும், ஆயனுமான கெ. இ. ஆபிரகாம் ஐயா அவர்களின் வேதாகமப்பள்ளியில் படித்தபிறகு ஐயா அவர்கள் நம் கதாநாயகனை ஜெபித்து, ஆசீர்வதித்து சுவிசேஷ வேலைக்கென்று அனுப்பிவைத்தார். இந்தியா வின் பல பகுதிகளுக்குச் சென்று அவர் சுவிசேஷத்தை அறிவித்தார். தேவநிச்சயத்தோடு மாத்திரமே அவர் ஒவ்வொரு இடங்களுக்கும் சென்றார் என்பது அவருடைய ஊழியத்தின் தனித்தன்மை.

கர்த்தர் கட்டளையிட்டபடி போதகர் கெ.ஜெ. ஆபிரகாம் தமிழ்நாட்டிற்கு வந்தார். பாளயங்கோட்டை யிலுள்ள ஸ்ரீவைகுண்டத்தை மையமாக வைத்து பணிகள் ஆரம்பித்தார். சர்ச் ஆப் காட் (Church of God) சபையின் உதவியோடுதான் அவர் ஊழியம் செய்தார். இதுவரையிலும் ஆயிரக் கணக்கானவர்கள் அவருடைய ஊழியத்தின் பலனாய் இரட்சிக்கப்பட்டார்கள். ஞானஸ்நானம் பெற்று விசுவாசத்தில் நிலைநிற்கிறார்கள். அநேக இடங்களில் சபைகள் துவங்குவதற்கும் இடையாயிற்று.

போதகர் கெ.ஜெ. ஆபிரகாம் இப்பொழுது வயது சென்றவராகிவிட்டார். இருந்தபோதிலும் சுறுசுறுப்போடு ஊழியம் செய்துவருகிறார். அமெரிக்கா செல்வதற்கும் அவருக்கு வாய்ப்புக் கிடைத்தது. கர்த்தருடைய ஊழியத்திற்காகக் கிடைத்த பணம் முழுவதும் அதற்காகவே செலவு செய்தார். முப்பத்தி நான்கு வருட ஊழியத்தில் பதினைந்திற்கும் அதிகமான சபைகளை ஸ்தாபித்தார்,

நிலத்தை வாங்கினார், சபைக் கூடங்கள் கட்டினார். அமெரிக்காவில் உயர்ந்த பதவியிலிருக்கும் மகனின் உதவி இவருக்கு முக்கியமாக வருகிறது. பதிமூன்று மருத்துவ மனைகளின் பொறுப்புகளை கவனிக்கும் அவருடைய பெயர் யூசுப் ஆபிரகாம். அவர் தம்முடைய வருமானத்தில் ஒரு நல்ல பகுதியை ஊழியத்திற்காக செலவு செய்கிறார். தேவனுடைய வழிநடத்துதலும் மகனுடைய ஆலோசனையும் ஒன்றாக வந்தபொழுது அந்த ஊழியத்தின் இடங்களும் கட்டிடங்களும் எல்லாமே தமிழ்நாட்டிலுள்ள சர்ச் ஆப் காட் (Church of God) க்கு எழுதிக்கொடுத்தார். இவைகளின் மதிப்பு ஏறத்தாழ 90 இலட்சமாகும். ஆஸ்திகளுக்காக சண்டைபோட்டுக் கொண்டு நீதிமன்றங்களை சரணாகதியடையும் விசுவாசிகளுக்கும் போதகர்களுக்கும் இது ஓர் சவால்.

அன்பு நிறைந்த இந்தத் தகப்பனாரின் வாழ்க்கை வரலாற்றை வெளியிடுவதற்கு பரிசுத்த ஆவியானவரின் உந்துதல் எனக்கு உண்டாயிற்று. அந்த உந்துதலின் மூலமாகத்தான் இந்த பெரிய பணியை நான் ஆரம்பித்தேன். இதை வெளியிடுவதற்கு அநேக தடைகள் நேரிட்டது. ஆகிலும் சர்வவல்லமையுள்ள கர்த்தர் இதைச் சாத்தியமாக்கினார்.

இந்த வாழ்க்கை வரலாற்றை எழுதுவதற்காக சகோதரர் ஜெய்மோகன் பலமுறை பாளையங்கோட்டை, ஸ்ரீவைகுண்டம் என்னும் இடங்களுக்குச் செல்லவேண்டியிருந்தது. இதற்காக மிகவும் பிரயாசப்பட்ட இவரை கர்த்தர்தாமே ஆசீர்வதிப்பாராக.

இந்த புத்தகத்தின் அணிந்துரை எழுதிய Pr. P. Wellesly Solomon, (National Representative, Church of God in India) அவர்களுக்கும், முகவுரை எழுதிய Rev. D. Mohan (Senior Pastor, New Life AG Church, Chennai) அவர்களுக்கும்,

மதிப்புரை எழுதிய Pr. A. Pratap Singh (Superintending Pastor, Trinity Full Gospel Church) அவர்களுக்கும், இந்த நூலை மலையாளத்திலிருந்து தமிழில் மொழிபெயர்த்த Bro. P.D.Paul (Artist) அவர்களுக்கும் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து வின் நாமத்தில் என் உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். தேவன் தாமே இவர்களை மேன்மேலும் ஆசீர்வதிப்பாராக.

இந்த நூலை நல்லமுறையில் அச்சிட்டு தந்த திரிச்சூர் எபிநேசர் பிரிண்டர்ஸ்க்கு என் நன்றியை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நிறுவனத்தை தேவன் தாமே மேன்மேலும் ஆசீர்வதிப்பாராக.

இந்நாட்களில் உள்ள போதகர்களில் போதகர் கெ. ஜெ. ஆபிரகாமை போன்றவர்கள் மிகக்குறைவுதான். அவருடைய வாழ்க்கை வரலாறு அநேக விசுவாசிகளுக்கும் போதகர் களுக்கும் ஆசீர்வாதமாகவும் வழிகாட்டியுமாக அமையட்டும் என்ற நோக்கம்தான் இந்த நூலை வெளியிடும்படி என்னைத் தூண்டியது. இதை வாசிக்கும் ஒவ்வொரு நபரின் ஆவிக் குரிய வாழ்க்கையும் மேலும் மேலும் பெலனடைய வேண்டுமென்று ஜெபத் தோடு இந்த நூலை கர்த்தருடைய பாதத்தில் சமர்ப்பிக்கிறேன்.

கிறிஸ்துவில்
சுவிசேஷகர். சி. ஐ. ஜார்ஜ்.

# அணிந்துரை

"அவன் ஒருவனாயிருக்கையில் நான் அவனை அழைத்து, அவனை ஆசீர்வதித்து, அவனைப் பெருகப்பண்ணினேன்"

ஏசாயா 51: 2

ஒருவனாயிருந்த ஆபிரகாமை தேவன் அழைத்ததுபோல 'குட்டப்பன்' என்று செல்லமாய் அழைக்கப்பட்ட தேவ மனுஷன் பாஸ்டர் கே. ஜே. ஆபிரகாமைத் தேவன் கேரளாவிலிருந்து தமிழ்நாட்டிற்கு வரும்படி அழைத்தார். இடம் புதிது, சூழ்நிலை புதிது, இனம் புதிது, மக்கள் புதியவர்கள், மொழி மற்றும் கலாச்சாரம் புதிது. ஆனாலும் தேவனுடைய அழைப்பிற்குக் கீழ்ப்படிந்து தமிழ்நாட்டின் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள திருத்தலமாய்க் கருதப்பட்ட ஸ்ரீவைகுண்டத்துக்கு வந்த பாஸ்டர் ஆபிரகாம் சொந்த ஊரில் படித்துக் கொண்டிருந்த தன் மகனின் படிப்புச் செலவிற்கும் ஸ்ரீவைகுண்டத்தில் தன் குடும்பத்தை நடத்துவதற்கான செலவுக்கும் தினமும் அல்லல் பட்டுக் கொண்டிருந்தாலும் அழைத்த தேவன் ஆசீர்வதிப்பார் என்கிற விசுவாசத்தில் நிலைத்திருந்தார். ஆண்டவரின் அற்புதமான கரம் அவரையும் குடும்பத்தையும் போஷித்ததோடு, அழைக்கப்பட்ட நோக்கம் நிறைவேற அவரை ஊழியப் பாதையிலும் ஆசீர்வாதமாய் நடத்தியது. ஜெபத்தோடும், பிரயாசத்தோடும் பாஸ்டர் ஆபிரகாம் ஸ்ரீவைகுண்டத்திலும் அதைச் சுற்றிலும் உள்ள கிராமங்களிலும் நடந்து திரிந்து ஊழியம் செய்தார்.

சென்ற இடமெல்லாம் அவர்மூலம் தேவன் அற்புதங்களையும் அடையாளங்களையும் நடப்பிக்க ஆரம்பித்ததால் ஸ்ரீவைகுண்டத்தில் சபை ஸ்திரப்பட்டது.

ஆத்துமாக்கள் பெருகினார்கள்; சுற்றிலும் அநேக ஊழியங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. இந்திய தேவசபையின், தமிழ்நாடு ஐக்கியத்தோடு ஸ்ரீவைகுண்டம் சபையை மட்டும் சேர்த்துக்கொண்டு சுற்றிலும் தன்னால் தேவன் உண்டாக்கின சபைகளைத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்தார். தன்னிடத்தில் ஐக்கியமாயிருந்து பயிற்சி பெற்ற விசுவாசிகளை ஊழியர்களாக உருவாக்கி தூத்துக்குடி மாவட்டத்திலும் நெல்லை மாவட்டத்திலும் தன்னைக் கொண்டு தேவன் உண்டாக்கின சபைகளுக்குப் போதகர்களாக நியமித்தார். ஒவ்வொரு சபைக்கும் தேவையான இடம் வாங்கி, சபைக் கட்டிடம் கட்டுவதற்கு பாஸ்டர் ஆபிரகாம் எந்த நிலையிலும் இந்திய தேவ சபை, தமிழ்நாடு ஸ்தாபனத்தை நோக்கிப் பார்க்கவில்லை; எந்த தனிப்பட்ட மனிதனையும் நோக்கிப் பார்க்கவில்லை; ஒத்தாசை வரும் பர்வதங்களுக்கு நேராகவே அவர் கண்களை ஏறெடுத்துப் பார்த்தார். அவருடைய தீவிரமான ஜெபத்தையும், ஆழமான விசுவாசத்தையும் கண்ட தேவன் சுற்றிலும் இருந்த அநேக வசதி படைத்தவர்களுக்குச் சொப்பனத்தில் தரிசனமாகி, பாஸ்டர் ஆபிரகாமின் ஊழியத்திற்கு அவர்கள் உதவும்படி வழிநடத்தினார். அவருக்கே மகிமையும், கனமும், ஸ்தோத்திரமும் உண்டாவதாக!

அவர் தனது அறுபது ஆண்டு ஊழிய வாழ்க்கையில் அவர் மூலம் ஸ்தாபிக்கப்பட்ட சபைகள் 2003 ஆம் ஆண்டு இந்திய தேவ சபை, தமிழ்நாடு ஸ்தாபனத்தோடு இணைக்கப்பட்டன. தன்னால் தேவன் ஸ்தாபித்த சபைகளையும், ஊழியர்களையும் பாஸ்டர். கே. ஜே. ஆபிரகாம் எவ்வித பிரதிபலன்களையும் எதிர்பார்க்காமல் மனப்பூர்வமாய் இந்திய தேவ சபைக்கு ஒப்புக்கொடுத்தார்.

இடைவிடாத ஜெபம், எப்போதும் ஊழியம் குறித்ததான தரிசனம், தேவ இராஜ்யத்தின் விரிவாக்கத்திற்காகத் தன்னையும் தன் குடும்பத்தின் நலன்களையும் விட்டுக் கொடுத்த தியாகம், சபைகள் மணவாட்டி சபைகளாக எடுத்துக்கொள்ளப்படுவதற்கு ஏதுவான ஆரோக்கியமான உபதேசம், ஊழியர்கள், விசுவாசிகள் மற்றும் எல்லா மக்கள் மீதும் காட்டுகின்ற மரியாதையும் அன்பும் யாவரையும் தன்னோடு சேர்த்துக் கொள்வதற்கேற்ற புன்சிரிப்பும் இனிய சொற்களும்தான் பாஸ்டர் கே. ஜே. ஆபிரகாமின் ஊழிய வெற்றிக்கான அஸ்திபாரங்கள்.

பாஸ்டர். கே. ஜே. ஆபிரகாம் அவர்களின் பிரசங்கங் களில் என்னைக் கவர்ந்த பிரசங்கத்தின் பகுதி என்னவெனில்:

“ஆதரிக்க வேண்டிய ஆபிரகாம் ஆகாரை ஆதரிக்கவில்லை; ஆனால் ஆண்டவர் ஆகாரை ஆதரித்தார். ஒரு தேவ பிள்ளையை ஆதரிக்க வேண்டியவர்கள் ஆதரிக்கத் தவறினாலும் உருவாக்கின கர்த்தர் ஆதரிப்பார் என்ற விசுவாசத்தை வர்த்திக்கச் செய்தது. ஆகாருக்கு ஆபிரகாம் கொடுத்தது ஒரே ஒரு துருத்தி தண்ணீர்; அதுவும் வற்றிப் போயிற்று. ஆனால் ஆண்டவர் ஆகாருக்காக கொடுத்தது வனாந்திரத்தில் திறந்த நீருற்று, வற்றாத நீருற்று. அவ்விதமாக இந்த உலகத்தில் மனிதன் தரும் உதவிகள் தற்காலிகமானது; ஆனால் ஆண்டவர் தருகிற ஆசீர்வாதங்களோ வற்றாத ஆசீர்வாதங்கள்” என்ற சத்தியம் என் இதயத்தில் ஊடுருவிச் சென்றது.

தேவன் அவரை அழைத்தார்; ஊழியத்தில் அவரை ஆசீர்வதித்தார்; அவரைக் கொண்டு சபைகளைப்

பெருக்கினார். இன்று ஊழியத்தில் பிரவேசிக்கிற இளைஞர்களுக்கு இயேசுவைப்போல, அப்போஸ்தலன் பவுலைப்போல பாஸ்டர் கே. ஜே. ஆபிரகாம் ஒரு மாதிரி என்று கூறினால் அது மிகையாகாது.

இவ்வளவாய் இன்னுமாய் இயேசுவின் இணையற்ற ஊழியத்தில் பிரகாசித்துக் கொண்டிருக்கிற ஒரு தேவ மனுஷனுடைய வாழ்க்கைச் சரிதத்திற்கு இந்த எளிய அணிந்துரையை எழுதுவது எனக்குத் தேவன் தந்த பெரிய பாக்கியமாகக் கருதுகிறேன். இப்போதும் ஊழியம் செய்கிற அனைவரும் படித்துப் பயன்பெற உதவும் ஒரு ஒப்பற்ற நூலாக இதைப் பரிந்துரை செய்கிறேன்.

அநேகரை விசாரித்து ஆராய்ச்சியோடு இந்தச் சரிதத்தை உருவாக்கினவர்களையும் இந்தச் சரிதம் வெளியிடப்பட முயற்சி எடுத்துக் கொண்ட இம்மானுவேல் பப்ளிகேஷன்ஸ், சகோ. ஜார்ஜ் அவர்களையும் இயேசுவின் இனிய நாமத்தினால் வாழ்த்துகிறேன். படிப்போர் அனைவரும் பரமனின் ஊழியத்தில் பயன்படத் தேவன் கிருபை செய்வாராக.

அன்புடனும், ஜெபத்துடனும்,

பொ. வெல்லெஸ்லி சாலமோன்
தேசியப் பிரதிநிதி, இந்திய தேவ சபை

Rev D Mohan
Senior Pastor

New Life AG Church
#6 Anna Salai Little Mount Chennai 600015 India
Tel : 91 44 22353100 Fax : 91 44 22301126 e-mail : revdmohan@nlag.org.in
Website : www.nlag.org.in

Date : 12/ 05/ 04

# முகவுரை

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள் பாஸ்டர் கே. ஜே. ஆபிரகாம் வாழ்க்கைச் சாட்சி பற்றிய புஸ்தகத்தின் முகவுரையை எழுதுவதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். நான் ஊழியத்திற்கு ஒப்புக்கொடுத்து வந்த நாட்களில் இந்த தேவ மனுஷருடைய தொடர்பு கிடைத்தது. இவர் ஒரு நல்ல வேத அறிவு படைத்தவர், தீர்க்கதரிசன வரம் பெற்ற ஊழியர். இவருடைய பாதத்தில் உட்கார்ந்து நல்ல வேத சத்தியங்களை பல மாதங்கள் கற்றிருக்கிறேன். அவைகள் இன்று வரைக்கும் எனக்குப் பிரயோஜனமாக அமைந்துள்ளது.

இவருடன் பல இடங்களுக்கு ஊழியம் செய்யச் சென்றிருக்கிறேன். தீர்க்கதரிசன வரம் கிரியை செய்வது எப்படி மற்றும் ஆவியினாலே ஞானத்தைப் போதிக்கும் வசனமும், அந்த ஆவியினாலேயே அறிவை உணர்த்தும் வசனமும் எப்படி கிரியை செய்கிறது என்றும் விசுவாசம் எப்படி கிரியை செய்கிறது என்பவைகளையும் இவரிடம் நான் அதிகம் கற்றுக்கொண்டேன். இவர் தமிழ்நாடு பகுதிகளில் ஊழியம் செய்ய வந்தபோது விசுவாச ஜீவியத்தில் ஊழியத்தை ஆரம்பித்து பல பாடுகள் வழியாய் போய் ஒரு மகிமையான ஊழியத்தைக் கட்டி எழுப்பி

இருக்கிறார். ஸ்ரீவைகுண்டம் என்ற இடத்தில் தேவனுக்கு மகிமையாக ஒரு நல்ல சபையைக் கட்டி எழுப்பியதோடு வார நாட்களில் பல மைல்கள் பிரயாணமாய் சென்று வேதாகமப் பாடங்களை நடத்தி பல சபைகளைக் கட்டி எழுப்பி இருக்கிறார்.

நான் இரட்சிக்கப்பட்ட நாட்களில் சி.எஸ்.ஐ. பாரம்பரியம் கொண்ட சாயர்புரம் என்ற இடத்தில் இவரை வைத்து ஒரு சுவிசேஷக்கூட்டம் நடத்தினேன். என் கையில் எந்த பணமும் இல்லாமல் விசுவாசத்தோடு இந்தக் கூட்டத்தை நடத்தினேன். அதன் பின்பு இந்த இடத்தில் ஒரு ஏ.ஜி. சபை ஆரம்பிக்க கர்த்தர் உதவி செய்தார். ஒரு சர்ச் ஆப் காட் சபையும் ஆரம்பிக்கப்பட்டது. இந்தச் சபைகளை கர்த்தர் இந்நாட்களில் அதிகமாய் ஆசீர்வதித்து இருக்கிறார்.

ஆண்டவர் இவரையும் இவருடைய குடும்பத்தையும், ஊழியத்தையும், ஆசீர்வதித்து அவரை உயர்த்தி இருக்கிறார் என்பதில் சந்தேகம் இல்லை. **Eva. C.I. George** என்பவரை ஆண்டவர் இவருடைய வாழ்க்கை சரித்திரத்தை எழுதும்படி ஆவியானவர் உணர்த்தி பல ஆண்டுகள் இதற்காக நேரம் செலவழித்து அநேக விசுவாசிகளுக்கும் ஊழியர்களுடைய வாழ்விற்கும் விசுவாசம் உண்டாக 'இதை வெளியிட்டு இருக்கிறார். இந்தப் புஸ்தகத்தை படித்து மற்றவர்களுக்கும் இதை அறிமுகப்படுத்தி தேவனுடைய நாமத்தை மகிமைப்படுத்தும்படி அன்பாய் கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிக்கு
கிறிஸ்துவின் பணியில்
**Rev. D. Mohan**

# TRINITY FULL GOSPEL CHURCH

## மதிப்புரை

**Dear Brother George,**

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் அன்பான வாழ்த்துக்கள்.

கடந்த அரை நூற்றாண்டுக்கு மேலாக கர்த்தருடைய ஊழியத்தை கறையில்லாமல் செய்து வரும் மதிப்புக்குரிய பாஸ்டர் கே. ஜே. ஆபிரகாம் அவர்களுடைய வாழ்க்கைச் சரித்திரத்தைப் புத்தக வாயிலாக தாங்கள் வெளியிடுவதைக் குறித்து அளவில்லாத மகிழ்ச்சி அடைகிறேன். அவர்களது வாழ்க்கைச் சரித்திரம் எண்ணற்ற மக்களின் விசுவாச வாழ்க்கைக்கு ஒரு சவாலாக அமையும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

நான் ஊழியத்திற்கு வந்த நாள் முதல் கிட்டத்தட்ட 40 ஆண்டுகளுக்கு மேலாக பாஸ்டர் கே. ஜே. ஆபிரகாம் அவர்களை அறிவேன். அவர் ஒரு சிறந்த வேத பண்டிதர். வேத புத்தகத்தின் எந்தக் கடினமான பகுதிகளையும் மிக எளிதான முறையில் புரிய வைக்கக் கூடிய சிறந்த போதகர். கர்த்தருடைய வார்த்தைகளிலும் அவரது அழைப்பிலும் அசைக்கமுடியாத விசுவாசம் உடையவர். தான் அறிந்த, அறிவிக்கிற உபதேச சத்தியங்களில் மிகவும் உறுதியுடையவர். கர்த்தர் வெளிப்படுத்தும் எந்தக் காரியத்தையும் செய்வதிலும் செய்யவைப்பதிலும் தயங்காதவர்.

பாஸ்டர் அவர்கள் கேரளத்திலுள்ள பிறவம் என்னுமிடத்தில் ஊழியம் செய்து கொண்டிருந்தபோது கர்த்தர் அவரை தமிழ்நாட்டிலுள்ள ஸ்ரீவைகுண்டம் என்னும் இடத்திற்கு சென்று ஊழியம்செய் என்று சொன்னார். அந்த வேளையில் அவர் சார்ந்திருந்த ஸ்தாபனத்தின் தலைமையகத்திலிருந்து அவரை கேரளாவிலுள்ள வசதிமிக்க இன்னொரு சபைக்குபோகும்படி இடமாற்றல் உத்தரவை அனுப்பினார்கள். அந்த இடமாற்றல் டைப் செய்து தபாலில் நான்தான் அனுப்பினேன். பாஸ்டரோ கர்த்தர் என்னைத் தமிழ்நாட்டிற்கு சென்று ஊழியம் செய்யச்

சொல்லுகிறார். ஆனாலோ பாதை தெரியவில்லை உதவும் மனிதர்கள் இல்லையெனினும் உதவும் கர்த்தருடைய கிருபையோ கிடைக்கிறதே என்றார்கள். அப்பொழுது தலைமை ஸ்தானத்தை அவருக்குக் கொடுத்து வந்த மாதாந்திர உதவி 50 ரூபாயை நிறுத்தி விட்டார்கள். பாஸ்டர் அவர் பாதை தெரியாத, உதவிக்கு ஒன்றும் இல்லாத, சபைகள் ஒன்றும் இல்லாத, ஸ்ரீவைகுண்டத்தில் தமது குடும்பத்துடன் புறப்பட்டு விட்டார்கள். பல நாட்கள் சாப்பாடு உணவில்லாமல், வேறெந்த வருமானமும் இல்லாமல் ஆண்டவரை மட்டும் சார்ந்து அவருடைய சத்தத்திற்கு கீழ்ப்படிவதை மட்டுமே தெரிந்துகொண்டார்கள். கர்த்தர் அற்புத அடையாளங்களால் அவர் தமது வார்த்தைகளை உறுதிப்படுத்தினார். அநேக பட்டணங்களில், உயர்ந்த உத்தியோகஸ்தர்கள் உட்பட ஏராளமான விசுவாசிகளைக் கர்த்தர் ஸ்தாபித்தார். தேவன் பாஸ்டரோடிருந்து நடப்பித்த காரியங்களை கண்ட போது அவருக்கு இடையூறாக உத்தரவைத் தந்த மிஷனெரி அவரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார். இதைப் போன்ற மற்ற அநேக அனுபவங்களும் உண்டு.

இப்படிப்பட்ட தேவதாசனோடு நெருங்கிப் பழகவும், அவர்களது ஆலோசனைகள், மற்றும் அவர்களது அன்பைப் பெற்றுக்கொள்ளவும் எனக்குக் கிடைத்த சிலாக்கியத்திற்காக கர்த்தருக்கு நன்றி சொல்லுகிறேன். இந்தச் சிறிய முகவுரை சாட்சியைப் பகிர்ந்து கொள்வதிலும் பெருமகிழ்ச்சி கொள்ளுகிறேன். பாஸ்டர் அவர்களது வாழ்க்கை சரித்திரம் அவரைப் போன்ற அநேக ஊழியர்களை எழுப்ப உறுதுணையாயிருக்கும் என்னும் நம்பிக்கையோடு முடிக்கிறேன்.

தேவ கிருபை நம்மோடிருப்பதாக.



**Pastor. A. Pratapsingh**
(Superintending Pastor)
Trinity Full Gospel Church,
Ayanavaram,
Chennai - 600 023

# போதகர் கே.ஜெ. ஆபிரகாம்
# ஓர் அறிமுகம்

வாழ்க்கை வரலாறு என்பது இலக்கியத்தின் மிகவும் முக்கியமான ஒரு கிளை. இதுவரையிலும் பல்லாயிரக் கணக்கான வாழ்க்கை வரலாறுகள் வெளிவந்திருக்கின்றன. இயேசுகிறிஸ்துவின் வாழ்க்கை வரலாற்றை நான்குபேர் நான்குவிதமாக எழுதியிருக்கிறார்கள். அதே நோக்கில் கர்த்தர் செய்த அனைத்துக் காரியங்களும் ஒவ்வொன்றாக எழுதினால் அது அளவற்றதாகி இடம்கொள்ளாமல் போய்விடும் என்று யோவான் கூறுகிறார்.

வாழ்க்கை வரலாறுகள் அனைத்துமே ஒரே பக்கப்பார்வைகளாகத்தான் காணப்படும். அது மட்டுமல்ல, இன்னமும் சொல்லப்போனால் அவைகள் வெளித் தோற்றங்களை மட்டுமே பிரதிபலிக்கின்றன. ஆனால், கிறிஸ்தவ வாழ்க்கை வரலாறுகளைப் பார்க்கும்பொழுது, பரிசுத்தஆவியானவர் ஒருவரின் வரலாற்றை எழுதத் தூண்டும்பொழுது அவர்களின் குறைகளையும் பலவீனங் களையும் சுட்டிக் காண்பிப்பதுண்டு.

கர்த்தரால் வல்லமையாகப் பயன்படுத்தப்பட்ட ஜார்ஜ் வெர்வர் என்பவருடைய வாழ்க்கை வரலாற்றை எழுத வேண்டுமென்று சிலர் அவரை அனுகினதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். அவர்களின் நோக்கத்தை அறிந்த அவர் இவ்வாறு பதிலளித்தாராம்: "வாழ்க்கை வரலாற்றை எழுதுவதில் எனக்கு எந்த விரோதமுமில்லை ஆனால் ஒரு நிபந்தனை - என்னுடைய வாழ்க்கையில் நேர்ந்த குறைகளும் தோல்விகளும் அதில் சேர்த்துக் கொள்ள வேண்டும்" இதைக் கேட்ட அந்த வெளியீட்டார் ஆச்சரியப்பட்டார்கள். ஜார்ஜ் வெர்வரின் வாழ்க்கையில்

நேரிட்ட தோல்விகளை எழுத விருப்பமில்லாத அவர்கள் அந்த முயற்சியிலிருந்து பின்வாங்கினார்களாம்.

அப்படியென்றால் வாழ்க்கை வரலாற்றில் வரும் கதாபாத்திரங்களுக்கெல்லாம் குற்றங்களும் தவறுகளும் உண்டு. சபை வரலாற்றில், சாது சுந்தர்சிங்கைப் போலவோ, வில்லியம் கேரியைப் போலவோ உள்ளவர்கள் மிகவும் குறைவு. எகிப்திலுள்ள கோமா என்னும் இடத்தில் வாழ்ந்துவந்த ஒரு பரிசுத்தவானிடத்தில் “உன்னிடம் நான் தோற்றுவிட்டேன்” என்று பிசாசு ஒத்துக்கொண்டதாக நான் வாசித்திருக்கிறேன். எல்லாவிதமான சோதனைகளையும் அந்தப் பரிசுத்தவான் ஆவியின் பலத்தினால் வென்றார். அப்பேர்ப்பட்டவர்களும் நம் மத்தியில் இருக்கிறார்கள் என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது. அருவெருப்புகள் நிறைந்த அமெரிக்காவில்தானே பில்லிகிரகாம் சாட்சியைக் காத்துவருகிறார்.

இதோ இங்கேயும் ஒரு வாழ்க்கை வரலாற்றின் பக்கங்கள் புரளுகின்றன. ஒரு சாதாரண மனிதனை தேவனால் எவ்வாறு பயன்படுத்த முடியும் என்பதை நாம் இதிலிருந்து கற்றுக்கொள்ளமுடியும். முண்டக்கயம் குட்டப்பன் எனும் போதகர். கெ. ஜே. ஆபிரகாம். 2003 ஆம் வருடம் ஜனவரி மாதத்தில் முதன்முதலாக நான் அவரை சந்தித்தேன். திருவல்லாவிலுள்ள இண்டர் நேஷனல் டூரிஸ்ட் ஹோமில் நானும் திரு. ஜார்ஜ் (இந்தப் புத்தகத்தின் வெளியீட்டாளர்) என்பவருமாக அவரை சந்திக்கச் சென்றோம். அந்த அறையில் அமர்ந்துகொண்டே அவர் தன்னுடைய கடந்த கால நினைவுகளின் சுருள்களைத் திறந்தார். புன்னகையுடன், அவர் கூறின அநேக காரியங்கள் கண்ணீர் விட்டபடிதான் என்னால் கேட்க முடிந்தது. இந்த பெரிய மனிதனின் வாழ்க்கை அனுபவங்கள் வரைவதற்கான

வாய்ப்பு அன்று எனக்கு கிடைக்கப்பெற்றது. திரு ஜார்ஜ் அவர்கள் இந்த காரியத்தில் காண்பித்த அக்கறைதான் இதை முடிப்பதற்கு எனக்கு உந்துதலாக அமைந்தது. இதற்காக அவர் பலமுறை கும்பநாடு, திருவல்லா, பாளையங் கோட்டை, ஸ்ரீவைகுண்டம் முதலான இடங்களுக்குப் பயணம் செய்யவேண்டியிருந்தது. அதையெல்லாம் பொருள்படுத்தாது எந்த லாபநோக்குமின்றி கடமையை செய்துமுடிப்பதென்பது நிச்சயமாக பாராட்டத்தக்கதே.

போதகர். கெ. ஜெ. ஆபிரகாம் அவர்களை குட்டப்பன் என்று பல இடங்களிலும் எழுதியிருக்கிறேன். கேரளாவில் அந்தப் பெயரில்தான் அவரை அதிகமாக அறிவர்.

அறுபது வருடங்கள் ஊழியம் செய்து அநேகரை இரட்சிப்பிற்குள் வழிநடத்தி பல இடங்களிலும் சபைகளை நிறுவிய போதகர் கெ. ஜெ. ஆபிரகாம், தன் சாட்சியையும் காத்துகொண்டு நீதிமான்களின் சபையில் இன்றும் நிமிர்ந்து நிற்கிறார். தமக்கு முன் வைத்திருக்கிற ஓட்டத்தைப் பொறுமையுடன் ஓடுகிறார், தமிழ்நாட்டில் நடக்கும் ஊழியம் இயேசுகிறிஸ்துவின் நாள் வரையிலும் நிறைவேற வேண்டும் என்ற பெருத்த வாஞ்சையுடன் ஒருவராலும் குறைக்கூறமுடியாதவரும் அமைதி காப்பவரும் எளிமை யானவருமான இந்த தேவதாசனின் வாழ்க்கை வரலாற்றை வரைவதற்கு தேவன் எனக்கு உதவிசெய்தார். இதை எழுதுவதற்கும் வெளியிடுவதற்கும் பல தடைகள் நேரிட்டது. ஆனாலும் கர்த்தர் எல்லாம் நன்றாய்ச் செய்தார். கர்த்தருக்கு மகிமை உண்டாவதாக. இதை வாசிப்பவர்களும் தேவனால் ஆசீர்வதிக்கப்படுவார்களாக.

அதிருங்கல்
22/04/04

கிறிஸ்துவில் அன்புடன்
ஜெயமோகன்
அதிருங்கல்

# 1

## “நான் இரண்டு முறை மூழ்கினேனா? இல்லை”

மலைப்பாங்கான (High Range) பகுதியின் வாயில் என்று சொல்லக்கூடிய இடம் கேரளாவிலுள்ள முண்டக்கயம். கட்டப்பனா, குமளி, தேக்கடி, நெடுங்கண்டம் போன்ற இடங்களுக்கெல்லாம் முண்டகக்கயம் வழியாகத்தான் செல்வார்கள். கேரளாவின் தென்கிழக்கு பகுதிகளிலிருந்தும் தமிழ்நாட்டின் வடமேற்கு பகுதிகளிலிருந்தும் இந்த இடங்களுக்கு செல்பவர்கள் முண்டக்கயம் வழியாகத்தான் போவார்கள். ஒவ்வொரு இடங்களின் பெயர்களுக்கு பின்னாலும் ஏதாகிலும் ஒரு கதை இருப்பது வழக்கம். ஆகவே முண்டக்கயம் என்ற பெயருக்கு பின்னாலும் ஒரு கதை இருக்கலாம். முண்டக்கயத்தில் “கொல்லம் பறம்பில்”

என்று மிகவும் பெயர் பெற்ற ஒரு குடும்பம். அவர்கள் சற்றும் மரபு வழுவாதவர்கள். தீண்டாமையை மிகவும் கரிசனையோடு கடைப் பிடிப்பவர்கள். பிள்ளைகளை தேவபக்தியிலும், தேவாலய ஆசாரங்களிலும் துளிகூட நகராது வளர்ப்பவர்கள். எல்லாவிதத்திலும் தங்கள் பழமையைக் கைவிடாதவர்கள். "கொல்லம் பறம்பில்" உதுப்பு மிகுந்த பிரதாபசாலியாயிருந்தார். ஏகப்பட்ட விவசாய நிலங்களுக்கு சொந்தக் காரராயிருந்த அவர், நாட்டுவைத்தியத்திலும் (ஆயுர்வேதம்) கைதேர்ந்தவரா யிருந்தார். வியாதி என்று வருபவர்களிடம் உதுப்பு சொல்வார் "இந்த இந்த மரத்தின் இத்தனை இலை, இந்த செடியின் இந்த வேர் எல்லாம் பறித்துக் கொண்டுவா". அவர்களும் அப்படியே செய்வார்கள். அதை வைத்துக் கொண்டு உதுப்புவின் அறிவுரையின்படி கஷாயமோ, தைலமோ, எண்ணையோ செய்வார்கள், அவர் சொல்வது போலவே சாப்பிடுவார்கள் நோய் பறந்துவிடும். உதுப்புவின் மனைவி மறியாம்மா - திருவாய்மொழிக்கு எதிர்மொழி இல்லை என சொல்வதுபோல், கணவருக்கு

*சி. எம். எஸ். ஊழியக்காரரிடம் நாலு ருபாய் கொடுத்து ஆபிரகாம் ஒரு வேதாகமம் வாங்கினார். அதை இடைவிடாமல் படிக்க ஆரம்பித்த ஆபிரகாமை தகப்பனார், விலக்கினார். "அந்த வேதாகமம் சீர்திருத்த (Prostestant) சபையாருடையதா?" "ஆமாம்" "அது வாசிக்கக் கூடாது" அப்படி வாசித்தாலும் ஒரு அதிகாரம் மாத்திரம்தான் வாசிக்கணும், ஒரு அதிகாரத்தை விட அதிகம் வாசித்தால் வீட்டில் யாராவது இறந்துவிடுவார்கள் (ஆர்த்தடாக்ஸ் சபையாருக்கு மரண நேரத்தில் வேதாகமம் வாசித்துதான் பழக்கம்)*

எல்லாவற்றிலும் கீழ்படிந்துவந்த ஒரு பெண்மணி. இந்த தம்பதியருக்கு 1925 ஆம் வருடம் பங்குனி மாதம் ஆறாம் தேதி ஒரு மகன் பிறந்தான். மகனுக்கு 'இட்டி' என்று பெயர்சூட்டினார்கள். வீட்டில் குட்டப்பன் என்று அழைத்தார்கள். தேவாலய பக்தர்களான உதுப்புவும் மறியாம்மாவும் குட்டப்பனுக்கு ஞானஸ்நானம் கொடுத்தார்கள். மலையாளத்தில் ஞானஸ்நான முழுக்கு என்றுதான் சொல்வார்கள். ஆனால் தலையில் தண்ணீர் தெளித்து விட்டு அநியாயமாய் மூழ்கினதாக கூறுபவர்களின் போதனையைக் கூட சரி போகட்டும் என்று விட்டுவிடலாம். ஆனால், அவர்களின் மொழிஅறிவு சற்று கொடுமைதான். உணவோடு கூட உபதேசமும் தகப்பனிடத்திலிருந்து குட்டப்பன் பெற்று வந்தான். எல்லா ஞாயிற்று கிழமைகளிலும் தேவாலயத்திற்கு சென்றிருக்க வேண்டும் என்பது தகப்பனாரின் கட்டளையாயிருந்தது. நோன்பும், திருநாட்களும் ஆசரிப்பதிலும் எந்தத் தடையும் ஒரு பொழுதும் கொண்டுவர வாய்ப்பிருந்ததில்லை.

எந்த ஒரு தனிப்பட்ட நபரின் வாழ்க்கையிலேயும் ஒரு திருப்புமுனையாக அமையும் சம்பவங்கள் இருக்குமல்லவா. இட்டியென்ற குட்டப்பனுக்கும் அவ்வாறான ஓர் அனுபவம் உண்டாயிற்று. அனுபவங்களிலிருந்து கற்றுக்கொள்வதென்பது மிகப் பெரிய காரியம். அனேகரிடத்தில் இல்லாத குறையும் இதுதான், அனுபவங்களிலிருந்து கற்றுக் கொள்ளாமலிருப்பது. ஆனால் குட்டப்பன் அப்படியல்ல. தனக்கு உண்டான அனுபவத்தை இருள் சூழ்ந்த இடத்தில் ஒளிரும் விளக்கை போல் தன் இருதயத்தில் காத்துக் கொண்டான். அந்த ஒளியானது அணைந்துபோகாதபடி அதில் எண்ணெய் பகிர்ந்தான். அந்தச் சம்வத்தை

குறித்துதான் இங்கே எழுதப்படுகிறது. தேவ பக்தரும் ஒப்பற்ற பேச்சாளருமாயிருந்த புத்தன்காவில் திருமேனி (பீலக்சினோஸ் மேற்றாணியார்) என்பவர் முண்டக்கயம் ஆர்த்தடாக்ஸ் தேவாலயத்தில் ஒரு வாரம் தேவசெய்தி அளித்தார். அதில் ஒரு நாள் செய்தி கெட்ட குமாரனைக் குறித்ததாயிருந்தது. செய்திச் சுருக்கம் இதுவாயிருந்தது. கெட்ட குமாரன் தன்னுடைய தகப்பனிடத்தில்தான் பாவமன்னிப்பை கேட்டான். வேறு யாரிடத்திலும் அவன் பாவ மன்னிப்பை கூறவில்லை. தகப்பனிடத்தில் பாவ அறிக்கையிட்டால் மன்னிப்பு கிடைக்காது; நீ தேவனிடத்திலே உன்னுடைய பாவங்களை அறிக்கையிடவேண்டும். அப்பொழுது தேவன் உன் பாவத்தை மன்னிப்பார்.... எவ்வளவு பெரிய உண்மை! வசனத்திற்கு முற்றிலும் கீழ்ப்படிகிற தன்மை! சடங்காசாரங்களில் மூழ்கியிருக்கும், தேவாலயத்தின் உயர்ந்த பதவியிலிருக்கும் ஒருவரிடமிருந்து இவ்வளவு உண்மையோடு வசனத்தை கேட்டபொழுது குட்டப்பன் என்கிற இட்டி அதை இருதயத்தில் ஏற்றுக்கொண்டான். கேட்ட வசனம் விசுவாசமாக மாறியது. எகிப்திலிருந்து ஜனங்களை தேவன் சரீரபிரகாரமாக விடுவித்தார். ஆனால் அதிகமான அற்புதங்களையும் தெய்வீக நன்மைகளையும் அனுபவித்தும் கூட கர்த்தருடைய வார்த்தை அவர்களுக்குள் விசுவாசமாக மாறவில்லை. விளைவோ, அவர் களெல்லோரும் அந்த பெரிய பயணத்திலேயே மரணமடைந்தார்கள். அல்ல, தேவன் அவர்களைக்கொன்று போட்டார். புத்தன்காவில் திருமேனி அவர்கள் தனக்கு கிடைத்த வெளிச்சத்தில் பக்தியோடு பரிசுத்தவானாக வாழ்ந்தார். ஆனால், அவருடைய தேவாலயத்தைச்

சார்ந்தவர்கள் இன்றும் தொடர்ந்து செய்து வரும் திருப்பலிகளும், பாவ சங்கீர்த்தனங்களும் வான வேடிக்கைகளும் அதற்கு சற்றும் அனுகூலமானவைகளல்ல. கர்த்தருக்கு முன் நிற்க வேண்டிய அந்த மகாபெரிய நியாயத்தீர்ப்பின் நாளிலே இவர்கள் என்ன நியாயத்தைச் சொல்வார்கள்?

அதற்கடுத்த வருடம் அங்குள்ள சி. எம். எஸ். பள்ளியில் ஒரு கூட்டம் நடந்தது. எழுத்தறிவில்லாத ஒரு பெண்மணி உரத்தகுரலில் இவ்வாறு சொன்னார்கள். "முண்டக்கயமே பாவக்கயமே..... (கயம் என்றால் ஏரி அல்லது குளம் என்பது மலையாளத்தில் பொருள்) நீ கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுப்பதில்லை நீ மனம் திரும்புவதில்லை" என்றும் கண்ணீரோடே சொன்னார்கள். "மனம்திரும்புங்கள்" அன்றுதான் குட்டப்பனுக்கு இரட்சிப்பின் நிச்சயம் உண்டானது. பக்கத்தில் இருந்த ஒரு பெரிய வீட்டின் மாடியிலுள்ள அறைக்கு சென்று தனியே ஜெபம் செய்தார். கண்ணீரோடு அழுதார். பாவமன்னிப்பின் மகிழ்ச்சியும் இரட்சிப்பின் நிச்சயமும் அவருக்கு உண்டாயிற்று. இரட்சிக்கப்பட்டவுடனேயே சி. எம். எஸ். -

*ஆபிரகாம் துவங்கின சபைகளில் இருக்கும் ஏழை பெண்களுக்கு அவரே திருமணம் செய்து வைக்கிறார். அப்படியென்றால் திருமணத்தை ஆசீர்வதிப்பதல்ல. திருமணத்தின் செலவுகளும் அவரே பார்த்துக் கொள்வார். கொடுப்பதென்ற வரம் ஏலியின் காலத்து தரிசனம் போல காணப்படும் இந்நாட்களில் இது ஒரு அதிசயம்தானே.*

இல் இருந்த ஒரு ஊழியக்காரரிடம் சென்று ஒரு வேதாகமத்தை வாங்கி வாசிக்க ஆரம்பித்தார். அந்த வாசிப்பு மணிக்கணக்கில் சென்றது. புத்தகத்தை மூடி வைக்க மனமில்லை. இரட்சிக்கப்பட்டதின் உண்மையான அடையாளம்தானே வேதவாசிப்பு - அது இரட்சிக்கப் பட்டவர்களுக்குத்தான் உண்டாகும். கிறிஸ்தவர்கள் என்று சொல்பவர்கள் தங்கள் வீட்டு அலமாரியின் மீது வைத்திருக்கும் வேதபுத்தகத்தை எடுத்து வாசித்திருந்தார் களானால் ஒரு சிலருக்காகிலும் அடிமைத்தனத்தின் நுகத்திலிருந்து விடுதலை கிடைத்திருக்கும். இப்படியாக எப்பொழுதும் வேதாகமத்தை வாசித்துக் கொண்டிருப்பதை ஒரு பெந்தெகொஸ்தே சகோதரர் பார்க்க நேரிட்டது. இன்னமும் அதிகமான சத்தியங்களை அவர் குட்டப் பனுக்குப் புரிய வைத்தார். இது குட்டப்பன் பெந்தெ கொஸ்தே ஆராதனைக்குச் செல்ல காரணமாயிற்று. பெற்றோர்களுக்கு பயந்து இரகசியமாக ஆராதனைக்குச் செல்ல ஆரம்பித்தார். தனித்து பயணம் செய்த எதியோபியன் நிதி அமைச்சர் கிறிஸ்தவன் ஆவதற்கு ஊழியக்காரரான பிலிப்புவின் உதவி தேவைப்பட்டது. சவுல் கிறிஸ்தவனாவதற்கு அனனியாவின் உதவி தேவையாயிருந்தது. அதே போலவே ஏற்ற வேளையில் சகலமும் நன்மையாகச் செய்து முடிக்கும் கர்த்தர் படிப்படியாக இட்டி என்கிற குட்டப்பனை விசுவாச ஸ்நானத்திற்கு வழிநடத்தினார். தொடர்ந்துள்ள வேதவாசிப்பு தான் அதற்குக் காரணமானது.

கோட்டயத்தில் உள்ள அரிப்பறம்பு என்ற இடத்தில் வைத்து விசுவாச ஸ்நானம் பெற்றார். அப்பொழுது அவருக்கு வயது பதினெட்டு. போதகர் டி.பி. வர்க்கீஸ் என்பவர்தான் ஞானஸ்நானம் கொடுத்தது. அங்கேயே கர்த்தருடைய

பந்தியிலும் பங்குபெற்றார். குட்டப்பனின் உள்ளத்தில் கர்த்தருடைய கற்பனைக்குக் கீழ்ப்படிந்ததால் உண்டாகும் மகிழ்ச்சி அலை மோதியது.

அரிப்பறம்பு எனும் இடத்திலிருந்து குட்டப்பன் முண்டக்கயத்திற்கு வந்தார். சில நாட்களுக்குள்ளேயே ஜனங்களுக்கு விஷயம் தெரிந்துவிட்டது. தேவாலயத்தின் பாதிரியாரின் தம்பி பாதிரியாரிடம் சொன்னார். "குட்டப்பன் இரண்டாந்தரம் மூழ்கினான்" பாதிரியார் குட்டப்பனை அழைப்பித்தார். "குட்டப்பா, நீ திரும்பவும் முழ்கினதாகக் கேள்விப்படுகிறது உண்மைதானா?" குட்டப்பன் பாதிரியாரின் தம்பியைப் பார்த்து, "நான் இரண்டு முறை மூழ்கினேனா இல்லை ஒருமுறை மூழ்கினேனா?" "ஒருமுறை மூழ்கினேன்" "நீ எதற்காக இந்த பெரிய நோம்பின் நாட்களில் பொய்சொல்கிறாய்?" "நான் ஒரு முறை தான் மூழ்கினேன்" என்று சொன்னார். இந்த வார்த்தைகளுக்கு அங்கிருந்த ஒருவராலும் ஒன்றும் பதில் கூற முடியவில்லை.

குட்டப்பனுக்கு அந்நாட்களில் ஆராதிப்பதற்கும், ஜெபிப்பதற்கும் கூலி வேலை செய்யும் ஒரு சிறு கூட்டத்தினர் தான் பங்காளர்களாக கிடைத்தார்கள். மலையின் மேல் உள்ள ஒரு சிறு குடிசையில் அவர்கள் ஒருமித்து கூடி தேவனை மகிமைப்படுத்தி வந்தார்கள். இரண்டு பேராவது மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்பது கர்த்தருடைய வாக்குதத்தம்தானே. ஒரு கூடுகைக்கு தேவையான மிக குறைந்த எண்ணிக்கை தான் இரண்டு. அந்த இரண்டு நபர்களும் இரட்சிக்கப் பட்டவர்களாயிருந்தால் அவர்களின் கூடுகையிலும், ஆராதனையிலும், ஜெபத்திலும் தேவ சமூகம் இருக்கிறது.

ஆனால், மிகப்பெரிய கட்டிடங்களில் நூற்றுக்கணக்கிலும் ஆயிரக்கணக்கிலும் இரட்சிக்கப்படாதவர்கள் கூடி வந்தாலும் அந்த மறுபிறப்பின் அனுபவமில்லாதவர்கள் மத்தியில் தேவனுடைய சமூகம் இல்லை என்பதை இனி என்று தான் புரிந்து கொள்வார்களோ என்னவோ. காலை பத்து மணியளவில் துவங்கும் அந்த கூட்டமானது மாலையில் மூன்று மணியளவில்தான் முடிவடையும். அது முடிந்தவுடன் வீட்டிற்குச் செல்லமாட்டார்கள். வெளியே பொது இடங்களில் சுவிசேஷம் அறிவிப்பதற்குச் செல்வார்கள். அதற்கு பின் இரவிலே ஜெபக்கூட்டமுண்டு. இடைவிடாது கூடுகைகள், இப்படிப்பட்ட கூட்டங்களும் ஊழியங்களும் தான் ஆதி கிறிஸ்தவ சபையிலும் இருந்து வந்தது. வீடுகளிலும், பொது இடங்களிலும் அவர்கள் கூட்டங்கள் நடத்தினார்கள். அசைக்க முடியாத விசுவாசம் அவர்களை உறுதியாக நிற்கச் செய்தது. உலகம் முழுவதும் அவர்களை எதிர்த்தபொழுதும் கூட உறுதியாக நின்று வல்லமையாய் செயல்படுவதற்கு காரணமானதும் வேறெதினாலுமல்ல. ஆதலால் என்ன நேர்ந்தது தெரியுமா, சபை மேலும் மேலும் வளர்ச்சியடைந்து சுவிசேஷம் பரவியது.

# 2

## "எல்லோரும் என்னை கைவிட்டார்கள்"

ஒரு யாத்திரை - தேவாலயத்தில் திருப்பலிக்குச் செல்லாமல் ஞாயிறுதோறும் பெந்தெகொஸ்தே ஆராதனைக்கு செல்வது குட்டப்பனின் தகப்பனாருக்கு தெரியவந்தது. மிகவும் கரிசனைக்காரரும் தேவாலய பக்தருமான அந்த தகப்பனாருக்கு அது தாங்கிக் கொள்ளக்கூடியதையும் விட அதிகமானதாக இருந்தது. பாரம்பரியத்தையும் தேவாலய ஆசாரங்களையும் கூடியமட்டும் ஆதரித்து வந்த அந்த தகப்பனார் குட்டப்பனை அழைத்தார். "குட்டப்பா ஞாயிற்றுக் கிழமைகளில் தேவாலயத் திருப்பலிக்கு நீ ஏன் போகாமலிருக்கிறாய்?" பதில் : "எனக்கு அதில் விசுவாசம்

இல்லாததினால்" "அது சரி, விசுவாசம் இல்லை அப்படித்தானே ; அப்படியானால் இன்றே வீட்டைவிட்டு நீ போயாக வேண்டும். தேவாலயத்திற்குச் செல்லாதவன் வீட்டிலும் வேண்டாம்! என்று சொல்லிவிட்டார். தாயார் மகனை அழைத்தார். "மகனே, என்னிடம் ஐந்து சக்கரம் (20 பைசா) உண்டு, அதை நீ வாங்கித்தான் ஆக 'வேண்டும்" மன உறுதியோடிருந்த குட்டப்பன் அதை வாங்கி மேஜை மேல் வைத்தான். அறைக்குள் சென்று ஜெபித்த பிறகு, "உலகமும் தந்தை சகோதரர்களையும் ஜாதியையும் வீட்டையுமெல்லாம் தேவனுக்காய் விட்டு" என்று பொருள் சொல்லும் மலையாள பாடலின் வரிகளை பாடிக்கொண்டு தான் பிறந்து வளர்ந்த வீட்டையும் பெற்றோரையும் விட்டு விட்டு புறப்பட்டார் - செல்லுமிடமறியாது!

*ஆபிரகாம் ஒரு நாட்டுவைத்தியரின் மகன். வைத்தியர்களுக்கு தொடுகுறி வித்தையும் தெரியும். ஆபிரகாமுக்கும் சில வித்தைகள் தெரியும். ஸ்ரீவைகுண்டத்தில் வந்த ஆரம்பநாட்கள். தேவர் ஒருவர் கைகடியாரத்தில் பிடித்தார், கடிகாரத்தை கொடுக்க வேண்டும் அல்லது 10 ரூபாய் கொடுக்க வேண்டும். பணமில்லாத ஆபிரகாம் என்ன செய்வது. ரவுடி விடவில்லை. இதற்குமேல் பொறுமை காக்க முடியாமல் ரவுடியின் நெற்றியில் தடவினார். ரவுடி அசைய முடியாமல் அப்படியே நின்றார். பத்து நிமிடம் அப்படியே நின்றுதான் ஆகணும் பிறகு போகலாம். ஆபிரகாம் இப்படி தப்பித்துக் கொண்டார் பிறகு ரவுடி தேவரின் உபத்திரவமேயில்லை.*

முண்டக்கயத்திலிருந்து குட்டப்பன் எனும் யாத்திரிகனுடைய பயணம் ஆரம்பித்துவிட்டது. "நான் உங்களை திக்கற்றவர்களாக விடேன்" என்று வாக்குத்தத்தம் பண்ணின, "ஒருவராய் பெரிய காரியங்களை செய்கிற "நல்ல கர்த்தர் கரம்பிடித்து நடத்தினார்". "உண்மையோடு நடப்பவர்களுக்கு ஒரு நன்மையும் குறைவுபடுத்தாதவர்" இந்த குட்டப்பன் மூலமாக செய்யப்போகும் பெருத்த காரியங்களை அன்று அஞ்ஞானியாயிருந்த குட்டப்பன் அறியாதிருந்தார். பலவிதமான சோதனைகளினூடே கடந்து போகப் பண்ணி சுத்திகரிக்கவும், ஏற்ற கருவியாக உருவாக்கவும் செய்வதின் முதல்படியாயிருந்தது அந்தப் பயணம். கும்பநாடு எனும் இடத்தில் அந்தப் பயணம் தற்காலிகமாக முடிவடைந்தது. போதகர் கெ. கெ. வர்க்கீஸ் என்பவர் குட்டப்பனுக்கு இரண்டு ரூபாய் கொடுத்தார். அது பயணத்திற்கு உதவியது.

காலம் சென்ற பத்திச்சிற யோஹன்னாச்சன் என்ற தீர்க்கதரிசியைப் பார்த்தார். அவர் மூலமாய் கர்த்தர் பேசினார். "மகனே, இவைகளொன்றும் உபத்திரவங்களல்ல, அநேக உபத்திரவங்கள் உனக்காக காத்திருக்கிறது". குட்டப்பனின் வாழ்க்கையில் அந்த தீர்க்கதரிசனம் நிறைவேறியது என்பதில் சந்தேகமில்லை. இந்நாட்களில் உள்ள தீர்க்கதரிசனங்களோடு ஒப்பிட்டு பார்க்க வேண்டியது தான் இது. யார் யார் எங்கெல்லாம் தேவனை அறிந்து வாழ்ந்திருக்கிறார்களோ, அவர்களுக்கெல்லாம் பாடுகளும், உபத்திரவங்களும் பட்டினியும் உண்டாயிருக்கிறது. இந்த நிலைமையில்தான், இரட்சிப்பை ஏற்றுகொள்வீர்களானால் பிறகு எந்தப் பிரச்சனையும் அணுகாது என்று போதிக்கிறார்கள். திருவசனத்தின் சத்தியங்களுக்கு

விபரீதமாக யார் போதித்தாலும் அது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என்பதை எத்தனை பேர் புரிந்துகொண்டிருக் கிறார்கள்?

பத்திச்சிற யோஹன்னாச்சனின் தீர்க்கதரிசன வார்த்தைகளை கேட்டு விட்டு குட்டப்பன் கும்பநாடு என்ற இடத்திலிருந்து சங்ஙனாச்சேரி எனும் இடத்திற்கு வந்தார். அங்கிருந்து படகு வழியாக எர்ணாக்குளம் வந்தார். எர்ணாக்குளத்திலிருந்து ரெயில் வழியாக ஒற்றப்பாலம் சென்றடைந்தார். பயணச் செலவுக்கான பணம்.......? அடப்பனாம் கண்டத்தில் குஞ்ஞிக்காச்சன் என்பவரும் பத்திச்சிற யோஹன்னாச்சன் என்பவரும் ஒவ்வொரு ரூபாய் வீதம் குட்டப்பனுக்கு கொடுத்தார்கள்.

ஒற்றப்பாலம் வந்தடைந்த குட்டப்பனை வரவேற்பதற்கு அங்கு தேவஸ்யா என்ற ஒரு விசுவாசியிருந்தார். அவர் ஒரு நல்ல அறையை விருந்தாளிக்காகக் கொடுத்தார்.

ஜெப வீரரான குட்டப்பனுக்கு தனித்திருந்து ஜெபிப்பதற்கு அந்த அறை மிகவும் ஏற்றதாக அமைந்தது. அங்கிருந்த சாய்வு நாற்காலியில் படுத்துக் கொண்டு குட்டப்பன் ஜெபிக்கத் தொடங்கினார். இளவயதிலேயே கர்த்தரின் இரட்சிப்பை அனுபவித்து கர்த்தரின் கட்டளைகளுக்கு கீழ்ப்படிய பெரும் கிரயத்தை செலுத்த நேரிட்ட குட்டப்பனை கர்த்தர் பரலோக தரிசனம் தந்து விசுவாச வாழ்க்கையில் உறுதிப்படுத்திவந்தார். ஜெபித்துக் கொண்டிருந்தபொழுது அந்த அறைக்குள் ஒரு பெரிய வெளிச்சம் உதித்தது. குட்டப்பன் பார்த்தபொழுது ஒருவர் குட்டப்பனை பார்த்துக் கொண்டு நிற்கின்றார்.

பூட்டியிருக்கும் அறைக்குள் இவர் எவ்வாறு வந்தார் என யோசித்து குட்டப்பன் ஆச்சரியப்பட்டார். அந்த நபர் குட்டப்பனிடம் கேட்டார். “நீ எதற்காக அழுகிறாய்?” “எல்லோரும் என்னை கைவிட்டார்கள். ஆனால் என் தாயார் என்னை கைவிட்டது என்னால் சகிக்க முடியவில்லை” என்று குட்டப்பன் பதிலளித்தார். உடனே கையை உயர்த்திக் கொண்டு அந்த நபர் சொன்னார் “உன் தாயாரை விட நான் உனக்கு நல்லவனல்லவா” கையை பார்த்தபொழுது தான் இது கர்த்தர்தானே என்ற உணர்வு குட்டப்பனுக்கு வந்தது. அநேக காரியங்கள் கர்த்தர் குட்டப்பனிடம் பேசினார், மறைந்து போனார்.

இவ்வாறு அநேக நாட்கள் சென்றது. குட்டப்பன் சொந்த ஊருக்குத் திரும்பினார். முண்டக்கயத்தில் உள்ள தேவ ஜனங்களோடு சேர்ந்து கர்த்தரை ஆராதித்து வந்தார். எந்தவித பாதுகாப்புமின்றி, திறந்து கிடந்த, சரியான

*பாளயங்கோட்டையில் சைமன் என்று ஒரு விசுவாசி இருந்தார். அவருடைய மனைவி கர்ப்பமாயிருந்தார்கள். பிரசவத்திற்காக மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டார்கள். குழந்தை இறந்துவிட்டது என்று கூறினார் மருத்துவர். ஆபிரகாம் அந்த மருத்துவமனைக்குச் சென்று ஜெபித்தார். அங்கே நின்றுகொண்டிருந்த பெண் மருத்துவர் நகைத்தார்கள். ஆனால் அழகான ஒரு பெண்குழந்தையை உயிருடன் பெற்றெடுத்தார்கள். இது எல்லோருக்கும் பெரிய ஆச்சரியமாக இருந்தது. அந்த குழந்தை வளர்ந்தது. இன்று அவளுக்கு திருமணமாகி இரண்டு குழந்தைகளுக்கு தாயாகியிருக்கிறாள்.*

கூரையில்லாத, அப்போதைய முண்டக்கயம் பி.சி. சபைக் கூடத்தில் குட்டப்பன் தங்கலானார். யாராகிலும் ஏதாகிலும் கொடுத்தால் வாங்கிச் சாப்பிடுவார். அப்படியிருக்க மத்திய திருவிதாங்கூரிலிருந்து ஒரு கர்த்தருடைய ஊழியக்காரர் வந்தார். குட்டப்பனோடு அறிமுகமானார். சுவிசேஷ ஊழியத்திற்கான அழைப்பு கிடைத்திருந்த குட்டப்பன் அதை மறைத்து வைக்கவில்லை. இதைக் கேட்ட அந்த ஊழியக்காரர், கும்பநாடு எபிரோன் வேதாகம பள்ளியில் சேர்ந்து பயிற்சி பெறும்படி குட்டப்பனிடம் அறிவுறுத்தினார்.

இந்நாட்களில் தேசமெங்கும் வேதாகமப் பள்ளிகளும், கல்லூரிகளும், குருமடங்களும் (Seminary) உண்டு. அங்கெல்லாம் நிறையப் பேர் பயிற்சியும் பெறுகிறார்கள். ஆனால், அவர்களில் எத்தனை பேர் உண்மையான தெய்வீக அழைப்பை பெற்றிருக்கிறார்கள் என்பது யோசனைக்குரிய விஷயம். இவ்வாறான நிறுவனங்களை நடத்துபவர்களின் நோக்கமும் ஆராயப்பட வேண்டியதே. ஆனால், கும்பநாடு எபிரோன் வேதாகமப்பள்ளி அப்பேர்ப்பட்ட ஒன்றல்லாதிருந்தது. மகான் கெ. இ. ஆபிரகாம் என்பவர் பட்டினியினூடே ஆரம்பித்த அந்த நிறுவனத்தில் படிப்பதற்கு குட்டப்பன் எனும் ஆபிரகாமை கர்த்தர் தேர்ந்தெடுத்து அனுப்பினார்.

கும்பநாட்டுக்கு செல்லும் குட்டப்பனின் பயணம் ஆரம்பித்தது. ஐசுவரியத்தில் வளர்ந்த அந்த வாலிபனுக்கு விசுவாச வாழ்க்கையின் துவக்கம் பரிசாகக் கொடுத்தது பட்டினியும், தரித்திரமும், வியாதியுமே. சரீரமெல்லாம் ஒரு விதமான சொறி வந்து ஆங்காங்கே இரத்தமும், சீழும் கசிந்தது. கட்டுவதற்கு மாற்று உடையில்லை, வண்டிக்

கூலிக்குகூட பணமில்லை. (அந்நாட்களில் சரியான போக்குவரத்து வசதிகளும் இல்லையே) பரலோக தரிசனத்திற்கு முற்றிலும் கீழ்ப்படிந்து, குட்டப்பன் முண்டக்கயத்திலிருந்து நடக்கத் துவங்கினார். வழியருகில் படுத்துறங்கியும் உணவில்லாமலும் மெலிந்து காய்ந்து போன அந்த மனித உருவம் மூன்றாம் நாள் கும்பநாடு போய் சேர்ந்தது. "மகிமையைக் கண்ட சாட்சிகள்" என்று திருவசனத்தில் பேதுரு அப்போஸ்தலர் தங்களைக் (விசுவாசிகளை) குறித்து சொல்லியிருக்கிறார். உண்மைதான், அந்த கர்த்தரின் மகத்துவத்தை கண்டு புரிந்து கொள்ளாதிருந்தால் யாருமே இப்பேர்ப்பட்ட பைத்தியம் போன்ற காரியம் செய்யமாட்டார்களே. உலகத்திற்கு முன் வேடிக்கைகளான இப்பேர்ப்பட்ட தேவ ஊழியக்காரர்களைக் கொண்டுதான் கர்த்தர் பெரிய காரியங்களை செய்திருக் கிறார். வில்லியம் கேரி, டேவிட் லிவிங்ஸ்டன், பண்டித ரமாபாய், குக்கு துரை மற்றும் அநேக தேவதாசர்களும் கிறிஸ்துவின் நிமித்தம் பைத்தியக்காரர்களானதினால்தான் சுவிசேஷம் பரவி சபைகள் வளர்ந்து வந்தது.

நடந்து நடந்து சோர்ந்து போய் ஒரு விதமாக குட்டப்பன் எபிரோன் சென்றடைந்தான். சொறி பிடித்தவனாய் மெலிந்து காய்ந்து போய் சற்றும் முடியாதவனான குட்டப்பனைக் கண்ட வேதாகம பள்ளி மாணவர்கள் சொன்னார்கள். "ஐயா இங்கே இல்லை போய்விடு" ஏதோ உதவிக்காக வந்த பிச்சைக்காரன் என்றுதான் அவர்கள் நினைத்திருப்பார்கள். அது அவர்களுடைய குற்றமல்ல. ஒரு பிச்சைக்காரனின் உருவமும் தோற்றமும்தான் அப்பொழுது குட்டப்பனுக்கு இருந்தது. ஆனால் கர்த்தரின் அழைப்பை குறித்ததான நல்ல

உறுதியோடிருந்த குட்டப்பன் அமைதியாக அங்கேயே உட்கார்ந்தான்.

திங்கட்கிழமை மதியமான பொழுது தலைமை ஆசிரியரும், வேதாகமப் பள்ளி நிறுவனருமான போதகர். கெ. இ. ஆபிரகாம் வந்தார். மாணவர்களெல்லாம் அவரைப் போய் பார்த்தார்கள். கடைசியாக நமது கதாநாயகனும், தலைமை ஆசிரியரைப்போய் பார்த்தார். பெரிய உள்ளம் படைத்தவரும் தேவனின் உத்தம ஊழியக்காரருமான ஆசிரியரய்யா குட்டப்பனிடம் ஊரைப் பற்றியும் வீட்டைப்பற்றியுமெல்லாம் கேட்டறிந்தார். அதன் பிறகு, யாக்கோபாய சபையிலிருந்து இரட்சிக்கப்பட்டிருந்த தன் மனைவியை அழைத்தார். பிற்காலத்தில் எபிரோனிலே அம்மச்சி (தாயார்) என பெயர்பெற்ற அந்த தாய் அழைப்பைக் கேட்டு வந்தார்கள். அப்பொழுது ஐயா கேட்டார். "உனக்கெத்தனை பிள்ளைகள் இருக்கிறார்கள்" பதில் : "இரண்டு பேர்". "இதோ மூன்றாவது மகன்,

ஆபிரகாம் வாலிப நாட்களில் ஊழியங்கள் ஆரம்பித்த காலம். ஒரு வீட்டில் ஒரு வேலைக்காரன் இருந்தான். வெளிவேலையெல்லாம் செய்வான். அந்த வீட்டுக்காரரின் மகள்தான் அவனுக்கு சாப்பாடு பரிமாறுவது. தேவநடத்துதலினால் ஆபிரகாம் அந்த பெண் அவனுக்கு பரிமாறவேண்டாம் என்று சொன்னார். அப்பொழுது அப்பெண்ணின் தாயார் பரவாயில்லை சாப்பாடுதானே போடட்டும் என்று சொன்னார்கள். நாட்கள் சென்றபின் ஆசிரியாக வேலைப்பார்த்த அந்தப் பெண் வேலைக்காரனோடு ஓடிவிட்டாள்.

இவனையும் அழைத்து செல். சொந்த பிள்ளையினிடத்தில் காட்டும் அன்போடுகூட அந்த தாயார் குட்டப்பனை அழைத்து சென்றார்கள். குட்டப்பனுக்கு மாற்று உடை எடுத்து கொடுத்தார்கள். அணிந்திருந்த ஆடையை குளியலறையிலேயே கழற்றிப் போட்டு கொண்டு குளித்து விட்டு வரச் சொன்னார்கள் அந்த தாயார். அதற்குக் கீழ்ப்படிந்துவந்த குட்டப்பனுக்கு வயிறு நிறைய உணவு கொடுத்தார்கள். அவர் சொன்னார் “அவர் எல்லாம் நன்றாய் செய்தார்” குட்டப்பனுக்கு அது புரியவில்லை. குட்டப்பன் கேட்டார் அது யார் “அம்மச்சி (தாயார்) “அது இயேசு. அவர் எல்லாம் நன்றாய் செய்தார்” குட்டப்பன் “அம்மச்சி அது, எங்கே எழுதியிருக்கிறது சங்கீத புஸ்தகங்களிலா?” “இல்லை மகனே, சுவிசேஷத்தில்தான்” தொடர்ந்து பேசிக் கொண்டேயிருந்தார்கள். பெற்ற தாயும், தந்தையும் கைவிட்ட குட்டப்பனை விசாரிக்க, வசனத்தைக் கற்பிக்க, உணவும் உடையும் கொடுக்க கர்த்தர் மற்றொரு தந்தையையும் தாயையும் ஏற்படுத்தினார். அவர்கள்தான் போதகர் கெ. இ. ஆபிரகாமும் அவர் மனைவியும். பழைய ஏற்பாட்டிலே ஆபிரகாம் மிகுந்த ஐசுவரியவானாயிருந்தும் ஆகாரினிடத்தில் ஓர் அப்பமும், ஒரு துருத்தி தண்ணீரும் தான் கொடுத்தனுப்பினார். வாழ்நாள் முழுவதும் எந்த பிரச்சனையுமில்லாமல் வாழ்வதற்கேற்ற சொத்தை ஆபிரகாம் ஆகாருக்கும், இஸ்மவேலுக்கும் கொடுத்தனுப்பி யிருக்க வேண்டும். உதவிக்கு வேலைக்காரரையும்கூட ஆபிரகாம் கொடுத்திருக்கலாம். ஆனால், இவை களொன்றும் ஆபிரகாம் செய்யவில்லை. அவளும் பிள்ளையாண்டானும் எப்படியாகிலும் அழிந்து போகட்டும் என்ற எண்ணமா? அல்லது “யேகோவாயீரே” என்ற

நம்பிக்கையா? அவ்வாறு செய்யும்படி ஆபிரகாமை தூண்டினது எது? தெரியாது. ஆனால் நாம் ஒன்றை அறிந்திருக்கிறோம் - அப்பமும் தண்ணீரும் தீர்ந்து போனது. ஆகாரும் பிள்ளையாண்டானும் கூக்குரல் இட்ட சத்தத்தை கர்த்தர் கேட்டார். விளைவோ வற்றாத நீரூற்று! அது ஒரு பெரிய ஜாதியின் தோற்றத்திற்குக் காரணமாயிற்று. நன்மையாய் செய்கிற கர்த்தர் குட்டப்பனை புடமிடுவதின் முதல் படியாயிருந்தது எபிரோனிலே அவர் படுத்த நாட்கள்.

"போதகர் கெ. இ. ஆபிரகாமைப் போலவோ, பத்தநாபுரத்தில் உள்ள அப்பச்சனை (போதகர். டி. ஜி. உம்மன்) போலவோ, அல்லது பக்தன் குட்டியச்சனைப் போலவோ உள்ளவர்கள் இந்நாட்களில் இல்லையே" என்று பரிதபிக்கும் கதாநாயகனைத்தான், இந்த வாழ்க்கை வரலாறு எழுதும் பொழுது என்னால் காணமுடிந்தது. தேவனுடைய கிருபையை அலட்சியம் பண்ணுகிறவர்கள் பெருகிக் கொண்டும், பக்தர்களும், நம்பிக்கைக்குரியவர்களும் குறைந்து கொண்டும் வருகிற இந்நாட்களில் நீங்களும் நானும் நம்மையே சோதித்தறிய வேண்டியவர்களாக இருக்கிறோம். நான் விசுவாசத்திற்கு ஏற்றவாறுதான் வாழுகிறேனா? என்று. இன்று காணப்படும் அரையிறுதித் தேர்வு முறையொன்றும் அன்று கிடையாது. ஓர் ஆண்டிற்கு மூன்று மாதங்கள் மாத்திரம்தான் வகுப்புகள் நடைபெறும். ஆவணிமாதம் முதல் தேதியிலேயே (ஆகஸ்ட் மாதம் பாதியில்) வகுப்புகள் முடிந்துவிடும். இன்றைய பாடத்திட்டங்களும் படிப்பும் மாணவர்களுக்கு "அகாடமிக்" அந்தஸ்து கொடுக்கிறது. ஆனால், அது அவர்களை சுவிசேஷ வேலையிலிருந்தும், இன்னும் ஒரு படி மேலே

சொன்னால் கிறிஸ்துவின் அன்பிலிருந்தும் பிரித்து விடுகிறதோ? என்ற சந்தேகமும் இல்லாமலில்லை. இந்தியாவை சுவிசேஷ மயமாக்குவதற்கு பத்து வருட பட்டப் படிப்பை நடத்தும் குருமடங்களல்ல (Seminar) நமது தேவை, மேற்பட்டப்படிப்பு படித்தவர்களோ அல்லது ஆராய்ச்சி செய்து "கலாநிதி" (Doctrate) பட்டம் பெற்றவர்களோ அல்ல நமது தேவை. மாறாக, தேவ வசன உறுதியும், ஆத்தும பாரமும் கொண்ட சுவிசேஷகர்கள் தான், நமக்கு வேண்டும். இந்த கருத்தோடு ஒத்துப் போகாதவர்களும் இருக்கலாம். இதற்கிடையே கெ. யு. இட்டி என்ற குட்டப்பனுக்கு போதகர் கெ. இ. ஆபிரகாம் அவர்கள் கெ. ஜே. ஆபிரகாம் என்று பெயர் மாற்றினார்.

*ஆபிரகாம் தமிழ்நாட்டில் வந்து ஊழியம் செய்வது தமிழ்நாட்டிலுள்ள போதகர்களுக்கு பிடிக்கவில்லை. அவர்கள் போதகர் ஆபிரகாமை கேரளாவிற்கு திருப்பி அனுப்ப முயற்சித்தார்கள். அப்போதைய சபைகளில் முக்கியமான ஒரு நபரும் சில ஊழியக்காரரும் ஸ்ரீவைகுண்டம் வந்து போதகர் ஆபிரகாமினிடம் நீங்கள் கேரளாவிற்கு திரும்ப போகவேண்டும் என்று கூறினார்கள். அதற்கு ஆபிரகாம் "முடியாது, நான் ஒரு சிறியன் கிறிஸ்தவ சமூகத்தை சேர்ந்தவன் நாங்கள் 2000 வருடங்களுக்கு முன்னமே கிறிஸ்தவர்களானவர்கள். கர்த்தர் என்னை இங்கு அனுப்பினார். மிஷனெரியான வில்லியம் போஸ்பஸெல் எனக்கு அதிகார பத்திரமும் தந்திருக்கிறார். அப்படி இல்லையென்றாலும் நான் போகமாட்டேன் ஏனென்றால் இயேசுகிறிஸ்து தான்*

என்னை இங்கு அனுப்பினார். அந்நாட்களில் ஆபிரகாமும் குடும்பமும் பட்டினியில் இருந்தார்கள். கண்காணியாளரும் கூட வந்தவர்களும் எல்லாமே நடைபெறவில்லையென்று வருத்தத்தோடு திரும்பிச் சென்றார்கள். போகும்போது குடையை மறந்து வைத்துவிட்டுச் சென்றார். பேருந்து நிலையத்திற்கு ஐ பைசா பயணச்சீட்டு வாங்கி ஆபிரகாம் குடையுடன் சென்றார். கண்காணியாளர் புறப்படுவதற்கு தயாராக ஒரு பேருந்தில் அமர்ந்திருந்தார். ஆபிரகாம் அந்த பேருந்தில் ஏறி குடையை கொடுத்தார். திரும்பி வர பயணச்சீட்டுக்கு பணமில்லை. அப்பொழுது ஒரு சிறுபையன் வந்து "எங்க வீட்டுக்கு வந்து ஜெபித்து விட்டு போங்க" என்று கூறினான். "[illegible] ஜெபித்தால் போதுமா" என்றதற்கு "போதும்" என்று கூறினான். ஜெபித்து திரும்பும்போது வீட்டுக்காரர் பத்துரூபாய் சட்டையில் போட்டார். வீட்டிற்கு செல்வதற்கு முன்னமே அரிசியும் மிளகாயும் கருவாடு வாங்கினார். அந்த இரவு வேளையில் மனைவியும் குழந்தையும் பசியால் வாடி மயங்கிக் கிடந்தார்கள். எழுந்து சமைக்க மனைவியால் இயலவில்லை. ஆகையினால் போதகர் சமையல் செய்தார். மனைவியும் குழந்தையும் போதகரும் நன்றாய் சாப்பிட்டார்கள் பிறகு படுத்ததுதான் தெரியும் அடுத்த நாள் காலையில் தாமதமாகத்தான் எழுந்தார்கள்.

# 3

## “நான் நேசிக்கும் என் பரலோக தகப்பன் அறிவதற்கு!”

கும்பநாடு எபிரோனிலிருந்து படிப்பையும் ஊழியப் பயிற்சியையும் முடித்த ஆபிரகாம், சொந்த ஊருக்குத் திரும்பி வந்தார். அப்பொழுது இராந்நி எனும் இடத்தில் உண்டாயிருக்கும் எழுப்புதலைக் குறித்துக் கேள்விப் பட்டார். உடனே காலதாமதம் பண்ணாதபடி, வழக்கம்போல இராந்நியை நோக்கி நடக்கலானார். இராந்நியை சென்றடைந்த ஆபிரகாமுக்கு ஜெபிப்பதற்கும், ஊழியஞ் செய்வதற்கும் ஏராளமான தருணங்கள் கிடைத்தது. ஒரு வருடம் முழுவதும் ஜெபத்திலே தரித்திருந்தார். தெய்வ கிருபையில் வளர்ந்தார். சவுல் தமஸ்குவிலிருந்து நேராக அரபு நாட்டிற்குத்தான் சென்றார். அங்குள்ள ஏதோ

இடத்தில் வைத்துத்தான் அவர் புதிய ஏற்பாட்டு சபையின் போதனைகளும் கிறிஸ்தவ வாழ்க்கையின் ஆழங்களையும் அறிந்து கொண்டார். அதுவும் கர்த்தரிடத்திலிருந்து நேரடியாக பெற்றுக்கொண்டார். அப்போஸ்தலர்களுக்குக் கிடைத்த தருணங்கள் பவுலுக்கு கிடைக்காமலிருக்ககூடாது என்ற தேவ நிச்சயம் அதற்கு பின்னணியில் இருந்திருக்கலாம். அப்போஸ்தலன் ஆக வேண்டுமானால் (அனுப்பபட்டவன் என்பது தான் அந்த வார்த்தையின் பொருள்) கர்த்தரை பார்த்திருக்கவேண்டுமல்லவா. அது போலவே, இந்த ஆபிரகாமின் ஊழியத்திற்கும் மேல் கூறின ஜெபமும் எழுப்புதலும் மிகவும் பிரயோஜனமாய் அமைந்தது. இராந்தியில் நடைபெற்ற ஊழியங்கள் போதகர்

ஆபிரகாம் பிறவம் என்ற ஊரில் தங்கி ஊழியம் செய்து வந்தார். தாழ்ந்த ஜாதியில் சேர்ந்த இரண்டு போதகர்கள் வந்தார்கள். ஆபிரகாம் அவர்களை உணவிற்கு அழைத்தார். அவர்கள் போதகரோடு கூட அமர மறுத்தார்கள். கீழே அமருகிறோம் என்று சொன்னார்கள். ஆபிரகாம் சம்மதிக்கவில்லை. கூடவே அமரசெய்து உணவு பகிர்ந்தார். கிளம்பும் போது ஆபிரகாமும் அவர்களோடே புறப்பட்டு துணிக்கடைக்கு சென்று இருவருக்கும் வேட்டியும் சட்டையும் வாங்கிக் கொடுத்தார். வீட்டிலிருந்து பணமெடுக்க மறந்திருந்தார். கடைக்காரர் என்ன சொன்னார் தெரியுமா? "ஐயா நீங்க பணம் தரவேண்டாம் இது என்னுடைய பங்காக இருக்கட்டும்" என்று. தன் குறைவிலும் மற்றவர்களுக்கு கொடுக்க வேண்டும் என்கிற மனப்பான்மையையே இது காண்பிக்கிறது. இன்று வசதி வந்தும் அவர் அதே மாதிரிதான் செய்து வருகிறார்.

கெ. வி. குரியன் என்பவரின் தலைமையில் நடை பெற்றது.

## தெலுங்கு நாட்டிற்கு

போதகர். கெ. வி. குரியனின் தலைமையில் ஆந்திர மாநிலத்திற்கு சுவிசேஷப்பயணம் மேற்கொண்டனர். கர்த்தர் தந்தருளின தரிசனத்தின்படி ஐதராபாத், செக்கந்திராபாத், எனும் இடங்களில் ஊழியம் செய்தார். ஐதராபாதிலிருந்து நூறு மைல் தொலைவிலுள்ள நைஸ்ஸாம்பாதில் ஊழியம் ஆரம்பித்தது. அங்கே ஒரு சபை உருவானது. அங்கே இருக்கும்பொழுதே மற்றொரு இடத்திலும் ஊழியம் ஆரம்பித்தார். இவைகள் ஆபிரகாமை தேவன் பயன் படுத்துவதின் துவக்கமாயிருந்தது. அந்நாட்களில் மகாராஷ்ட்ராவிலுள்ள நாக்பூரிலும், நக்சல்பாரிகள் எதிர்த்த பொழுதும்கூட சில மாதங்கள் தங்கி ஊழியம் செய்தார்.

திரும்பவும் கேரளாவிற்குச் சென்று ஊழியம் செய்யவேண்டும் என்கிற கர்த்தரின் அறிவுரையை ஏற்றுக் கொண்டு, ஆபிரகாம் ரெயில் மூலமாக ஆலுவா சென்றடைந்தார். ஆலுவாயில் ஊழியம் செய்வது தேவசித்தமல்ல என்று புரிந்துகொண்டு முவ்வாற்றுபுழை எனும் இடத்திற்கு வந்தார். அதன் பக்கத்தில்தான் குந்நக்கல் எனும் சிறிய கிராமம். அங்கே ஒரு ஆலயத்தை கண்டார். சுற்றிலும் புதர்கள் வளர்ந்து காடாய்க் கிடந்தன. உள்ளே சென்றார். சுத்தம் செய்யாமல் குப்பைகள் நிறைந்து கிடக்கும் உட்புறம். ஒரு துடைப்பான் எடுத்துக் கொண்டு ஆபிரகாம் அந்த இடம் முழுவதையும் பெருக்கி சுத்தம் செய்தார். அங்கே இரண்டு கிழிந்து போன பாய்களும் கிடந்தன. அவைகளை எடுத்து தரையிலே விரித்தார். அதில்

ஒன்றில் அமர்ந்து கொண்டு ஜெபிக்க ஆரம்பித்தார். ஒரு தாயார் அறிமுகமில்லாத இந்த ஊழியக்காரருக்கு தேநீர் கொண்டு வந்து கொடுத்தார்கள். தேநீர் குடித்துவிட்டு திரும்பவும் ஜெபிக்க துவங்கினார். சில நாட்கள் சென்ற பொழுது சில சகோதரிகள் வந்து ஜெபத்தில் கலந்துக் கொண்டார்கள். இப்படியாக ஒருவர் வந்து ஜெபிப்பார் என்று தேவ தரிசனம் இருந்தது. இப்படி பல நாட்கள் சென்றது. பலரும் கூடிவர ஆரம்பித்தார்கள். பின்வாங்கிப் போனவர்களும் திரும்பி வந்தார்கள். கர்த்தர் ஆத்துமாக்களை இரட்சிப்புக்குள் கொண்டுவர ஆரம்பித்தார். சிலர் ஞானஸ்நானம் பெற்றார்கள். சிலருக்கு ஆவியின் அபிஷேகமும் உண்டாயிற்று. சிலர் ஊழியத்திற்காக ஒப்புக்கொடுத்தார்கள். ஊழியத்தை வேண்டாமென்று தள்ளி அங்கிருந்து சென்ற ஊழியக்காரரும் திரும்ப வந்து ஊழியத்தை பொறுப்பேற்றுக் கொண்டார்.

## திருச்சூர் - கூட்டால சபை ஊழியம்

ஏற்ற துணையை கிடைத்த சில நாட்களுக்குள்ளேயே கூட்டால ஸ்தலசபையின் ஊழியக்காரராக நியமிக்கப் பட்டார். குறைகளை முகதாட்சண்யமின்றி சொல்வது, சபை ஊழியத்தில் பழக்கமில்லாத ஆபிரகாமிற்கு பெரிய குறையாக இருந்தது. அதன் விளைவு என்னவாக இருந்திருக்கும் என்பது இதைப் படிப்பவர்களுக்கு தெரியுமே. நீண்ட நாட்கள் அந்தச் சபை பொறுப்பிலிருக்க ஆபிரகாமிற்கு முடியவில்லை. மேலிடத்திலிருந்து ஆணை வந்தது- இடம் மாற்றம். என்ன செய்வதென்று பாரத்தோடு ஜெபித்த பொழுது முண்டக்கயத்திற்கு செல்ல தேவனுடைய அறிவுரை உண்டாயிற்று. புத்தன்குரிசு என்னும் ஊரிலுள்ள மனைவியின் வீட்டாருக்கு இந்த செய்தியை சொல்லிவிட்டு

முண்டக்கயத்திற்கு புறப்பட்டார். காரணமறிந்த மாமனாரான புத்தன்குரிசு சாக்கோச்சன் சொன்னார் : "முண்டகக்கயத்தில் உள்ளவர்களெல்லாம் குடிப்பவர்களும், துன்மார்க்கரும், சண்டைக்காரரும் தான் தெரியாதா?" ஆபிரகாம் அதை கண்டுக்கொள்ளவில்லை. முண்டக்கயத்துக்கு செல்லும் அந்தப் பயணத்தில் கர்த்தருடைய அன்பை அவரால் ருசிபார்க்க முடிந்தது. ஆபிரகாமிடம் குறைந்த பணம்தான் இருந்தது. தலையில் சுமந்து செல்லும் அளவிற்கு வீட்டு சாமான்கள். தானே சுமந்துக்கொண்டு பேரூந்து நிலையத்திற்கு வந்தார். எர்ணாக்குளம் படகுத்துறைக்கு பேரூந்தில் சென்றார். எர்ணாக்குளத்திலிருந்து சங்ஙனாச்சேரி செல்லும் படகில் ஏறினார். ஆபிரகாமும், குடும்பமும் ஒரு சாக்குமூட்டை நிறைய வீட்டு சாமான்களும், அவ்வளவுதான். இப்பொழுதெல்லாம் சில போதகர்களுக்கு இடமாற்றம் வரும்பொழுது லாரிகள் தேவைப்படுகிறது. நிறைய பொருட்களும் இருக்கும். அந்நாட்களிலெல்லாம் அப்படியல்ல. விசுவாசிகளும்

*ஒருமுறை தூத்துக்குடி பேருந்து நிலையத்தில் வைத்து ஒரு ரவுடி ஆபிரகாமிடம் பணம் கேட்டார். யாரும் எதுவும் செய்யக்கூடியது போதகர்களிடம்தானே. ஆபிரகாமிடம் வண்டிக்கூலி மாத்திரமே இருந்தது. உண்மை அறிந்தவுடன் அவனுக்கு கோபம் வந்தது. அவன் ஆபிரகாமை அடித்தான். ஆபிரகாம் சட் என்று நகர்ந்தார். பிறகு மிதிக்க வந்தான் ஆபிரகாம் பின்னுக்கு குதித்தார் ரவுடிக்கு கால் அசைக்க முடியவில்லை. ஆபிரகாம் பேருந்தில் ஏறி பயணமானார்.*

மிகவும் எழ்மையானவர்கள் ஆதலால் அவர்களுடைய போதகர்களும் எழ்மையானவர்கள். இன்று விசுவாசிகள் ஐசுவரியவான்களாக மாறி வசதிகள் பெருகும்பொழுது அதன் பங்கும் போதகர்களுக்கு கிடைக்கும் என்பதில் சற்றும் சந்தேகமில்லை. பயணத்தின் மத்தியிலே பயணச்சீட்டு சோதனை செய்பவர் படகில் ஏறினார். ஆபிரகாமையும் அவர் வைத்திருந்த சாமான்களையும் மொத்தத்தில் ஒரு பார்வைப் பார்த்தார். "இந்த சாமான்களுக்கு சீட்டு வாங்கியிருக்கிறீர்களா?" என்று கேட்டார். "இல்லை, என்னிடத்தில் யாரும் கேட்கவில்லை" என்று பதிலளித்தார் ஆபிரகாம். இவர் ஒரு போதகர் என்பதை புரிந்துக் கொண்ட அவர் அந்நேரம் அது வழியாக வந்த ஒரு வியாபாரியிடமிருந்து வடையும், பழமும் வாங்கி ஆபிரகாமுக்கும், குடும்பத்தினருக்கும் கொடுத்தார். முன்னமே அது வாங்கவேண்டுமென்று ஆபிரகாமுக்கு ஆசையிருந்தது. பணமில்லாததினால் அவரால் அது இயலவில்லை என்பதைக் கூறத் தேவையில்லையே. சங்களாச்சேரியில் வந்துசேர்ந்த ஆபிரகாமும் குடும்பமும் முண்டக்கயம் போய்ச்சேர வேண்டுமானால் இன்னமும் முப்பத்தைந்து மைல் பயணம் செய்ய வேண்டியிருந்தது. பணமில்லையே என்னசெய்வது? அங்கேயும் தேவனுடைய வழிநடத்துதல் இருந்தது. ஆபிரகாமை முன்னமே பழக்கமுள்ள மேப்றால் ஊரை சேர்ந்த ஒரு தாயார் அங்கே வந்து ஆபிரகாமையும் குடும்பத்தையும் ஒரு உணவு விடுதிக்கு அழைத்துசென்று போதுமான உணவை வாங்கி கொடுத்து ஐந்து ரூபாயும் அளித்து விட்டு சென்றார். முண்டக்கயம் வந்தடைந்தார் ஆபிரகாம்.

ஒரு மலைமீது பாறைக் கூட்டங்களுக்கு இடையில் உள்ள ஒரு குடிசையிலே ஆபிரகாமும் குடும்பமும் தங்கினார்கள். அங்கேயிருந்து கொண்டு ஊழியம் செய்தபொழுது கர்த்தர் சில ஆத்துமாக்களை தந்தார். அங்கிருந்து ஒரு மைல் தொலைவில் வாடகையின்றி ஒரு வீடு கிடைத்தது. அநேகர் இரட்சிக்கப்பட்டார்கள், ஒரு நல்ல சபை உருவாகியது. ஆரிசன்ஸ் (பழைய மலையாளம் பளான்டேஷன்ஸ்)ன் பாய்ஸ் ரப்பர் தோட்டத்திலும் ஆபிரகாம் வாரந்தோறும் கூட்டங்கள் நடத்துவது வழக்கம். அங்கேயும் கர்த்தர் ஆத்துமாக்களை இரட்சித்தார். குற்றிக்கல் எனும் இடத்திலும் ஊழியம் ஆரம்பித்தார்.

## வாழூருக்கு

தேவதாசர்கள் ஓர் இடத்தில் மட்டும் தங்க வேண்டியவர்களல்ல. குறிப்பாக, சுவிசேஷ தரிசனமும், ஆத்தும பாரமும் உள்ளவர்கள். அவ்வண்ணம் ஆபிரகாமுக்கும் இடம் மாற வேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஐந்து ரூபாய் வாடகையில் ஒரு வீடு கிடைத்தது. ஓர் ஆண்டு வேலை செய்ததின் விளைவாக ஒரு சபை உருவானது. சுற்றிலுமுள்ள இடங்களில் ஊழியம் செய்ததினால் அநேக ஆத்துமாக்கள் இரட்சிப்படைந்து சபையிலே சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். இப்படியிருக்கையில்தான் ஆபிரகாமை திருவனந்தபுரத்திற்கு இடமாற்றம் செய்த செய்தி வந்தது. ஐந்து சென்ட் இடம் வாங்கி அங்கே கூரையாவது போட்டு கொடுக்காமல் போகக்கூடாதென்று சபை அங்கத்தினர்கள் கட்டாயப் படுத்தினார்கள். மனிதர்களிடத்தில் உதவி கேட்பதைவிட தேவனிடத்தில் சொல்வதுதான் நல்லது என்பதை புரிந்து

கொண்ட ஆபிரகாமிற்கு, கர்த்தர் ஜெபத்தை கேட்டு பதிலளிப்பவர் என்பது நன்றாக தெரியும்.

## கர்த்தருக்கு ஒரு கடிதம்

"நான் நேசிக்கும் என் பரலோக தகப்பன் அறிவதற்கு, உம்முடைய செல்லப்பிள்ளையான முண்டக்கயம் குட்டப்பன் எழுதுவது என்னவென்றால், நாங்கள் உம்மை ஆராதிப்பதற்கு ஐந்து சென்ட் இடம் வேண்டும். கொடுத்து தான் ஆகவேண்டும். இப்படிக்கு உங்கள் செல்லப்பிள்ளை குட்டப்பன்".

-கையொப்பம்

ஓர் உறை எடுத்து கடிதத்தை அதில் போட்டு மூடி அலமாரியில் வைத்து பூட்டினார். மூன்று மணி நேரம் ஜெபித்தார். பிறகு படுத்துத் தூங்கினார். மறுநாள் வழக்கம் போல் போதகர் ஆபிரகாம் நடப்பதற்காக சென்றார். ஆர்த்தடாக்ஸ் சபையை சேர்ந்தவராய் இருந்ததினாலே செய்திகளுக்கிடையே திருப்பலி பாட்டுகள் பாடுவது இவர் வழக்கம். ஆதலால் அங்கேயுள்ள பாரம்பரிய கிறிஸ்தவர்கள் போதகர் ஆபிரகாமை "அச்சன்" (பாதிரியார்) என்றுதான் அழைப்பார்கள். நடந்துச் செல்லும் ஆபிரகாமைக் கண்டு ஆர்த்தடாக்ஸ் சபையைச் சேர்ந்த ஒருவர் "அச்சோ (பாதிரியாரே) கொஞ்சம் வீட்டுக்கு வந்துவிட்டு போங்க" என்று அழைத்தார். "குஞ்ஞுச்சன் அண்ணே, ஏதாவது விசேஷமா?" என்று கேட்டதற்கு அவர் பயத்துடன் சொன்னார் "நேற்று இரவு இயேசு கிறிஸ்து என் அறைக்குள் வந்தார். "என் மகன் குட்டப்பனுக்கு நீ ஐந்து சென்ட் இடம் கொடுக்க வேண்டும்........" உடனே அந்த வீட்டு

பெண்மணி தேநீர் கொண்டு வந்து ஆபிரகாமுக்கு கொடுத்தார்கள். தேநீர் அருந்தி ஜெபித்து விட்டு அந்த வீட்டாரிடம் ஆபிரகாம் என்ன கேட்டு கொண்டார் தெரியுமா? "விசுவாச இல்லம் (Faith Home) வரையிலும் கொஞ்சம் வரவேண்டும்" என்றுதான். குஞ்ஞுச்சன் அண்ணனும் ஆபிரகாமுடன் விசுவாச இல்லம் வந்தார். வந்த உடனேயே அலமாரியின் சாவியை எடுத்து அவரிடம் கொடுத்து அலமாரியைத் திறக்கச் சொன்னார் ஆபிரகாம். அவர் அலமாரியை திறந்து அங்கே ஓர் உறையிருப்பதை கண்டார். உறை எடுத்து திறந்து பார்த்த குஞ்ஞுச்சன் அண்ணன் கடிதத்தை பார்த்தார். முந்தின நாள் குட்டப்பன் என்ற ஆபிரகாம் எழுதி வைத்திருந்த கடிதம் முகவரியோ, பரலோகத்தின் தேவனுக்கு. கடிதத்தை படித்த குஞ்ஞுச்சன்

*ஆபிரகாம் வட இந்தியாவில் ஓரிடத்திற்கு சென்றார். கையில் பணமில்லை இரவை கழித்தாக வேண்டும். நேராக காவல்நிலையத்திற்கு சென்றார் "என்ன" என்றார்கள் காவலர்கள். "இந்த இரவு நான் இங்கு தங்கவேண்டும்" என்றார் ஆபிரகாம். அதற்கான வசதிகளை செய்து கொடுத்தார்கள் அங்குள்ள காவலர்கள். இரவில் உணவும் வாங்கி கொடுத்தார்கள். பசியாற உண்டு நிம்மதியாய் உறங்கினார் ஆபிரகாம். அதிகாலை எழுந்து ஆபிரகாம் ஜெபிக்கலானார். காவலர்களும் ஆபிரகாமினருகில் வந்து முழங்காலில் நின்றார்கள். அவர்களுக்காகவும் ஜெபிக்க கூறினார்கள். ஜெபம் முடிந்து தேனீரும் வாங்கிக் கொடுத்தபின் ஆபிரகாமை வழியனுப்பினார்கள்.*

அண்ணன் ஆச்சரியத்துடன் தலைமீது கைவைத்துக் கொண்டு நின்றார். "அய்யோ, கர்த்தருக்கு கடிதமா?" கேள்வியும், ஆச்சரியமும் கலந்து அவர் அப்பொழுது நின்ற விதம் பார்ப்பதற்கு எப்படியிருந்தது தெரியுமா?. கபடற்ற விசுவாசம், உறுதியான விசுவாசம், நிறைவான விசுவாசம் இவைகள் அந்த கடிதத்தில் பிரதிபலித்தன. உடனே இடம் தருவதாக கூறிவிட்டு அந்த நபர் கடந்து சென்றார். அவர் வந்து பொன்குந்நம் எனும் இடத்தில் வைத்து கிர்யப்பத்திரம் பதிவு செய்தார். இடம் சொந்தமாகக் கிடைத்த பிறகு ஒரு நாள் ஆபிரகாம் ஒரு வெட்டுக்கத்தியும் எடுத்துக் கொண்டு அந்த இடத்திற்கு சென்றார். அங்கிருந்த புதர்களையெல்லாம் வெட்ட ஆரம்பித்தார். அதை கண்ட சில பாரம்பரிய கிறிஸ்தவர்கள் விரைந்து வந்து வெட்டுகத்தியை வாங்கினார்கள். மற்றொருவர் ஒரு நாற்காலியை கொண்டு வந்து வைத்தார். "அச்சன் இந்த நாற்காலியிலே உட்காருங்கள். நாங்கள் இதையெல்லாம் வெட்டிச் சுத்தம் பண்ணித் தருகிறோம்". அதிகமெதற்கு? அவர்கள் அந்த இடத்தை சுத்தம் செய்து அங்கே ஒரு கூரையும் போட்டுத் தந்தார்கள். கூட்டமும் ஆரம்பித்தது. உடனேயே ஆபிரகாம் தன் அடுத்த வயல்நிலமான திருவனந்தபுரத்திற்கு பயணமானார்.

திருவனந்தபுரம் சபையில் சில பிரச்சனைகள் இருப்பதாக அப்போதைய சபைகளில் செயலாளர் ஆபிரகாமிடத்தில் கூறியிருந்தார். கடைசி நாட்களின் அடையாளங்களாக அப்போஸ்தலனாகிய பவுல் தந்துள்ள பட்டியலில் இதை நாம் தெளிவாகக் காணலாம் (2 தீமோத்தேயு : 3) அதில் ஒரு கூட்டத்தார்தான்

"இணங்காதவர்கள்" தேவ அன்பை துளிகூட அவர்களிடம் நாம் காண முடியாது. அப்பேர்ப்பட்ட சிலர் திருவனந்தபுரம் சபையிலும் இருந்தார்கள். புதிய போதகராக ஆபிரகாம் சபைக்கு வந்தார், ஒரு சபை அங்கத்தினரிடம் கேட்டார். "பெயரென்ன?" அவர் மிகுந்த கௌவுரவத்தோடு பெயரை சொன்னார் "ஜோசப்பு". "ஜோசப்பு அண்ணே, உங்க வீட்டுக்கு நான் கொஞ்சம் வரணுமே" என்றார் போதகர். "எதற்காக வருகிறீர்கள்" "உங்க வீட்டிற்கு வந்து தேநீர் அருந்துவதற்கு" "தேநீர் இங்கேயே வாங்கித் தருகிறேன்". இந்த பேச்சு அடுத்த வாரமும் தொடர்ந்தது. போதகர் ஆபிரகாமின் கேள்விகளுக்கெல்லாமே இதே போன்ற பதில்தான் கிடைத்தது. மூன்றாவது வாரமும் இது தொடர்ந்தபொழுது, அந்த நபரின் மனம் மாறிற்று. சரி வீட்டிற்கு வரலாம் என்ற நிலைமைக்கு வந்து, முகவரியும், வழியும் எல்லாம் கேட்டறிந்தபின் போதகர் ஆபிரகாமும் மனைவியும் அந்த வீட்டிற்கு சென்றார்கள். "தேநீர்" - "தேநீர்

*செய்லிங்க நல்லூர் சபை ஊழியராக இருக்கும் தாமஸ் சி.எஸ்.ஐ. சபையை சேர்ந்தவர். மூளையில் ஏதோ வியாதி வந்தது. மண்டை ஓடு திறக்கப்பட்டு அறுவை சிகிச்சை செய்யப்பட வேண்டும். தாமஸ் மிகவும் துக்கப்பட்டார். போதகர் ஆபிரகாமின் ஜெபக்கூட்டத்திற்கு ஒருமுறை வந்தார். வியாதியை குறித்து யாரிடமும் கூறவில்லை. போதகர் ஆபிரகாம் ஆவியில் நிறைந்து "உன் தலையிலுள்ள வியாதியை கர்த்தர் குணமாக்கிவிட்டார்" என்று கூறினார். உடனே தலைவலி குணமாகிவிட்டது. பிறகு அறுவை சிகிச்சை செய்யவில்லை.*

பிறகு குடிக்கலாம்". ஒரு பாட்டை பாடி ஜெபித்தார்கள். ஜெபித்தபின் போதகர் ஆபிரகாம் வீட்டாரிடம் கேட்டார். "ஜோசப் அண்ணே உங்கள் சமையலறை கதவண்டை எல்லா செவ்வாய்க்கிழமையும் வெள்ளிக்கிழமையும் ஏதோ துர்நாற்றம் எடுப்பதுண்டா?" ஆமாம் என்றுபதில் வந்தது. இன்னும் ஒரே ஒரு கேள்வி, "செவ்வாயும், வெள்ளியும் உங்கள் இரண்டு பேரையும் சாத்தான் உபத்திரவம் பண்ணுவதுண்டா?. (கழுத்தை நெரித்து வயிற்றில் இடிப்பது போல்) அதற்கும் ஆம் என்று பதில் சொல்லிவிட்டு அந்த மனிதர், வாலிபரான போதகரின் காலைப் பிடித்து அழ ஆரம்பித்தார். "இனிமேல் அப்படியெல்லாம் நடக்காது, உன் கால் வைக்குமிட மெல்லாம் ஆசீர்வதிக்கப்படும் என்று வசனம் சொல்கிறது" என்று சொல்லிவிட்டு போதகர் ஆபிரகாம் அங்கிருந்து சென்றுவிட்டார். திருவனந்தபுரத்தில் நான்கு வருடம் தங்கி ஊழியம் செய்தபோது சபை வளர்ந்தது. ஆத்துமாக்களும் இரட்சிக்கப்பட்டார்கள்.

திருவனந்தபுரத்திலிருந்து ஆபிரகாமிற்கு பிறவம் என்ற ஊருக்கு இடமாற்றம் கிடைத்தது. அங்கேயும் நான்கு ஆண்டுகள் ஊழியம் செய்தார். ஊழியம் பல இடங்களுக்குப் பரவியது. சகோதரிகளின் வீடு சந்திக்கும் ஊழியத்தின் போது நடந்த ஒரு சம்பவத்தை எழுதலாம். யாக்கோபாய சபையை சார்ந்த ஒருவருடைய இல்லத்திற்கு சகோதரிகள் சுவிசேஷம் சொல்லச் சென்றார்கள். ஜெபிக்கட்டுமா என்று கேட்டதற்கு வேண்டாமென்று சொன்னார்கள். அடுத்த வாரமும் சென்றார்கள், அப்பொழுதும் ஜெபிக்க வேண்டாம் என்று விலக்கினார்கள். சோர்ந்து போகாமல் மூன்றாவது

முறையும் சென்றபொழுது ஜெபிக்க அனுமதித்தார்கள். அடுத்து வரும் ஞாயிற்று கிழமை அவர்களுடைய வீட்டில் ஒரு ஜெபக்கூட்டம் வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். ஞாயிற்றுக் கிழமை மாலையிலே போதகர் ஆபிரகாமும் சபையாரும் அங்கே ஜெபிப் பதற்காகக் கூடிவந்தார்கள். அந்த வீட்டுக்காரரின் மகனுக்கு சற்று எதிர்ப்பு இருந்தது. ஆனால், கூட்டத்திற்கு பிறகு அடுத்த ஞாயிற்றுக்கிழமை சபைக்கு வந்தான் கர்த்தரை இரட்சகராக ஏற்றுக்கொண்டு ஞானஸ்நானமும் பெற்றான்.

*சக்காரக்குடியில் உள்ள ஒரு குடும்பம் ஒருநாள் ஜெபக்கூட்டத்திற்கு வரவில்லை. ஆபிரகாம் அவர்களை தேடிச் சென்றார். அடுத்தமுறை வருகிறோம் என்று சொல்லி ஆபிரகாமை திருப்பி அனுப்பினார்கள். அடுத்தமுறையும் வரவில்லை. ஆபிரகாம் திரும்பவும் சென்றார். என்ன? "நாங்கள் ஒன்றும் சிறுகுழந்தைகள் அல்ல, உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் நாங்கள் அடுத்த முறை வருகிறோம்" என்றார்கள். அடுத்தமுறையும் வரவில்லை. ஆபிரகாம் அங்கு சென்றவுடனே அந்த வீட்டுக்காரியம்மாவுக்கு அதிக கோபமுண்டாயிற்று. "இனிமேல் இங்கு வரக்கூடாது" என்று கட்டளையிட்டார்கள். ஆபிரகாம் மிகவும் துக்கப்பட்டார். "ஏன் இந்த பெண்மணி இவ்வாறு பேசுகிறார்கள்?" போதகருக்கு ஒன்றும் புரியவில்லை.*

மிகுந்த சங்கடத்துடன் "இனிமேல் நீ என் முகத்தை காணமாட்டாய்" என்று கூறிவிட்டு சென்றார். பயந்து போன கணவர் வந்து ஆபிரகாமின் காலைப் பிடித்தார் ஐயா ஜெபித்துவிட்டு போங்கள் என்றார். பேருந்தில் அமர்ந்திருந்த ஆபிரகாம் தேம்பி தேம்பி அழுதார். நடத்துனர் வந்து பயணச்சீட்டை வாங்க சொன்னார். ஆனால் அதொன்றும் அவருடைய காதில் விழவில்லை. பயணச்சீட்டு சோதனை செய்பவர்கள் வண்டியில் ஏறினார்கள். "ஒருவர் சீட்டு வாங்கவில்லை அழுது கொண்டேயிருக்கிறார்" என்று சொல்லி நடத்துனர் ஒரு சீட்டை கிழித்து ஆபிரகாமின் சட்டை பையில் போட்டார். சில நாட்களுக்குள்ளேயே வேண்டாத அடம்பிடித்த அந்த பெண்மணி கொடும் வியாதியினால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்கள். வியாதி அதிகமானதினால் மரணத்தை எதிர் நோக்கியிருந்த அவர்களுக்கு பயமும் மனந்திரும்புதலும் உண்டாயிற்று. ஆபிரகாமை அழைத்துவரும்படி ஆளனுப்பினார்கள். மூன்றுமுறை அனுப்பின போதும் ஆபிரகாம் வெளியே சென்றிருந்தார். அவ்வாறு ஆபிரகாமின் முகத்தை காணாமலேயே இறந்து விட்டார்கள். இறப்பதற்கு முன்னே அவர்கள் இவ்வாறு கூறினார்கள் "கர்த்தருடைய ஊழியக்காரர்களை நோகடிக்கக் கூடாது".

# 4

## "ஆவடியப்பனும் கறுப்பு நாயும்"

### தமிழ் நாட்டிற்கு.....

கேரளாவின் அண்டை மாநிலங்கள் இரண்டு. முக்கியமாக தமிழ்நாடு, பிறகு கர்நாடகம். அனுதின வாழ்க்கையில் தமிழ்நாட்டிற்கு பெரிய பங்கிருக்கிறது. அரிசி, காய்கறிகள், பழங்கள், இறைச்சி, முட்டை துவங்கி பூக்கள் வரையிலும் தமிழ்நாட்டிலிருந்து வருகிறது. அந்த இடத்திற்குதான் ஆபிரகாம் கிறிஸ்துவின் நிந்தையைச் சுமந்துகொண்டு செல்கிறார். போதகர் ஆபிரகாமும் மனைவியும் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ஸ்ரீ வைகுண்டம் என்ற இடத்திற்கு 1967 ஆம் ஆண்டு மே மாதத்தில் வந்து சேர்ந்தார்கள்.

மகன் பிறவம் என்ற இடத்தில் ஒரு விசுவாசியின் வீட்டில் தங்கி படித்துக்கொண்டிருக்கிறான். அவன் பெயர் ஐய்ப்பு. மொழி தெரியாத ஆபிரகாமும் மனைவியும் ஸ்ரீவைகுண்டத்தில் ஒரு வாடகை வீட்டில் தங்கி ஊழியம் செய்ய ஆரம்பித்தார்கள். முளக்குழ சபையிலிருந்து மாதம் ஐம்பது ரூபாய் கொடுப்பார்கள். கேரளாவில் படித்துக் கொண்டிருக்கும் மகனுக்கு பள்ளிக்கட்டணம் செலுத்த வேண்டும். வீட்டிற்கு வாடகை முப்பது ரூபாய், மின்சாரத்திற்கு ஐந்து ரூபாய். மீதி பணத்தை வைத்துக் கொண்டு உணவும் மற்ற செலவுகளும் பார்த்துக்கொள்ள வேண்டும்.

ஆபிரகாம் ஞானஸ்நானம் எடுத்ததைத் தொடர்ந்து நடந்த சம்பவம்: ஆபிரகாமை வீட்டைவிட்டு விரட்டினார்கள். அந்த நேரத்தில் மக்கள் தொகை கணக்கெடுப்பவர் அங்கு வந்தார். வந்த அலுவலரை ஆபிரகாமுக்கு முன்னமே அறிமுகமுள்ளவர். பிள்ளைகளை பற்றி உதுப்பு இவ்வாறு கூறினார்: "மூத்தமகள் திருமண மானவள், இரண்டாவது மகன் இராணுவத்தில் கமாண்டர், அடுத்தவன் பிச்சைக்காரன்". "ஏனய்யா இப்படி சொல்கிறீர்கள்?" என்று கேட்டார். "நீங்க எழுதுங்க, அவன் பிச்சைக்காரன்தான். சொன்னதை எழுதினார் போதாதா........" என்றார் தகப்பனார். "அப்பொழுது அம்மா அவன் பெந்தெகொஸ்தேயில் சேர்ந்து ஊழியம் செய்கிறான் ஆதலால் தான் அவ்வாறு கூறினார்" என்று சொன்னார்கள். உடனே அந்த அதிகாரி எழுதினார் இரண்டாவது மகன் - தேவ ஊழியர்.

இந்த வீட்டில் பிசாசின் உபத்திரவம் இருந்தது. நாகர் கோவிலை சேர்ந்த ஒருவர் இதற்கு முன் அங்கே தங்கியிருந்தார். இரவில் படுத்து தூங்கிக் கொண்டிருந்த அவருடைய வயிற்றில் பிசாசு மிதித்தது. அங்கேயே மலமும், சிறுநீரும் வெளியாயிற்று. அடுத்த நாளே அவர் நாகர்கோவிலுக்கு திரும்பச் சென்றுவிட்டார். வீட்டுக் காரரும் மனைவியும் தெலுங்கு மொழி பேசுகிறவர்கள். அவர் இந்த உபத்திரவத்தை குறித்து ஆபிரகாமினிடம் முன்னமே அறிவித்திருந்தபோதும்கூட அவர் அதைப் பொருட் படுத்தவில்லை. "உலகத்திலிருப்பவனை விட பெரிய வரான கர்த்தர் கூட இருப்பதால் எதற்கு பயப்பட வேண்டும்?". மறுநாளில் எந்த தீங்குமில்லாமல் ஆபிரகாமையும் குடும்பத்தையும் கண்ட அந்த வீட்டுக்காரர் மிகவும் ஆச்சரியப்பட்டார். ஆபிரகாம் வெறும் சாதாரண மனிதனல்ல என்று அவர்களுக்கு புரிந்தது. நான்காண்டுகள் அந்த வீட்டில் தங்கிக் கொண்டு போதகர் ஆபிரகாம் ஊழியம் செய்தார். கர்த்தர் ஆத்துமாக்களை இரட்சித்துக் கொண்டிருந்தார்.

## ஆவடியப்பனும் கறுப்பு நாயும்

ஆவடியப்பன் என்பவர் ஒரு பேருந்து நடத்துனர். அவர்தான் முதலாவது இரட்சிக்கப்பட்டார். கறுப்பு நிறமான ஒரு நாய் தினமும் அவருடைய வீட்டிற்கு வருமாம் வெளியே நின்று கொண்டு வீட்டைப்பார்த்து குரைக்குமாம். வீட்டில் இருப்பவர்கள் வெளியே சென்றால் அது வீட்டிற்குள் சென்று குரைக்கும். இதனால் அந்த வீட்டார் மிகவும் விசனமடைந்தார்கள். இது பிசாசின் உபத்திரவமல்லாமல் வேறு என்னவாக இருக்க முடியும்? ஆவடியப்பனும் மனைவியும் வந்து ஆபிரகாமிடம் இந்தச்

சங்கடமான நிலைமையை அறிவித்தார்கள். ஆபிரகாமும் மனைவியுமாக அந்த வீட்டிற்கு வந்தார்கள். இவர்கள் அங்கே வந்தவுடன் அந்த கறுப்பு நாய் எங்கிருந்தோ ஓடி வீட்டிற்குள் வந்து குரைக்க ஆரம்பித்தது. ஆபிரகாம், பரலோகத்திலேயும், பூமியிலேயும் சகல அதிகாரமுமுள்ள கர்த்தரின் நாமத்தில் அந்த நாயை கடிந்து கொண்டார். உடனே அந்த நாய் ஓடி வெளியே சென்றது. அப்பொழுது ஆபிரகாம் அந்த வீட்டாரிடம் சொன்னார் “இனிமேல் ஒருபொழுதும் அந்த நாய் இங்கே வராது”. அதற்குபின் அந்த நாயை அவர்கள் கண்டதே இல்லை. ஆவடியப்பனும், மனைவியும் ஆச்சரியப்பட்டார்கள். அவர்கள் ஆபிரகாமினிடம் கேட்டார்கள் “என்ன மந்திரம் செய்தீர்கள்?” ஆபிரகாம் சொன்னார்: “இயேசுவைத்தான் நாங்கள் ஆராதிக்கிறோம். இயேசுவின் நாமம் மற்றெல்லாவற்றையும் விட மேலான நாமம். இயேசுவின் நாமத்தில் பேய்கள் பயந்தோடும்” இந்த அற்புதம் ஆவடியப்பனும் மனைவியும் கர்த்தரை இரட்சகராக ஏற்றுக்கொள்வதற்கு ஏதுவாயிற்று. ஆபிரகாம் அவர்கள் இருவருக்கும் புதிய பெயர் வைத்தார் ஆபேல், மேரி. இந்த நிகழ்ச்சியினால் ஏராளமான மக்கள் சபைக்கு வர ஆரம்பித்தார்கள். சபைக்கூட்டத்திற்கு பிறகு, வந்த எல்லோருக்கும் ஆபிரகாம் உணவு கொடுப்பது வழக்கம். ஒவ்வொரு மாதமும் இரண்டாவது வாரம் (வெள்ளி, சனி, ஞாயிறு) உபவாச ஜெபமுண்டு. பல இடங்களிலிருந்தும் ஜனங்கள் வருவார்கள். ஒருவருடைய மார்புப் பகுதியில் இருந்த தொழுநோய், ஆபிரகாம் எண்ணைப்பூசி ஜெபித்தபொழுது குணமடைந்தது. சரீரமெல்லாம் வெள்ளைநிறமாக மாறி (வெண்குஷ்டம் என்று சொல்வார்கள்) பார்ப்பதற்கு விரூபமான ஒரு நபர் இருந்தார். அவர் ஒரு ஆசிரியர் அந்த மனிதர்

ஜெபிப்பதற்காக வந்தார். ஆனால், ஆபிரகாம் வெளியே சென்றிருந்தார். அதனால் அவருடைய மனைவி அந்த ஆசிரியருக்காக ஜெபித்தார். கர்த்தர் அந்த நோயாளியை குணமாக்கினார். தோல் முழுவதும் பழைய நிலைமையில் ஆயிற்று! பள்ளிக்கு சென்றபொழுது சக ஆசிரியர்களும், மற்றவர்களும் ஆச்சரியத்துடன் இது எப்படி நடந்தது என்று கேட்டார்கள். அந்த நபர் நடந்ததையெல்லாம் விவரித்து சொன்னார். இதன் விளைவாக கூட்டங்களுக்கு இன்னமும் நிறைய பேர் வர ஆரம்பித்தார்கள்.

*ஆபிரகாம் வாழூர் என்ற கிராமத்தில் ஊழியம் செய்து கொண்டிருந்தார். ஒரு ஊழியக்காரர் ஆபிரகாமின் வீட்டிற்கு வந்தார். ஊழியக்காரருக்கு பயங்கரமான பசி. ஆபிரகாம் உடனே மரவள்ளிக்கிழங்கை அவித்தார். கருவாடை அடுப்பில் போட்டு சுட்டெடுத்தார். பச்சைமிளகாயும் சாம்பார் வெங்காயமும் சேர்த்து துவையல் உண்டாக்கினார். ஆபிரகாமும் பசியோடு வந்த ஊழியக்காரரும் பசியாற சாப்பிட்டார்கள். பல வருடங்களுக்கு பிறகு ஆபிரகாம் அமெரிக்கா சென்றார். ஒரு வீட்டார் ஆபிரகாமை விருந்துக்கு அழைத்தார்கள். அங்கு சென்றபொழுது பசியுடன் வந்த பழைய ஊழியக்காரரும் அங்கிருந்தார். சாப்பிட ஆரம்பித்தவுடன் ஊழியக்காரர் கத்தியும் முள்கரண்டியும் இல்லையா என்று கேட்டார். ஆபிரகாம் விடுவாரா? "அந்த காலத்தில் அவித்த மரவள்ளிக்கிழங்கும் கருவாடும் மிளகாயும் சேர்ந்த துவையலை சாப்பிட கத்தியும் முள்கரண்டியும் தேவைப்படலயே என்றார். முகம் மாறிப்போன ஊழியக்காரர் சொன்னார் "இந்த முண்டக்கயத்து நபர் பெரிய ஆளுதான்".*

ஸ்மித் விக்கிள்ஸ்வொர்த் (Smith Wigglesworth) என்ற பிரசித்திபெற்ற தேவனுடைய தாசனைக்குறித்து அவருடைய நண்பர் (The Secret of His Power by Albert Hibbert) எழுதினதை வாசித்தார். ஸ்மித்தின் மனைவியை சேர்த்து பதினாலு பேரை உயிரோடெழுப்பினதாக அவர் அதில் குறிப்பிட்டிருந்தார். படுத்து தூங்குபவர்களை எழுப்புவது போல்தான் ஸ்மித் அந்த ஊழியங்களை செய்தார். ஸ்மித் கூறி வந்த மிக முக்கியமான ஒரு காரியம் கீழே குறிப்பிடுகிறேன். "தேவன் மனிதனிடத்திலிருந்து விரும்புவதெல்லாம் விசுவாசமும் பரிசுத்தமும்தான். அவைகள் இரண்டும் இருக்குமானால் எல்லாமே சரியாகிவிடும்".

ஒரு முறை விதவையான ஒரு சகோதரி ஆபிரகாமினிடம் வந்து அரிசி (Ration) வாங்குவதற்கு தன்னிடத்தில் பணமில்லையென்று கூறினார்கள். பணம் தருவதற்கு ஆபிரகாம் முயன்றபொழுது அவர்கள் அதைப் பெற்றுக்கொள்ளவில்லை. ஜெபித்தால் போதும் என்று சொன்னார்கள். போதகர். கெ. ஜே. ஆபிரகாம் மூலமாகத் தான் நான் விக்கிரங்களை விட்டு ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொண்டேன். அதனால் போதகர் ஜெபித்தால் இயேசு கேட்டு பதிலளிப்பார் என்று அவர்கள் பதிலளித்தார்கள். இன்று அந்த குடும்பத்திலிருந்து மாதம் இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாய் தசமபாகமாக கிடைத்துக் கொண்டிருக்கிறது. இயேசு கொண்டு வந்த மாற்றம் ஆச்சரியகரமானது. இந்தச் சபை அங்கத்தினர்களைப்போல் தேவனுக்குக் கொடுக்க விருப்பமுள்ளவர்கள் வேறொருவருமில்லை. முப்பத்தியாறு ஆண்டுகளாக ஆபிரகாம் இந்தச் சபையில் ஊழியம் செய்துவருகிறார்.

இன்று வரையிலும் தசமபாகத்தை குறித்தோ அல்லது கொடுப்பதைக் குறித்தோ அவர் செய்தியளித்ததேயில்லை. நாம் கர்த்தருக்காக எவ்வாறு கொடுக்கிறோம் என்பதை இங்கு சற்று சிந்திக்க வேண்டியிருக்கிறது. புதிய ஏற்பாட்டு விசுவாசி கொடுக்க வேண்டியது தசமபாகமல்ல. குறைந்தது தசமபாகமாவது கொடுக்க வேண்டும். பரிசேயர்களையும், சதுசேயர்களையும் விட கிறிஸ்தவர்கள் அதிகமாகக் கொடுக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். கிறிஸ்துவினிடத்தில் நாம் வைத்திருக்கும் அன்பும், சுவிசேஷ ஊழியங்களில் நமக்குள்ள விருப்பமும் இவ்வாறு கொடுப்பதற்கு பின்னால் நமது மனப்பான்மையாக அமைய வேண்டும். வசனம் கற்றுக்கொள்பவர்கள் கற்பிக்கிறவர் களுக்கு எல்லாவற்றிலேயும் பங்களிக்க வேண்டும். சபையின் ஊழியக்காரர் (போதகர்) நல்ல ஆசிரியராகவும் இருக்க வேண்டுமென்று தீமோத்தேயு மற்றும் தீத்துவின் நிருபங்களில் பார்க்கிறோம். அப்படியானால் வசனம் கற்பிக்கும் போதகர் தசமபாகத்திற்கும் மற்ற பண உதவிகளுக்கும் தகுதியுள்ளவரா என்று சிந்திக்க வேண்டும். போதனைகளில் ஆரம்ப பாடங்கள் கூட கற்பிக்காத, மற்றும் கற்பிக்கத் தெரியாதவர்கள் இவ்வாறு சபை நடத்துகிறது எந்த அளவுக்குச் சரி என்று புரியவில்லை. “நன்றாக ஊழியம் செய்யும் மூப்பர்களை (போதகர்களை) இரட்டிப்பான கனத்திற்கு பாத்திரர் என்று எண்ண வேண்டும்” என்பது, இரண்டு மடங்கு சம்பளம் என்பது தான் சரியான மொழியாக்கம். ஆகையினால்தான் பலரும் “என்னை” கனம் பண்ணினார்கள், கனம் செய்யவில்லை என்றெல்லாம் கூறிவருவது. பழைய ஏற்பாட்டில் தசமபாகம் முழுவதும் ஆலயத்திற்கு கொண்டு வரவேண்டும் என்கிற

அறிவுரை இருந்தது. புதிய ஏற்ப்பாட்டில் விசுவாசிகள்தான் ஆலயமும் ஆசாரியர்களும். தசமபாகம் மேலே கூறினது போல நல்ல போதகர்கள் சுவிசேஷகர்கள் போன்றவர்களின் உரிமையாய் இருக்கிறது.

கொடுப்பவர்களை குறித்தும் சில காரியங்களை எழுதாமலிருக்க இயலவில்லை. ஒரு சிலர் சற்றும் கொடுக்காதவர்கள். ஒரு வேளை கர்த்தராகிய இயேசுவே நேரடியாக வந்து சொன்னால் கொடுப்பார்கள் என நினைக்கிறேன். ஒரு சிலர் மாத்திரம் தாராளமாக கொடுக்கிறார்கள். கொடுக்காதவர்கள் சற்றும் கொடாம லிருப்பதினால் கர்த்தருடைய வேலை தடைபெறுமா என்ன? எவரும் ஒன்றும் கொடாவிட்டாலும் கர்த்தருடைய வேலை தடையின்றி நடைபெறும். ஆனால் தங்களுக்கு கிடைக்கவேண்டிய ஆசீர்வாதங்களும், பலன்களும் கொடாதவர்கள் இழந்துவிடுகிறார்கள் அவ்வளவுதான். அதிகமான பணஆசை பிடித்தவர்களுமுண்டு. சொத்துக்கள் அனைத்தும் ஒரு நாளிலே விட்டுவிட்டுப் போக வேண்டியது வரும் என்பதெல்லாம் அவர்களுக்கு தெரியும்.

சமீபத்தில் நடந்த இன்னும் ஒரு நிகழ்ச்சியைகூட எழுதிவிட்டு இந்தப் பகுதியை முடித்து விடுகிறேன். பிராமண சமுதாயத்தை சேர்ந்த ஒரு வாலிபப் பெண். மேல்நிலைப்பள்ளி ஆசிரியையாக வேலை பார்க்கிறாள். அவள் தெய்வத்தை குறித்து சிந்திக்க துவங்கினாள். உண்மையான தெய்வம் எது? முப்பத்தி முக்கோடி தேவர்கள் நமக்கிருக்கிறார்கள். கிறிஸ்தவர்களுக்கு ஒரே தெய்வம்தான் உண்டு. இவர்களில் யார் உண்மையான தெய்வம்?. திடீரென ஒரு சத்தம் கேட்டது. “இயேசுவே

உண்மையான தேவன், கெ. ஜெ. ஆபிரகாமிடம் கேட்டால் இயேசுவைக் குறித்து சொல்வார்" பலரிடத்திலும் சென்று கெ. ஜெ. ஆபிரகாமைக்குறித்துக் கேட்டாள். ஒருவர் சொல்லிக் கொடுத்தார். அதன்படி அவள் ஆபிரகாமிடம் வந்தாள். தாழ்மையோடு தனக்குண்டான அனுபவங்களை தெரிவித்தாள். ஆபிரகாம் அவர்களிடம் கர்த்தரை குறித்த சுவிசேஷம் அறிவித்தார். அவள் கர்த்தரை இரட்சகராக ஏற்றுக்கொண்டு ஞானஸ்நானம் பெற்றாள். உண்மையுடன் சபை அங்கத்தினராக தொடருகிறாள்.

*வியாதியஸ்தர் மேல் கைகளை வைத்தால் அவர்கள் சுகமடைவார்கள் என்று கர்த்தருடைய வசனம் கூறுகிற தல்லவா. ஆபிரகாம் அதற்கேற்பதான் ஊழியம் செய்கிறார். கூட்டம் முடிந்தவுடன் எல்லோரும் வந்து முழங்கால்படியிடுவார்கள். ஆபிரகாம் அவர்கள் மேல் கைகளை வைத்து ஆசீர்வதித்து அனுப்புவார் அவ்வளவுதான். அதற்குமேல் நேரமுமிருக்காது. இவ்வாறாக தலையில் கைவைத்தவுடன் குணமானவர் களுமுண்டு. தலைக்குள்ளே கட்டி (Tumor) வந்த ஒரு பெண்மணி மருத்துவமனைகளுக்கெல்லாம் சென்று வந்தாள் எந்த பயனும் கிட்டவில்லை. கிறிஸ்தவர்களின் கடவுள் சுகமளிப்பார் என்று யாரோ சொல்லி கேள்விப்பட்டார்கள். அவர்கள் போதகர் ஆபிரகாமிடம் வந்தார்கள். கைவைத்த உடனேயே எதோ வல்லமை தலைக்குள்ளே இறங்குவதை போல அவர்கள் உணர்ந் தார்கள். உடனே குணமடைந்தார்கள். மற்றவர்கள் மீதெல்லாம் கைவைத்து முடிந்தவுடன் ஆபிரகாமிடம்*

கூறினார்கள் "அந்த கையை கொஞ்சம் காட்டுங்கள், நீங்க கையை வைத்தவுடன் ஏதோ வல்லமை இறங்கியது. கையில் ஏதாவது தடவியுள்ளீர்களா என்று பார்ப்பதற்கு தான்".

Pastor K.J. Abraham attending the General Convention of Church of God in India

Pastor K.J. Abraham praying for graduating students of Church of God Bible College

Pastor K.J. Abraham at the Pastors' fasting prayer meeting at Srivaikundam

Believers attending the fasting prayer meeting at Srivaikundam



Pastor K.J. Abraham's son
Yoosaf Abraham, His wife and children

Pastor K.J. Abraham's son Yoosaf Abraham purchased this Tata Sumo
and gave to his father for the ministry Bro. Caleb is the driver standing nearby

# 5

## "எல்லைகள் பெரிதாகிறது"

ஸ்ரீவைகுண்டத்திலிருந்து பதினேழு கி. மீ. தொலைவில் நாஸரேத் என்னும் ஓர் ஊர் இருக்கிறது. இது ஆங்கிலேயர்களால் வழங்கப்பட்ட பெயர். தென் இந்திய திருச்சபையை சேர்ந்தவர்கள் அங்கே அதிகம். ஒரு ஞாயிற்றுக்கிழமை அந்த ஊரை சேர்ந்த ஓர் நாடார் (அவர் இந்து சமயத்தை சேர்ந்தவர்) ஸ்ரீ வைகுண்டம் சபைக்கு வந்தார். "உண்மையான கடவுள் யாரென்பதை நீ தெரிந்துக் கொள்ள வேண்டுமானால் நீ ஸ்ரீவைகுண்டம் செல், அங்கே ஒரு கர்த்தருடைய ஊழியக்காரர் உன்னோடு பேசுவார்" என்று அவருக்கு ஒரு தரிசனம் கிடைத்ததால்தான் அவர் வந்தார். சபையில் ஆபிரகாம் தேவ செய்தி அளிக்கும் வேளையில் இவ்வாறு சொன்னார் : "முதல் முறையாக இன்று வந்தவர்கள் எழுந்து நின்று வந்ததின் காரணம் என்ன

என்பதை சொல்லுங்கள்" அப்பொழுது அவர் எழுந்து நின்று இவ்வாறு சொன்னார். "நான் நாசரேத்தில் ஒரு தொழிற்சாலையில் வேலை பார்க்கிறேன். தெய்வம் என்னோடு பேசினதற்கு கீழ்படிந்து இங்கு வந்தேன்." அவர் அன்று இரட்சிக்கப்பட்டார், பிறகு ஞானஸ்நானம் எடுத்தார், அபிஷேகம் பெற்றார் அவர் இப்பொழுது நாசரேத்து சபையின் ஊழியக்காரராயிருக்கிறார். அவர் அன்று இரட்சிக்கப்பட்டதின் விளைவாக நாசரேத்தில் ஓர் ஊழியம் துவங்கியது. இன்று அங்கே ஒரு நல்ல சபை இருக்கிறது. சுவிசேஷ வேலையை தடை செய்பவர்களும், அதற்கு எதிராக சட்டங்களை இயற்றுபவர்களும் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். கர்த்தருடைய ஊழியங்களை எப்படியெல்லாம் முடக்கினாலும் அவருடைய ஊழியங்கள் நடைபெறும். இயேசுகிறிஸ்துவை பாரெல்லாம் அறிந்து கொள்ள வேண்டும் என்று இருக்கிறார்களோ அவர்கள் அறிந்துக்கொள்ளவும் செய்வார்கள். வரலாறு அதுதான்

கர்த்தர் ஆபிரகாம் மூலம் ஐந்து புஸ்தகங்கள் வெளிவர உதவி செய்திருக்கிறார்.

★ அஸ்திபார உபதேசங்கள்
★ சாத்தான்
★ எகிப்திலிருந்து கானான் வரை
★ லேவியராகம வியாக்கியானம்
★ தெய்வீக சுகம்

எல்லா நூல்களும் இதுவரையில் ஆயிரக்கணக்கில் விற்கப்பட்டிருக்கிறது. விலையும் குறைவுதான்.

நமக்குச் சொல்கிறது. இஸ்லாமிய சமுதாயத்திலிருந்து சத்திய மார்க்கமான கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொண்டவர்கள் வசனத்தை கேட்டு விசுவாசித்தவர்கள் அல்ல. ஆரம்பத்திலே தரிசனங்களும் அற்புதங்களும் கண்டுதான் பிறகு வசனத்திற்கும் அதன்பின் விசுவாசத்திற்கும் வழிநடத்தப்பட்டார்கள். புகழ்ப்பெற்ற பேச்சாளரும் சிந்தனையாளருமான ரவி சக்கரியா இதைச் சாட்சியாக கூறுகிறார். பாகிஸ்தானிலுள்ள குல்ஷான் பாத்திமா என்னும் பிரமுக பெண்மணியின் அனுபவம் எனக்கு நினைவுக்கு வருகிறது. பெங்களூரிலுள்ள ஜாண் மாத்யூ என்பவர் நமது உள்ளங்களை உணர்வடைய செய்யுமளவிற்கு மொழி பெயர்த்திருக்கும் அந்த அம்மையாரின் அனுவபங்களை வாசித்துப் பார்ப்போமானால் ஆண்டவரின் இரட்சணிய நிகழ்ச்சியானது எவ்வளவு பெரிதும் மகத்துவமுமானது என்பதை நாம் புரிந்துக் கொள்ள முடியும்.

கர்த்தர் போதகர் ஆபிரகாமை வெவ்வேறு விதங்களில் பயன்படுத்தினார். தென்னிந்திய திருச்சபையைச் சேர்ந்த ஒருவர் மரணத்தருவாயில் மருத்துவமனையிலே இருந்தார். ஆபிரகாம் மருத்துவ மனைக்குச் சென்று அவரை பார்த்தார். அவர் ஏற்கெனவே இரட்சிக்கப்பட்டவர். போதகர் ஆபிரகாமை கண்டவுடன் இரு கைகளையும் கூப்பி அவர் இவ்வாறு சொன்னார். "போதும் இதற்கு மேல் என்னால் தாங்கமுடியாது, சீக்கிரமாக உயிர் பிரிந்தால் போதும்". ஆபிரகாம் ஜெபித்தப் பிறகு "நாளை அதிகாலை மூன்று மணிக்கு நீங்கள் பரலோகத்திற்கு செல்வீர்கள்" என்று சொன்னார். அவர் சொன்னதைப் போலவே மறுநாள் அதிகாலை மூன்று மணிக்கு உயிர் பிரிந்தது! மருத்துவமனையிலிருந்து திரும்பி வரும்போது ஒரு வீட்டைப் பார்த்தார் ஆபிரகாம் அந்த வீட்டைக் கவனித்துக்

[illegible]

அந்த வீட்டிற்கு சென்று விசாரித்தார்கள். அந்த வீட்டார் மிகுந்த ஆச்சரியத்துடனே "இவையெல்லாம் உங்களுக்கு யார் சொன்னார்கள்" என்று கேட்டார்கள். [illegible] போதகர் சொன்னதாக அறிவித்தார்கள். ஆச்சரியத்தினால் திகைத்துப்போன அந்த வீட்டார் உடனே ஒரு ஜீப்பில் ஏறி ஸ்ரீவைகுண்டம் வந்தார்கள். போதகர் [illegible] அவர்களுக்காக ஜெபித்தார். அதற்குப்பின் ஒருபோதும் இப்பேற்பட்ட பிசாசின் உபத்திரவங்கள் அவர்களுக்கு உண்டாகவில்லை. அந்த வீட்டார் அனைவரும் இரட்சிப்

பட்டார்கள். அவர்கள் ஞானஸ்நானம் பெற்று நாசரேத்து சபையின் அங்கத்தினர்கள் ஆனார்கள். அதை தொடர்ந்து இந்து மதத்தை சேர்ந்த பலரும் இரட்சிக்கப்பட்டு ஞானஸ்நானம் பெற்றார்கள்.

*போதகர் கெ. இ. ஆபிரகாமிற்கு விரோதமாக சிலர் எழும்பினார்கள். அய்யாவை குறித்ததான குற்றச் சாட்டுகளை துண்டு பிரதிகளில் அச்சடித்து விநியோகம் செய்தார்கள். நம் கதாபாத்திரத்திடமும் ஒரு கைபிரதி கிடைத்தது. வாசித்துப் பார்த்தார் தார்மீக கோபங்கொண்டார். தன்னை ஆளாக்கிய, மகனைப் போல கருதுகிற ஐயா அவர்களைக் குறித்து இவ்வாறு இல்லாததும் பொல்லாததும் எழுத இவர்களால் எவ்வாறு முடிந்தது?. கொஞ்சமும் தாமதியாமல் அந்த கைபிரதியை சுருட்டி தந்தவரின் முகத்திலே எறிந்தார். வெற்றிபெற்ற எண்ணத்தோடு அங்கிருந்து சென்றார். கெ. இ. ஆபிரகாம் ஐயா அவர்கள் நடந்ததை கேள்விப்பட்டு ஆபிரகாமை வரவழைத்தார். செய்த தவறை உணர்த்தினார். கைபிரதி முகத்தில் எறிந்தது பாவம். அவருடைய காலைபிடித்து மன்னிப்பு கேட்க சொன்னார். அதன்பிறகு ஒரு மணிநேரம் ஜெபிக்க வேண்டும். ஆபிரகாம் எல்லாவற்றிற்கும் கீழ்ப்படிந்தார். அதன்பிறகு அய்யாவை சந்திக்க சென்றார். "மன்னிப்பு கேட்டாயா?" "கேட்டேன்" "ஜெபித்தாயா?" "ஜெபித்தேன்" நான்கு அணா (25 காசுகள்) எடுத்து கையில் கொடுத்து போய் அல்வா வாங்கி சாப்பிட சொன்னார்.*

தென்னிந்திய திருச்சபையின் கல்லறைக்கு அருகாமையில் இன்னமும் பத்து சென்ட் இடம் வாங்க முடிந்தது. அருகிலேயே கல்லறை இருந்ததினால் மக்களுக்கும் பயமாக இருந்தது. அந்த இடத்தில் சிறிய ஆலயம் கட்டப்பட்டது. விசுவாசிகளிடமிருந்தோ அல்லது தலைமையிடத்திலிருந்தோ பணஉதவி கேட்டு வாங்க வில்லை. ஆண்டவருடைய கிருபையால் இப்பொழுது அங்கே குறைந்தது ஐம்பது பேர் கூடுகிறார்கள்.

ஏரல்

ஆபிரகாம் ஜெபித்துக் கொண்டிருந்தபொழுது சுவற்றின் மேல் "ஏரல்" என்று எழுதியிருப்பதை கண்டார். ஏரல் என்றால் என்ன என்று சிலரிடத்தில் கேட்டார். அது ஓர் இடத்தின் பெயர் என்றும் அங்கு செல்வதற்கு பேருந்தில் அறுபது காசுகள் கட்டணம் என்றும் தெரிந்துகொண்டார். அடுத்த நாளும் ஆபிரகாம் ஜெபிக்கத் துவங்கினார். அப்பொழுது நீ ஏரல் பேருந்து நிலையத்தில் இறங்க வேண்டுமென்றும் அங்கிருந்து நேராக நடந்து சென்றால் வலது பக்கமாக ஓர் இரண்டுமாடி கட்டடத்தை காண்பாய் என்றும் அசரீரி சத்தம் கேட்டது. வீட்டிலிருக்கும் பணத்தை எண்ணிப் பார்த்தார் சரியாக அறுபது காசுகள் இருந்தன. ஆபிரகாம் அந்த பணத்தை வைத்துக் கொண்டு பேருந்தில் ஏரல் பேருந்து நிலையம் வந்தடைந்தார். குறிப்பிட்ட வீட்டிற்கு வந்தார். ஆபிரகாமிற்கு மகிழ்ச்சியான வரவேற்பு கிடைத்தது. காப்பியும், பலகாரங்களும் கொண்டு வந்தார்கள். வீட்டிற்கு வருவதற்குண்டான காரணம் என்ன என்று வினவினார்கள். தனக்குண்டான தரிசனத்தைக் குறித்து ஆபிரகாம் வீட்டாரிடம் கூறினார். தங்கள் இல்லத்தில் வாரந்தோறும் வேத ஆராய்ச்சிக்கூட்டம் நடத்த

விருப்பப்பட்டார்கள். வேறு மூன்று குடும்பங்களும் ஆர்வத்துடன் இருப்பதாக தெரிவித்தார்கள். ஜெபித்து விட்டு ஆபிரகாம் புறப்பட்டார். அந்த வீட்டார் பேருந்து நிலையம் வரையிலும் வழியனுப்ப வந்தார்கள். பேருந்து நிலையம் வந்த உடனே "திருநெல்வேலிக்கு செல்லும் பேருந்தில் சென்றால் ஸ்ரீவைகுண்டம் இறங்கலாம்" என்று சொல்லிவிட்டு விடைபெற்று சென்றார்கள். திருநெல்வேலி பேருந்து வந்தது, ஆபிரகாம் பேருந்தில் ஏறி அமர்ந்தார், கையில் ஐந்து காசுகூட கிடையாது. ஆனால் அது யாருக்கும் தெரியாது. சற்று நேரத்திற்குப் பிறகு ஒரு மனிதர் வந்து ஆபிரகாமின் அருகில் அமர்ந்து பேச ஆரம்பித்தார். நடத்துனர் ஏறி வந்து டிக்கெட், டிக்கெட் என்று கூப்பிட ஆரம்பித்தார். ஆபிரகாம் சட்டை பையில் கைப்போட்டு "ஒரு பாளையங்கோட்டை, ஒரு ஸ்ரீவைகுண்டம்" என்று சொன்னார். உடனே, அந்தப் பயணி "வேண்டாம் நான் கொடுக்கிறேன்" என்று சொல்லி பணத்தைக் கொடுத்தார். பேருந்து ஸ்ரீவைகுண்டம் வந்தபொழுது ஜெபிக்க வேண்டும் என்று சொல்லி அந்த மனிதரும் ஆபிரகாமுடன் இறங்கினார். ஆபிரகாம் அவருக்காக ஜெபித்தார். ஜெபம் முடிந்தவுடன் அந்த மனிதர் பத்து ரூபாய் ஆபிரகாமின் பையில் வைத்துவிட்டு பேருந்தில் ஏறி பயணமானார். அன்று பகல் முழுவதும் ஆபிரகாமின் குடும்பத்தில் பட்டினியாக இருந்தனர். இரவு பத்து மணியானதினால் அதற்கு மேல் சமைத்து சாப்பிட முடியாது. அதனால் ஓர் உணவு விடுதிக்கு சென்று இரண்டு உணவுப் பொட்டலங்கள் வேண்டும் என்று கேட்டார். அந்த உணவு விடுதியின் உரிமையாளர் ஆபிரகாமிடம் ஒரு உணவிற்கு மாத்திரம் பணம் பெற்றுக் கொண்டு "சாப்பாடு வீட்டிற்கு அனுப்பி வைக்கிறேன்" என்று சொன்னார். அன்று இரவு

ஆபிரகாமும் குடும்பமும் நன்றாய்ச் சாப்பிட்டார்கள். அது "ஏறல்" ஊழியத்தின் ஆரம்பமாக இருந்தது. அநேக குடும்பங்கள் இரட்சிக்கப்பட்டு ஞானஸ்நானம் பெற்றார்கள். அங்கே இடம் வாங்கி சபைக் கூடம் கட்டினார். ஓர் ஊழியக்காரரையும் ஏற்படுத்தினார். ஆபிரகாமிற்கு பதிலாளாக சில நாட்கள் ஊழியம் செய்து விட்டு அவர் அந்த வேலையை விட்டு சென்றார். அதற்கு பிறகு இருபத்திமூன்று வயதுள்ள ஒருவரை நியமித்தார். தேவ கிருபையினால் பலர் புதிதாக வந்துக் கொண்டிருந்தார்கள். சபை மிகவும் ஆசீர்வாதமாக முன்னேறி வருகிறது. மாதமொரு முறை ஆபிரகாம் அங்கு சென்று கர்த்தருடைய பந்தியோடு ஆராதனை செய்து வருகிறார்.

*ஸ்ரீவைகுண்டம் சபையில் ஜாதி வித்யாசமில்லை. தீண்டாமை கொடிக்கட்டி பறக்கும் தமிழ்நாட்டில்தான் இது என்பதை யோசிக்கவேண்டும். பிராமணர்கள் முதல் சக்கிளியர்கள் வரை ஒன்றாக அமர்ந்து ஜெபிக்கிறார்கள். ஆராதிக்கிறார்கள். இந்த சபையில் 20 சமுதாயத்தை சார்ந்தவர்கள் இருக்கிறார்கள். ஒருநாள் சக்கிளிய சமுதாயத்தை சேர்ந்த ஒருவரின் இல்லத்தில் ஜெபக்கூட்டம் நடந்தது. போதகர் ஆபிரகாம் அந்த வீட்டிலிருந்து ஏதாகிலும் சாப்பிடுவாரா என்று ஆர்வத் துடன் கவனிப்பவர்களும் உண்டு. ஜெபக்கூட்டம் முடிந்தவுடன் போதகருக்கு குடிக்க (Cool Drink) குளிர்பானம் கொடுத்தார்கள். "தேனீர் இல்லையா" என்று கேட்டார் ஆபிரகாம் அவர்கள் ஆச்சரியப்பட்டார்கள். கடைசியில் வீட்டிலிருந்த தேனீர் கொடுத்தார்கள். போதகர் அதை வாங்கி அருந்தினார். அது எல்லோருக் கும் "பெரிய அற்புதமாயிருந்தது".*

## சாயர்புரம்

ஆபிரகாம் மூன்றாவதாக ஊழியம் செய்த இடம் சாயர்புரம். சாயர்புரம் ஸ்ரீவைகுண்டத்திலிருந்து பதினேழு கி. மீ. தூரத்தில் உள்ளது. நாத்திகராயிருந்த பெரியாரின் (இ. வி. இராமசாமி நாயக்கர்) சீடனான திரு. மகுடம் என்பவரின் வீட்டில் வேதாகம வகுப்புகள் துவங்கப்பட்டது. அவர் சி. எஸ். ஐ. கல்லூரியில் தலைமை எழுத்தராக வேலை பார்த்து வந்தார். கூட்டம் நடைப்பெற்று கொண்டிருந்த போது குளியல் அறைக்குள்ளே ஒரு பிசாசு நுழைவதைக் கண்டார் ஆபிரகாம், இப்பொழுது எவரும் வீடுகளுக்குச் செல்ல வேண்டாம் என்று கேட்டுக்கொண்டார். பிசாசைக் கடிந்துக்கொள்ளப் போகிறேன் அப்பொழுது நாய்கள் குரைக்கும் அதற்குப் பிறகு எல்லோரும் போகலாம் என்று சொல்லிவிட்டு, பரலோகத்திற்கும், பூமிக்கும் சகல அதிகாரமுமுள்ள கர்த்தருடைய நாமத்தில் ஆபிரகாம் பிசாசைக் கடிந்துக்கொண்டார். உடனே, நாய்கள் குரைக்க ஆரம்பித்தன. அமைதியான பிறகு எல்லோரும் வீடுகளுக்கு திரும்பினார்கள். கடவுள் ஒருவர் உண்டென்பதை நான் நம்புகிறேன் என்று மகுடம் உரத்த சத்தமாய் சொன்னார். அவரும் குடும்பமும் இரட்சிக்கப்பட்டார்கள். மதுபானங்களுக்கு அடிமையான சிலரும் இரட்சிக்கப்பட்டார்கள். அந்த இடத்தில் நிலத்தை வாங்கி ஒரு சபைக் கூடம் கட்டவேண்டும் என்று ஆபிரகாம் விரும்பினார். ஆனால், யாரும் நிலம் தருவதற்கு முன்வரவில்லை. சற்று தொலைவில் ஒரு நெசவாளருடைய ஐந்தரை சென்ட் நிலம் விற்பனைக்கு உண்டு என்று அறிந்த ஆபிரகாம் அதை வாங்கி அங்கே ஒரு சபைக்கூடம் கட்டினார். சபைக்கூடம் நிறையுமளவுக்கு கர்த்தர் ஆத்துமாக்களை கொடுத்தார். இன்றும் சாயர்புரம் சபையானது ஆசீர்வாதமாக முன்னேறிச் செல்கிறது.

குலயன் கரிசில்

இங்கே செய்த ஊழியங்களினால் பலர் இரட்சிக்கப் பட்டார்கள், ஞானஸ்நானம் பெற்றார்கள். இங்கேயும் சபைக்கூடம் கட்டுவதற்கு எவரும் நிலத்தை விற்க முன்வரவில்லை. அதிகமான பண நெருக்கடியிலிருந்த ஒரு விசுவாசி இரண்டு செண்ட் நிலத்தை விலைக்கு தந்தார். சில வருடங்களுக்கு பிறகு அவர் இறந்து போனார். இப்பொழுது சகோதரர் தாமஸ் என்பவர் அங்கே ஊழியக்காரராக பணியாற்றி வருகிறார். இன்றும் அந்த சபையில் புதிய ஆத்துமாக்கள் வந்து கொண்டிருக் கிறார்கள்.

ஒருநாள் ஆபிரகாமும் மனைவியும் வீடுகள் சந்திப்பதற்காகப் புறப்பட்டுச் சென்றார்கள். ஒரு வீட்டிற்கு சென்றபொழுது அந்த வீட்டார் இங்கே ஜெபிக்க வேண்டாம் சீக்கிரமாகச் சென்று விடுங்கள் என்று சொன்னார்கள். "நான் போகமாட்டேன் ஒரு நாற்காலி கொடுங்கள்" என்றார் ஆபிரகாம். அவர்கள் நாற்காலி கொண்டு வந்து கொடுத்தார்கள். நாற்காலி மேல் அமர்ந்த ஆபிரகாம் "ஒரு டீ கொடுங்கோ" என்று சொன்னார். விருப்பமில்லை யென்றாலும் அவர்கள் டீ கொடுத்தார்கள். சுருங்கச் கூறினால், அவர்கள் இரட்சிக்கப்பட்டார்கள், ஞானஸ்நானம் பெற்றார்கள், சபை அங்கத்தினர்களானார்கள். அவர் களுடைய இரு மகள்கள் செவிலியர்களாக வேலைப் பார்க்கிறார்கள். சரியாக தசமபாகம் தருகிறார்கள். இன்று குலயன் கரிசில் சபை ஆசீர்வதிக்கப்பட்ட ஒரு கூட்டமாக விளங்குகிறது.

ஆபிரகாம் ஒரு நாள் சாயர்புரத்திற்கு பேருந்தில் பயணம் செய்து கொண்டிருந்தார். பயணத்தின் மத்தியில்

பேருந்து "நட்டாத்தி" என்ற ஒரு கிராமத்தில் நின்றபொழுது ஆபிரகாம் வெளியே கை நீட்டிக் கொண்டு "ஆண்டவரே இந்த கிராமத்திலிருந்து ஆத்துமாக்களை தாரும்" என்று மலையாள மொழியில் ஜெபித்தார். பக்கத்தில் இருந்தவர்கள் மலையாளத்தில் என்ன சொன்னீர்கள் என்று கேட்டார்கள். ஆபிரகாம் நடந்ததை விளக்கினார். "நட்டாத்தி" நாடார்கள் மத்தியில் நீங்கள் எட்டிப் பார்க்ககூட முடியாது என்றார்கள் அந்த பயணிகள். ஆனால், ஆண்டவர் ஆபிரகாமிற்கு அநுகூலமாயிருந்தார். அந்த கிராமத்தில் இருந்த ஒரு தலைமை ஆசிரியரின் வீட்டில் ஒரு சம்பவம் நடந்தது. அவர் ஆபிரகாமைத் தேடி ஸ்ரீவைகுண்டம் வந்து நடந்தவைகளை சொன்னார். ஜெபித்துவிட்டு தலைமை ஆசிரியரிடம் போதகர் ஆபிரகாம் இவ்வாறு சொன்னார் "ஒரு வாரத்திற்குள் எல்லாம் நன்றாக முடியும்" தலைமை ஆசிரியர் திரும்பிச்

*ஸ்ரீவைகுண்டத்திலிருந்து 10 கி.மீ. தொலைவிலுள்ள ஓர் இடம். பல நாட்களுக்கொரு முறை அங்கிருந்து ஒரு சி. எஸ். ஐ. விசுவாசி ஜெபக்கூட்டத்திற்கு வருவார். அவருடைய மனைவியின் வலது கண்ணின் கீழ்ப் பகுதியில் ஒருவிதமான வலி இருந்தது. மருத்துவர் களெல்லாம் "உங்களுக்கு எந்த வியாதியுமில்லை" என்று கூறினார்கள். இதெல்லாம் ஆபிரகாமிற்குத் தெரியாது. அந்த பெண்மணி ஜெபத்திற்கு வந்தார்கள். ஆபிரகாம் ஜெபித்தார். அப்பொழுது வலதுகண்ணில் வலியிருந்த பகுதியிலிருந்து ஓர் அசுத்தஆவி வீழ்கிறதை அந்த பெண்மணி கண்டார்கள். ஆபிரகாம் அதை காணவில்லை. அந்த வலி அத்துடன் நின்றுவிட்டது.*

சென்றார். சொன்னபடியே எல்லாம் நடந்து முடிந்தது (சில காரணங்களால் என்ன நடந்தது என்பதை இங்கே குறிப்பிடவில்லை). இது நட்டாத்தி ஊழியத்தின் துவக்கமாக அமைந்தது. அந்த தலைமை ஆசிரியரின் இல்லத்தில் வேதாகம வகுப்புகள் ஆரம்பித்தது. இந்து மதத்தை சேர்ந்த பெரியதந்தம் என்பவரின் இல்லத்திற்கு ஜெபிக்க அழைத்தார்கள். பிசாசு பிடித்த அந்த மனிதன், ஆபிரகாம் ஜெபித்தபொழுது தரையிலே விழுந்து கை, கால்களை தரையிலே அடித்தான். ஆபிரகாமும் கூடியுள்ளவர்களும் ஜெபித்த பொழுது கர்த்தர் அந்த மனிதனை குணமாக்கினார். அதற்கு முன் அவருடைய பிள்ளைகள் அவருக்குப் பயந்து ஓடிப்போவது வழக்கம். மனைவியை அவர் அடித்ததினால் அவர்களுடைய காதுகள் செவிடாக இருந்தது. ஆனால், ஆச்சரியமான இந்த விடுதலைக்கு பிறகு அந்த வீட்டார் இரட்சிக்கப்பட்டு, ஞானஸ்நானம் எடுத்துக் கொண்டார்கள். அழகான ஒரு வீட்டைக் கட்டி அவர்கள் நட்டாத்தியில் வாழ்ந்து வருகிறார்கள். குலயன் கரிசில் சபை ஊழியம் செய்து வரும் தாமஸ் என்பவர்தான் இந்த பெரியதந்தம் என்பவராவார்.

## சக்காரக்குடி

ஒரு வேனை (Van) வாடகைக்கு எடுத்துக் கொண்டு சக்காரக்குடி எனும் கிராமத்திற்கு வந்தார் ஆபிரகாம். அங்கே தெருவில் வெளிப்பிரசங்கம் செய்தார். அப்பொழுது அங்கே ஒரு போலீஸ்காரர் வந்தார். அவர் அந்த ஊர் ஜனங்களைப் பார்த்து இவ்வாறு கேட்டார் : "ஏண்டா, ஒரு மலையாளி இங்கே வந்து பேசும் போது அவர் உட்காருவதற்கு நாற்காலி கொடுக்க எவருமில்லையா?" பிறகு போதகரிடம் "நாடாருடைய டீ குடிப்பீர்களா?" என்று கேட்டார். ஆபிரகாம்

ஒத்துக்கொண்டபொழுது தேநீரும் வாங்கிக் கொடுத்தார். " "இனிமேல் எப்பொழுது வந்தாலும் இந்த டீ கடையிலிருந்து தேநீரோ அல்லது மற்றெந்த தீன்பண்டங்களோ வாங்கி சாப்பிடுங்கள் நான் பணம் கொடுக்கிறேன்" என்று சொல்லி சற்று நேரம் செய்தியை கேட்டுவிட்டு அவர் வேலைக்கு சென்றார். கூட்டத்திற்குப் பிறகு போதகரும் குழுவும் வெகுதூரம் நடந்தார்கள். ஒரு இடத்தைப் பார்த்தார். எல்லோரும் காலணிகளை கழற்றிவிட்டு அந்த இடத்தில் நடக்கச் சொன்னார். நீங்கள் கால்வைக்கும் இடமெல்லாம் உங்களுக்குத் தருவதாக கர்த்தர் சொல்லியிருப்பதாக ஆபிரகாம் சொன்னார். அந்த நிலத்தின் சொந்தக்காரர் அப்பொழுது அங்கே வந்தார். அவர் பெயர் புதியோன். நிலத்தை விற்பீர்களா என்று கேட்டதற்கு விற்பேன் என்று பதிலளித்தார். ஆபிரகாமினிடம் பணமில்லை. இருந்த போதும் செவ்வாய் கிழமை கிரயப்பத்திரம் எழுதலாம் என்று ஆபிரகாம் சொன்னார். ஞாயிறு மாலையில் ஒரு விசுவாசி கொஞ்சம் பணத்தை ஆபிரகாமிடம் கொடுத்தார். எதற்கு என்று கேட்டபொழுது "ஆண்டவருடைய வேலைக்கு பணம் தேவைதானே அதற்குப் பயன்படுத்துங்கள்" என்று பதிலளித்தார். நிலத்தின் விலையாகச் சொன்ன பணம் சரியாக அதில் இருந்தது. அன்று வாக்குறுதி செய்தது போலவே செவ்வாய்க்கிழமை கிரயப்பத்திரம் எழுதப்பட்டது.

மறுநாள் போதகர் ஆபிரகாம் அந்த இடத்திற்குச் சென்றார். இந்து மதத்தை சேர்ந்த ஒருவர் வந்து "இங்கே எதற்காக வந்தீர்கள்?" என்று கேட்டார். "இந்த இடத்தில் ஒரு சபைக் கூடம் கட்டவேண்டும். இயேசு என்பது எங்கள் கடவுளின் பெயர். அந்த இயேசுவை ஆராதிப்பதற்காகத் தான் சபைக்கூடம்" என்றார் ஆபிரகாம். உடனே இதோ

வருகிறேன் என்று சொல்லி அவள் போய்விட்டாள். சற்று நேரத்திற்குப் பிறகு அவள் திரும்பி வந்தாள். ஒரு பொதியை ஆபிரகாமிடம் கொடுத்துவிட்டு இவ்வாறு சொன்னாள்: "உங்கள் தேவனை ஆராதனை செய்வதற்கு இந்தப் பணத்தை எடுக்கலாம்" பிரகாரத்தில் அவள் இரட்சிக்கப் பட்டு ஞானஸ்நானம் எடுத்து, அபிஷேகம் பெற்று சபையின் அங்கமானாள். அவளுக்கு 'தேவகி' என்று ஆபிரகாம் பெயர் மாற்றினார். இன்று சக்காரக்குடியில் அபிஷேகிக்கப்பட்ட ஒரு சபை இருக்கிறது.

## வெள்ளை மடம்

வெள்ளை மடம் ஸ்ரீவைகுண்டத்திலிருந்து 15 கி.மீ. தொலைவில் இருக்கிறது. தென்னிந்திய திருச்சபையைச் சேர்ந்த ஒருவர் அங்கே அநேகமான நிலங்களை வாங்கினார்.

> வீட்டைவிட்டு துரத்தப்பட்ட ஆபிரகாம் வழியருகிலும் நாற்கவலைகளிலும் நின்று பிரசங்கம் செய்வார். இதை பார்க்கும்போதெல்லாம் அண்ணனும் தம்பியுமெல்லாம் கேலி செய்வார்கள். ஆனால் இன்றோ ஆபிரகாமை குறித்து சந்தோஷப்படுகிறார்கள். சமீபத்தில் ஒருநாள் உறவினர்களில் ஒருவர் கடிதமெழுதினார். "அதிக கஷ்டப்படுகிறோம் ஒன்றுமே யில்லை ஐந்து சென்ட் இடமும் ஒரு சிறிய வீடும் வாங்குவதற்கு உதவி செய்யுங்கள்". வசதிகள் வரும்போதுதான் உறவுகள் பலப்படுகிறது. இல்லாத உறவுகளும் தேடிவரும். "தரித்திரனை நண்பர்கள் கூட பகைக்கிறார்கள். ஐசுவரியவானுக்கோ அதிக நண்பர் களுண்டு".

பிறகு சிறு சிறு பகுதிகளாக அதை விற்க ஆரம்பித்தார். ஆபிரகாமிடம் அவர் இவ்வாறு சொன்னார்: "கையில் ஏதாவது இருந்தால் தந்து விட்டு கிரயப்பத்திரம் எழுதுங்கள்" அதன்படி இடம் வாங்கி சபைக் கூடம் கட்டினார். சில குடும்பங்கள் வர ஆரம்பித்தார்கள். இப்பொழுதும் சபை ஆசீர்வாதமாக நடைபெற்று வருகிறது.

தென்திருப்பேனி என்பது வெள்ளை மடத்திற்கு பக்கத்திலுள்ள மற்றொரு இடம். அங்கே தென்னிந்திய திருச்சபையைச் சேர்ந்த ஒரு ஊழியக்காரரின் இல்லத்தில் வேதாகம வகுப்புகள் நடத்துவது வழக்கம். சில வாரங்கள் தொடர்ந்து வேதாகம வகுப்புகள் நடந்தவுடன் பாதிரியார் ஊழியக்காரரிடம் அதை நடத்தக்கூடாது என்று சொன்னார். அந்தக் கூட்டத்தில் வைத்து அன்னை மேரி என்ற ஓர் ஏழைப் பெண்மணி இரட்சிக்கப்பட்டார்கள். அதற்கு முன்னமே அவர்களுடைய கணவரும் பிள்ளைகளும் அவர்களை வேண்டாம் என்று ஒதுக்கியிருந்தார்கள். இவர்கள் இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொண்டபொழுது அவர்களெல்லாம் திரும்ப வந்தார்கள். மாடு மேய்த்துக் கொண்டிருந்த அந்தப் பெண்மணியை முதலாளி வேலை நீக்கம் செய்தார். ஆபிரகாம் இந்தப் பெண்மணிக்கு ஓர் அரிசி ஆலையில் நான்கு ரூபாய் சம்பளத்தில் ஒரு வேலை வாங்கிப் தந்தார். காலங்கள் பல செல்ல அவர்கள் செல்வந்தர்களானார்கள். இப்போது வெள்ளை மடம் என்னுமிடத்தில் அவர்களுக்கு மூன்று பெரிய வீடுகளுண்டு. ஆசீர்வாதமாக நடந்து கொண்டிருந்த அந்த வேதாகம வகுப்பிற்கு தடை வந்தபொழுது "வீதியில் நின்று பிரசங்கம் செய்வேன்" என்று ஆபிரகாம் அந்த வீட்டாரிடம் கூறினார், அந்தக் குடும்பத்தார் வருத்தப்பட்டார்கள். அப்பொழுது

அங்குள்ள ஒரு பள்ளிக்கூடத்தில் ஆசிரியராக வேலைபார்க்கும் ஒருவர் அடுத்த வாரம் தம்முடைய இல்லத்தில் கூட்டம் நடத்தச் சொன்னார். ஆனால், வள்ளுவர்கள் அது கூடாது என்றும் தம்முடைய இல்லத்திற்கே செல்ல வேண்டாம் என்றும் விலக்கினார்கள். ஆபிரகாம் அதைப் பொருட்படுத்தவில்லை. அடுத்த வாரம் ஆபிரகாம் தென்திருப்பேரைக்கு வந்தார். அவரை அழைத்துச் செல்வதற்கு அந்த ஆசிரியர்தான் வந்திருந்தார். வீட்டில் வந்து சேர்ந்தவுடனே "என்ன செவ்வாய் கிழமைகளிலும் வெள்ளிக் கிழமைகளிலும் பாம்பு வந்து படமெடுத்து ஆடுவதுண்டா" என்று கேட்டார் ஆபிரகாம். "ஆமாம்" என்றார் ஆசிரியர். "இனிமேல் அது வராது" என்றார் ஆபிரகாம். அதன்பிறகு "நீ மறைத்து வைத்திருக்கும் புத்தகங்களை கொண்டு வா" என்று கட்டளையிட்டார். ஆசிரியர் நடுக்கத்துடன் கொண்டு வந்தார். மண்ணெண்ணெயை ஊற்றி அவைகளைக் கொளுத்தினார் ஆபிரகாம். சுருங்க கூறின், அந்த குடும்பம் முழுவதும் கர்த்தரை அறிந்துகொண்டார்கள். அவர்கள் இப்பொழுது ஸ்ரீ வைகுண்டம் சபையில் ஆராதித்து வருகிறார்கள்.

## கோறம்பள்ளம்

கோறம்பள்ளம் என்ற இடத்தில் ஊழியம் செய்ய ஆபிரகாம் விரும்பினார். அங்கே வாரந்தோறும் கூட்டம் ஆரம்பித்தார். தென்னிந்திய திருச்சபையை சேர்ந்த ஒருவரின் இல்லத்தில் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அங்கே ஒரு சிலர் இரட்சிக்கப்பட்டு ஞானஸ்நானம் எடுத்தார்கள். இப்படியாக அங்கேயும் ஒரு சபை துவங்கியது. ஆனால் அங்கே ஊழியம் செய்து வந்த ஊழியக்காரர் அந்த இடத்தைவிட்டுச் சென்றார். அவர்

செல்வதற்கு முன்பு “நீ போகக்கூடாது, போனால் நீ கண்டிப்பாக கஷ்டத்திற்குள்ளாகி விடுவாய்” என்று ஆபிரகாம் எச்சரித்தார். போதகரின் இந்த எச்சரிப்பை அலட்சியம் பண்ணிக் கொண்டு அவர் சேலம் சென்றார். ஆபிரகாம் சொன்னது போலவே அவர் இப்பொழுது அலைந்து திரிகிறார். அதன் பிறகு மற்றொருவரை அந்த ஊழியத்திற்கு ஏற்படுத்தினார். இப்போது சபை ஆசீர்வாதமாக முன்னேறிச் செல்கிறது.

*உபவாச ஜெபம் முடிந்தவுடன் உணவுக் கொடுப்பார்கள். செய்தி கொடுக்க வருபவர்களும் உபவாசிக்கவேண்டும். உபவாசம் தொடங்கிய வெள்ளிக் கிழமை மதியம் நான் அங்கு போய் சேர்ந்தேன். செய்தி கொடுப்பது ஒரு மாவட்ட தலைமை போதகர். கூட்டத்திற்குப் பிறகு எல்லோருக்கும் காப்பி கொடுத்தார்கள். செய்தி கொடுத்தவரிடம் ஆபிரகாம் ஆவிக்குரிய காரியங்களை பேசிக்கொண்டிருந்தார். நானும் பக்கத்தில் அமர்ந்துகொண்டு கவனித்து கொண்டிருந்தேன். அதிகநேரம் அந்த பேச்சு நடந்தது. பிரசங்கியார் “கீழே போய் அம்மாவை பார்த்துவிட்டு வரலாம்” என்று கூறி கீழே போதகர் தங்குமிடத்திற்கு சென்றார். அம்மா அவருக்கு உணவுக் கொடுத்தார்கள். உணவு கொடுத்ததற்காக ஐயா அம்மாவை கடிந்துகொள்வதை நான் கேட்டேன்.*

## திசையின்விளை

திசையின்விளை ஸ்ரீவைகுண்டத்திலிருந்து 30 கி.மீ தொலைவிலுள்ளது. ஆபிரகாமிற்கு அங்கே ஒரு வாசல் திறவுண்டது. அங்கே ஊழியம் செய்வதற்கு ஒருவர் வேண்டுமென்று ஆபிரகாம் ஜெபித்துக்கொண்டிருந்தார். சாயர்புரத்திற்கு அருகில் சிலோன் பெருந்தெருவிளையை சேர்ந்த ஒருவரின் மனைவிக்கு பிசாசு பிடித்தது. அவர்களின் விசுவாச (Faith Home) இல்லத்தில் ஒன்றரை மாதம் தங்க வைத்தார்கள். சுகமடையாததனால் வீட்டுக்காரர் ஸ்ரீவைகுண்டம் வந்து ஆபிரகாமை சந்தித்தார். ஆபிரகாம் அவரிடம் இவ்வாறு கேட்டார் : "இந்த பெண், வீட்டிற்கு பின்பக்கம் இருக்கும் ஒரு மரத்தடியில் அடிக்கடி போய் உட்காருவாள், அப்படித்தானே?" உண்மைதான் என்றார் வந்தவர். ஆபிரகாம் அவருடன் அவருடைய வீட்டிற்குப் போனார். எல்லோரும் ஒருமித்து பாட்டுப் பாடி ஜெபித்துப் பிறகு சாத்தானை கடிந்துகொண்டார். அந்தப் பெண் முற்றிலும் விடுதலையாக்கப்பட்டாள். முத்து என்ற பெயர் கொண்ட அவர் அதன்பிறகு ஸ்ரீவைகுண்டம் சபைக்கு வர ஆரம்பித்தார். இவருக்கு நன்றாக வேதாகமம் கற்பித்த பிறகு அவரை திசையின்விளையில் ஊழியக்காரராக அமர்த்தினார். அங்கே நிலம் வாங்கி சபைக்கூடம் கட்டி தேவஜனங்கள் கூடி வருகிறார்கள்.

## பேய்க்குளம்

ஸ்ரீவைகுண்டத்திலிருந்து 17 கி.மீ. தொலைவிலுள்ள பேய்க்குளம் என்னும் இடத்திற்கு சென்றார் ஆபிரகாம். அங்கே ஒரு நாட்டு வைத்தியர் பிள்ளையார் சிலையைக் குளிப்பாட்டுவதை கண்டார். "வைத்தியரே இந்த கல்லையேன் குளிப்பாட்டுகிறீர்கள்" என்று கேட்டார்

ஆபிரகாம். வைத்தியருக்கு மிகுந்த கோபம் உண்டாயிற்று. ஜெபிக்கலாம் என்று சொன்ன ஆபிரகாமிடம் ஜெபிக்க வேண்டாமென்று சொன்னார் வைத்தியர். ஆனால் ஆபிரகாம் மலையாளத்தில் உரத்த குரலில் ஜெபித்தார். அடுத்த வாரமும் ஆபிரகாம் அங்கு சென்றார் இந்த கல்லைத் தூக்கிப் போடுங்கள் என்றார் வைத்தியரிடம். வைத்தியருக்கு அதிக கோபம் வந்தது. ஜெபித்த பிறகு வீடு திரும்பினார் ஆபிரகாம். அன்று இரவு வைத்தியர் விநாயகரை எங்கோ கொண்டுபோய் போட்டுவிட்டார். சுடலைமாடன் என்பது தமிழ்நாட்டிலுள்ள ஒரு கடவுள் பெயர். பிணங்களும், பன்றியின் இரத்தமும் இந்தக் கடவுளுக்கு மிகவும் பிடிக்குமாம். சுடலை என்று பெயருள்ள சிலரை தலித் வகுப்பினரிடையே காணலாம். உயர்ந்த ஜாதிக்காரர்கள் இந்தக் கடவுளை வணங்குவதில்லை. இந்த சுடலைமாடன் சில வேளைகளில் சிலரை பிடிப்பான், பெரிய பிரச்சனைகளை உண்டுபண்ணுவான். ஒரு முறை ஒரு வாலிபனை இந்தச் சுடலைமாடன் பிடித்தது. மந்திரவாதிகளை அணுகியும் பயனொன்றுமில்லை. அவர்கள் ஒரு தென்னிந்திய திருச்சபை பாதிரியாரிடம் சென்றார்கள். அவர் இவ்வாறு சொன்னார் : "ஸ்ரீவைகுண்டத்தில் உள்ள தேவசபை போதகரிடம் கொண்டு சென்றால் அவர் ஜெபிப்பார், இந்த பிசாசும் ஓடிவிடும்" அதன்படி அவர்கள் ஆபிரகாமிடம் வந்து சங்கதிகளை தெரிவித்தார்கள். ஆபிரகாமையும் அழைத்து சென்றார்கள். எல்லோரும் சேர்ந்து ஒரு பாட்டை ப் பாடினார்கள். ஆபிரகாம் பத்து நிமிடம் செய்தி கொடுத்தார். அதன் பிறகு வாலிபனிடம் இவ்வாறு சொன்னார் : "நீ என்னைப் பார்" அவன் ஆபிரகாமை பார்த்தான். "வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரமும் பெற்ற

இயேசுவின் நாமத்தில் உன்னை கடிந்துகொள்ளுகிறேன் என்றார் ஆபிரகாம். உடனே அந்த பிசாசு அவனை விட்டு சென்றது. "இனிமேல் அந்த பிசாசு இவனுக்கு ஒரு கஷ்டம் கூட அனுப்பாது" என்று தனக்கு சம்பவமுழுவதுமுள்ள நாளைக்கவலையிலேயேவிட்டு சொன்னார் ஆபிரகாம். அந்த வாலிபன் இரட்சிக்கப்பட்டு ஞானஸ்நானம் எடுத்தான். திருமணமாகி ஒரு குழந்தையின் தகப்பனுமான அந்த வாலிபன் மர வியாபாரம் செய்து வந்தான். இந்த அற்புதம் அநேகரின் இரட்சிப்பிற்குக் காரணமாயிற்று.

பேய்க்குளத்திற்கு அருகாமையிலுள்ள "கரிங்கல்" என்ற இடத்திலிருந்தும் பல குடும்பங்கள் இரட்சிக்கப்பட்டு ஞானஸ்நானம் எடுத்துக் கொண்டு பேய்க்குளம் சபையில்

ஒவ்வொரு மாதமும் இரண்டாவது வெள்ளி, சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் உபவாச கூட்டங்கள் நடைபெறும். 80 வயதான ஆபிரகாமும் உபவாசிப்பார். இந்த கூட்டங்களுக்கு அநேகர் வருவார்கள். இந்த நூலாசிரியர் அங்கு சென்றிருந்த ஒருநாள் கையில் கறுப்பு கயிறு கட்டடின ஒருவர் கையில் பாலித்தீன் பையில் சற்று எண்ணையும் கொண்டு வந்தார். பனியனும், லுங்கியும் அணிந்திருந்தார். ஆபிரகாம் அவருடைய நாடி பிடித்து பார்த்துவிட்டு உனக்கு அதிகமான உயர்ந்த இரத்தஅழுத்தம் இருக்கிறது. வெள்ளைபூண்டு நிறைய சாப்பிடு என்று சொல்லிவிட்டு கையில் ஒரு புதிய ஏற்பாட்டை கொடுத்து மனைவியிடம் இதை வாசித்து தர சொல்லு. இயேசுவே இயேசுவே என்று ஜெபித்துக்கொள் என்று கூறி அனுப்பிவிட்டார்.

சேர்க்கப்பட்டார்கள். அங்கே பதினேழு சென்ட் நிலம் வாங்கி ஒரு சபைக்கூடம் கட்டி அங்கே ஓர் ஊழியக்காரரையும் நியமித்தார். ஏறத்தாழ நூறு பேர் அங்கே கூடிவருகிறார்கள்.

## செய்லிங்கநெல்லூர்

இங்கேயும் ஆபிரகாம் ஊழியம் ஆரம்பித்தார். பலர் இரட்சிக்கப்பட்டார்கள். அங்கேயும் நிலம் வாங்கி சபைக்கூடம் கட்டினார்கள். ஒரு ஊழியக்காரரையும் நியமித்திருக்கிறார். அருகாமையிலுள்ள கரிங்குளம் எனும் இடத்திலிருந்து செய்லிங்க நெல்லூர் சபைக் கூட்டங்களுக்கு ஜனங்கள் வருகிறார்கள். வங்கியில் வேலை பார்த்துக் கொண்டிருந்த தாமஸ் என்பவர் அந்த வேலையை இராஜினாமா செய்துவிட்டு அங்கே ஊழியம் செய்கிறார்.

## உக்கிரன் கோட்டை

இங்கேயும் ஊழியம் ஆரம்பித்தார். சபை ஆசீர்வாதமாக முன்னேறி வருகிறது.

## சேந்தமரம்

இந்த இடத்திலேயும் கர்த்தர் ஆத்துமாக்களை இரட்சித்தார். இடமும் சபைக் கூடமும் உள்ளது. உற்சாகமுள்ள ஓர் ஊழியக்காரரும் அங்கே இருக்கிறார். அங்கே ஏறத்தாழ நாற்பது பேர் கூடி வருகிறார்கள்.

## பாம்பு கோவில் சந்தை

இங்குள்ள ஸ்தல சபையும் ஆசீர்வாதமாக தொடருகிறது. விசுவாசிகள் எண்ணிக்கையில் குறைவுதான். இடமும் சபைக்கூடமுமிருக்கிறது. ஊழியக்காரரையும் நியமித்திருக் கிறார்.

| போதகர் ஆபிரகாம் மூலமாக நிறுவப்பட்ட சபைகளின் பட்டியல் : | | |
|---|---|---|
| சபை | ஊழியக்காரர் | அங்கத்தினர்கள் (ஏறத்தாழ) |
| ஸ்ரீவைகுண்டம் | கெ. ஜெ. ஆபிரகாம் | 200 |
| ஏறல் | ஜோசப் | 65 |
| சாயர்புரம் | தங்கராஜ் | 60 |
| நாசரேத்து | ஆசீர்வாதம் | 40 |
| வெள்ளைமடம் | மோசஸ் | 5 |
| திசையின்விளை | முத்து | 25 |
| செய்லிங்கநெல்லூர் | தாமஸ் | 50 |
| வெட்டியப்பந்தல் | டைட்டஸ் | 30 |
| பாளையங்கோட்டை | ஜெயசீலன் | 200 |
| உக்கிரன்கோட்டை | விசுவாச தாஸ் | 200 |
| பாம்புகோவில் | - | 30 |
| அகரக்கட்டு | இராயப்பன் | 30 |
| சேந்தமரம் | இராஜன் | 60 |
| சக்காரக்குடி | மாத்யூ | 30 |
| குலயன்கரிசில் | தாமஸ் | 60 |
| கோறம்பள்ளம் | ஜோசப் | 25 |
| பெரியகுளம் | அதிசயம் சாமுவேல் | 200 |

இவைகளைத் தவிர பல கிளை சபைகளுமுண்டு.

# 6

## "அற்புதங்களினாலும் அடையாளங்களினாலும்"

மனிதன் அற்புதங்களைத் தேடிப் போகும் காலமிது. அற்புதங்களையும் அடையாளங்களையும் தேடுவது யூதர்கள் மட்டுமல்ல. இந்தியர்களும் அற்புதங்களைத் தேடுகிறார்கள். ஒருவிதமாகச் சொன்னால் உலகமெங்குமுள்ளவர்களும் அற்புதங்களை நாடிச்சென்று நிராசையடைந்து வருகிறார்கள். இதோ அற்புத சுகமளிப்பவர் வருகிறார் என்று நாடெங்கும் முரசு கொட்டி ஒரு அற்புதம் கூட நடக்காதிருந்த சந்தர்ப்பங்களு மிருக்கிறது. (நாட்டின் நான்கு திசைகளிலிருந்தும் நோயாளிகள் கூட்டம் கூட்டமாக வந்து எந்த மாற்றமுமில்லாமல் திரும்பிச் சென்றார்கள்) கர்த்தரின் சுவிசேஷத்தை அறிவிக்கத்தான்

சீடர்களுக்கு சொல்லப்பட்டது. வசனத்தை ஸ்திரப்படுத்துவதற்காக அற்புதங்களும், அடையாளங்களும் கொடுக்கப்பட்டிருக்கிறது. மாறாக சுகமளிக்கும் ஊழியத்திற்காக கர்த்தர் வரவில்லை. பாவ மன்னிப்பளிப்பதற்கும் தேவனோடு மனிதனைக் கிட்டிச் சேரப்பண்ணவும் கர்த்தர் இந்த உலகிற்கு வந்தார். "நோயாளிகளைக் குணமாக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார்" என்றல்ல "பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார்" என்றுதான் எழுதப்பட்டிருக்கிறது. அங்கேயே "அப்போஸ்தலர்கள் மூலம் அநேக அடையாளங்களும் அற்புதங்களும் நடந்தன" என்றும் எழுதியிருக்கிறது. கர்த்தரும் நிறைய அற்புதங்களைச் செய்தார். அற்புதங்களைக் கண்டவர்களும் அப்பத்தை தின்றவர்களுமான ஜனங்கள் அவரை

உபவாச ஜெபம் முடிந்தவுடன் உணவுக் கொடுப்பார்கள். செய்தி கொடுக்க வருபவர்களும் உபவாசிக்கவேண்டும். உபவாசம் தொடங்கிய வெள்ளிக் கிழமை மதியம் நான் அங்கு போய் சேர்ந்தேன். செய்தி கொடுப்பது ஒரு மாவட்ட தலைமை போதகர். கூட்டத்திற்கு பிறகு எல்லோருக்கும் காப்பி கொடுத்தார்கள். செய்தி கொடுத்தவரிடம் ஆபிரகாம் ஆவிக்குரிய காரியங்களை பேசிக் கொண்டிருந்தார். நானும் பக்கத்தில் அமர்ந்து கொண்டு கவனித்து கொண்டிருந்தேன். அதிகநேரம் அந்த பேச்சு நடந்தது. பிரசங்கியார் "கீழே போய் அம்மாவை பார்த்துவிட்டு வரலாம்" என்று கூறி கீழே போதகர் தங்குமிடத்திற்கு சென்றார். அம்மா அவருக்கு உணவுக் கொடுத்தார்கள். உணவு கொடுத்த தற்காக தூய அம்மாவை கடிந்துகொள்வதை நான் கேட்டேன்.

சிலுவையில் அறைவதற்கும் ஒன்று சேர்ந்தார்கள். நித்திய ஜீவனின் வார்த்தைகள் கர்த்தரிடத்தில் மாத்திரம்தான் இருக்கிறது என புரிந்துக்கொண்டவர்கள் கர்த்தரோடுகூட நின்றார்கள். கர்த்தர் எதையும் விளம்பரம் செய்த பிறகு செய்யவில்லை. எதையும் செய்த பிறகு விளம்பரம் செய்யவுமில்லை. தேவைகளின்போது கர்த்தர் கிரியை செய்தார் என்றுதான் சொல்லமுடியும்.

போதகர் கெ. ஜெ. ஆபிரகாம் என்ற குட்டப்பன் மூலமாகவும் கர்த்தர் பல அற்புதங்களை செய்திருக்கிறார். செய்துகொண்டும் இருக்கிறார். அவைகளைப் பற்றிக் கூறும்பொழுதும், அசாதாரணமாக ஒன்றும் பாவிப்ப தில்லை. வியாதியஸ்தர்கள் மேல் கைகளை வைத்தால் அவர்கள் குணமடைவார்கள் என்று அவருடைய வாக்குத்தத்தம் இருக்கிறது. நான் அதன்படி செய்கிறேன், கர்த்தர் சுகமளிக்கிறார். மற்றொன்றும் அவர் சொல்வதற் கில்லை. அவருக்கு விசுவாசமும் தேவகிருபையும் மிக அதிகமான அளவில் கிடைத்திருக்கிறது. அதனால் மாத்திரமல்ல ஆத்துமாக்கள் இரட்சிக்கப்பட வேண்டியது முண்டு. ஆதலால் அற்புதங்கள் நடைபெறுகிறது. கதிரேயர் ஊரில் பிசாசு பிடித்திருந்தவனை கர்த்தர் குணமாக்கியதை அந்த தேசத்தார் பொருட்படுத்தவில்லை, அவர்கள் கர்த்தரை விசுவாசிக்கவுமில்லை. மாறாக பன்றிகளின் இழப்பு அவர்களுக்குப் பெரிதாகயிருந்ததால் அவர்கள் இயேசு கிறிஸ்துவை அந்த தேசத்தை விட்டு வெளியேற செய்தார்கள். லீஸ்திரா என்னுமிடத்தில் அப்போஸ்தல னாகிய பவுல் ஒருவருடைய முடமான காலை குணமாக்கின பொழுது கல்லால் அடிப்பட்டதை நாம் மறந்துவிடக் கூடாது. அற்புதங்கள் நடந்தாலும்கூட ஜனங்கள்

அழுகையாக இருப்பார்கள் என்று சொல்லமுடியாது. முன்னமே நான் சொன்ன சுல்தானா பாத்திமா என்ற பெண்ணிற்கு அற்புத சுகம் கிடைத்த பொழுதுங்கூட அதை கண்ட அவளுடைய சகோதரர்கள் இயேசுவை விசுவாசிக்கவில்லை. மாறாக, அவளைக் கொல்ல முயற்சி செய்தார்கள். அற்புதங்கள் நடந்த பிறகு விசுவாசியாத மூன்று பட்டணவாசிகளைக் கர்த்தர் சபிப்பதை நாம் காண்கிறோம்.

மற்றொன்றையும் சொல்லுகிறேன், பிசாசும் அற்புதங்களை செய்து சுகங்களை பெற்றுவதுண்டு. பொருளாதார வளர்ச்சியெல்லாமே தேவனிடத்திலிருந்து தான் வருகிறது என்று நாம் சொல்லிவிட முடியாது. பிசாசும் இவைகளையெல்லாம் மனிதர்களுக்கு கொடுப்பதுண்டு. திருத்தலங்களுக்குப் பெருங்கூட்டம் செல்வதின் காரணமும் மற்றொன்றல்ல.

போதகர் ஆபிரகாம் என்னிடம் கூறினது எனக்கு நினைவிருக்கிறது: You may be healed என்றல்ல, You will be healed என்றுமல்ல, You are healed என்றுதான் கர்த்தர் சொன்னார். தான் உரைத்த எந்த தீர்க்கதரிசனமும் தவறியதில்லை என்று சொல்லும் உறுதியும் ஆபிரகாமிற்கு உண்டு. "நான் தேவனுடைய தீர்க்கதரிசி" என்று அவர் பலமுறை கூறியிருக்கிறார்.

குந்நம்குளம் எனும் ஊரில் ஊழியம் செய்யும் நாட்கள். அப்பொழுது ஆபிரகாம் வாலிபராயிருந்தார். வேதாகம வகுப்புகள் நடத்திக்கொண்டிருந்தார். ஒரு குடும்பத்திலிருந்து ஒரு வாலிபப் பெண் மாத்திரம் இரட்சிக்கப்பட்டு கூட்டத்திற்கு வந்துக்கொண்டிருந்தாள். அவள் வீட்டு வேலை செய்து பிழைப்பவள். ஒரு நாள் வாசல் கூட்டி சுத்தம் செய்யும் பொழுது பாம்பு கடித்தது. "என்னைப் பாம்பு

கடித்து விட்டது; வைத்தியரிடத்தில் கொண்டு போக வேண்டாம். முண்டக்கயம் ஆபிரகாமினிடம் கொண்டு போங்கள்" என்று சொல்லி மயங்கி விழுந்தாள். அந்த வீட்டார் அந்தப் பெண்ணை அவளுடைய வீட்டிற்கு கொண்டு சென்றார்கள். குந்நம்குளத்தில் ஒரு வைத்தியர் இருந்தார். அவர் ஒரு பல்லி சத்தம் கேட்டார். உடனே உதவியாளரிடம் "யாரோ ஒருவரை பாம்பு கடித்திருக்கிறது. யார் வந்து அழைத்தாலும் நான் இங்கு இல்லை என்று

*நான் ஸ்ரீவைகுண்டம் சென்றபொழுது அன்னாள் என்ற ஒரு வயதான தாயாரை கண்டேன். கணவர் பெயர் சைமன் இவர்களுடைய குழந்தையைதான் மருத்துவர்கள் கர்ப்பத்திலேயே இறந்து விட்டதாக கூறினது. இவர்களுக்கு நான்கு பெண்பிள்ளைகள். ஒரு ஆண்பிள்ளை இல்லையே என்ற வருத்தத்தை போதகரிடம் கூறினார்கள். ஆபிரகாம் ஜெபித்துவிட்டு "அடுத்தது மகன் பிறப்பான்" என்று கூறினார். சொன்னபடியே நடந்தது. குழந்தைக்கு குட்டப்பனின் பெயரையே சூட்டினார்கள். அந்த வாலிபர் வளர்ந்து எம். ஏ. பட்டம் பெற்றார். ஆனால் வேலைக் கிடைக்கவில்லை. ஆபிரகாமிடம் வருத்தத்துடன் இதை கூறினார். இன்னும் ஒரு வாரத்திற்குள் வேலைக் கிடைக்குமென்று சொன்னார் ஆபிரகாம். மூன்றாம் நாளி லேயே 10,000 ரூபாய் சம்பளத்தில் பாளையங்கோட்டை யிலேயே வேலைக் கிடைத்தது. இப்பொழுது ஐயா அவர்கள் திருமணத்திற்காக பெண்ணையும் காண்பிக்க வேண்டுமென்று கூறுகிறார்.*

சொல்லி விடுங்கள்' என்று சொல்லி அறைக்குள் சென்று பத்திரம் படிக்கலானார். சுற்றுப்புறமும் விசுவாசிகள் எல்லோரும் வந்து ஜெபிக்க ஆரம்பித்தார்கள். இடைவிடாமல் ஜெபித்தார்கள். மாலை ஆறு மணியான பொழுது அங்குள்ள ஊழியக்காரரின் மனைவி ஆபிரகாமினிடம் "குட்டப்பா, நீ போய் குளித்துவிட்டு உணவருந்தி வா" என்று சொன்னார்கள். ஆபிரகாம் கீழ்ப்படிந்தார். ஜெபம் நடந்துகொண்டிருந்தது. அடுத்த நாள் அதிகாலையில் மூன்று மணியானபோது எல்லோரும் சேர்ந்து கைகள் தட்டி உரத்தகுரலில் பாடினார்கள். அந்த பாட்டு அந்நியபாஷையிலும் பாடினார்கள் "கோ..............கோகுரா..............பாபுலோ........ அம்......ஆபோ........ஆபூலோ........கோ.......கோகுரா........ பாபுலோபா.....ஆமென்......" இப்படி பாடிக்கொண்டே இருந்தார்கள். அப்பொழுது அங்கிருந்த மாத்யூ சன்னியாசி எனும் தேவமனிதர் "குட்டப்பா நீ எழுந்து செய்தி கொடு" என்றார். "பெண் செத்து கிடக்கிற இடத்திலா செய்தி?" என்றார் ஆபிரகாம். "அங்கே பாருடா" என்று ஆபிரகாமிடம் சொன்னார் சன்னியாசி. கண் திறந்து பார்த்த ஆபிரகாம், முழங்காலிட்டு குதித்துக் கொண்டே தேவனை மகிமைப்படுத்தும் அந்தப் பெண்ணைக் கண்டார். இந்த நிகழ்ச்சி அங்கிருந்த சிலர் இரட்சிக்கப்படுவதற்கும், ஞானஸ்நானம் எடுப்பதற்கும் ஏதுவாயிற்று.

சில வருடங்களுக்கு பிறகு மின்லோராவிலுள்ள சில சபைகள் அழைத்ததின் பேரில் ஆபிரகாம் அங்கு சென்றார். ஒரு குறிப்பிட்ட ஆராதனைக்காக ஒரு சபைக்கு சென்றார். ஒரு குறிப்பிட்ட பாட்டின் எண்ணை சொல்லி அதைப் பாடலாம் என்றார்கள் "கோ.......கோகுரா பாபுலோ......ஆபூ........ஆபோ.............. ஆபூலோ..........கோ.......கோகுரா.......பாபுலோ......

ஆ....ஆ...ஆமேன்......" இதுதான் அந்த பாட்டு. ஆபிரகாமும் அவர்களோடு சேர்ந்து உரத்த குரலில் பாடினார்கள். கூட்டம் முடிந்தவுடன் "கேரளாவை சேர்ந்த உங்களுக்கு எங்கள் மொழியிலுள்ள இந்த பாட்டு எப்படி தெரியும்" என்று போதகரும், மற்றவர்களும் ஆர்வத்துடன் கேட்டார்கள். சில வருடங்களுக்கு முன் ஒரு வாலிப பெண்ணை பாம்பு கடித்தபொழுது கர்த்தர் இந்த பாட்டை எங்களுக்கு தந்தார்" என்று சொன்னார் ஆபிரகாம். அப்பொழுது எல்லோரும் சேர்ந்து தேவனை மகிமைப்படுத்தினார்கள்.

பாளையங்கோட்டை அருகில் வாழ்ந்துவந்த இரத்தின பாண்டியன் என்ற ஒருவர் நோய்வாய்பட்டார். வியாதி அதிகமானதால் ஸ்ரீவைகுண்டத்திற்கு அருகாமையிலுள்ள ஒரு கிராமத்திற்கு அவரை கொண்டுவந்தார்கள். ஜெபிப்பதற்கு ஆபிரகாமை அழைத்துவரும்படி ஆளனுப்பினார்கள். நோயாளியை ஸ்ரீவைகுண்டம் கொண்டுவரச் சொல்லி ஆபிரகாம் அவர்களைத் திருப்பி அனுப்பிவிட்டார். அவர்கள் சென்று இரத்தினப் பாண்டியனை கொண்டு வந்தார்கள். "உங்களுடைய சொந்த ஊர் எது" என்று ஆபிரகாம் கேட்டதற்கு "ஐயா அது மதுரை" என்று அவர் பதில் சொன்னார். அவர்கள் அவரை மதுரைக்கு அழைத்து சென்றார்கள். இரண்டு மூன்று தினங்களுக்கு பிறகு ஆபிரகாமும் மதுரைக்குச் சென்றார். அவர்களுடைய வீட்டிற்குச் சென்ற ஆபிரகாம் ஜெபிப்பதற்கு ஓர் அறையை கேட்டார். தென்னிந்திய திருச்சபையை சேர்ந்த ஒரு பெண்மணி ஒரு நல்ல அறையை தந்தார்கள். காலையிலும், மாலையிலும் தேநீர் வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். ஜெபம் ஆரம்பித்த மூன்றாம் நாள் நோயாளி துடிக்க ஆரம்பித்தார் "மகனே

பாண்டி" என்று அலறுகிறபடி தாயார் கதறி அழுதுகொண்டிருந்தாள். சற்று நேரத்திற்குப் பிறகு இரத்தின பாண்டியன் வாந்தியெடுத்தார். நெஞ்சிலிருந்து அவரின் மூலமாய் கற்றுப்பட்ட ஏதோ ஒன்று வெளியே வந்தது. அதுடன் இரத்தின பாண்டியன் சுகம் பெற்றார். அதுவரையிலும் இரத்தினபாண்டியன் பேச முடியாமலிருந்தார். அந்த நேரம் முதல் அவர் பேசவும் துவங்கினார். குளித்துவிட்டு ஆடைகளை மாற்றி வந்தார். மகிழ்ச்சிக்கு அடையாளமாக அடுத்த நாள் காலையில் வந்தவர்களுக்கெல்லாம் கஞ்சியும் துவையலும் கொடுத்தார். ஆபிரகாம் ஸ்ரீவைகுண்டத் திற்கும் அவர்கள் பாளையங்கோட்டைக்கும் திரும்பினார் கள். இரத்தினபாண்டியன் இரட்சிக்கப்பட்டார், ஞானஸ் நானம் பெற்று அபிஷேகமும் பெற்றார். அதன் பிறகு அவர் ஒரு சபையின் ஊழியக்காரரானார். ஆபிரகாம் சில குடும்பங்களை இரத்தின பாண்டியனின் பொறுப்பில் விட்டார்.

ஆபிரகாம் ஒரு பெண்மணியை குறித்து கூறினார். அநேக நாட்கள் சிங்கப்பூரில் வாழ்ந்துவிட்டு இப்பொழுது சொந்த ஊரில் வந்து தங்கியிருக்கிறார்கள். பெந்தெகொஸ்தே கூட்டங்களுக்கு வர ஆரம்பித்தார்கள். வீட்டில் ஜெபக்கூட்டம் நடத்தும்போது வாலிபரான ஆபிரகாமும் அங்கு செல்வார். வருபவர்களை நன்றாக உபசரிப்பதினால் அந்த ஜெபக்கூட்டத்திற்கு செல்ல ஏழைகள் விரும்புவார்கள். இந்த பெண்மணி பொது இடங்களில் நின்று செய்தி கொடுப்பார்கள். செய்தி மிகவும் சுவாரஸ்யமாக இருக்கும். திரும்ப திரும்ப கேட்க வருவார்கள். ஒருநாள் சபையில் வந்து சாட்சி

திருவனந்தபுரத்தில் இருந்த நாட்கள் ஊழியம் நந்தன்கோடு. சபையில் ஒரு சுவிசேஷக் கூட்டம் நடத்த தீர்மானித்தார். வில்லியம் போஸ்ப்பெலில் என்பவர் செய்தி கொடுத்தார். எல்லோரும் காணிக்கையெடுக்க கட்டாயப் படுத்தின பொழுதும் ஆபிரகாம் அதற்கிணங்கவில்லை. கர்த்தர் பெரியவர் இவ்வாறு பிச்சையெடுப்பது தவறு என்பது அவருடைய எண்ணம். ஞாயிற்றுக் கிழமை கூட்டம் முடிந்த உடனேயே கூடத்தின் வாடகை, ஒலிப்பெருக்கியின் வாடகை இவையெல்லாம் செலுத்தியாக வேண்டும். ஆபிரகாமினிடத்தில் பணமில்லை. லண்டன் மிஷன்

சொன்னார்கள். "இனிமேல் நான் இங்கு வரமாட்டேன் நீங்களும் என் வீட்டிற்கு வரக்கூடாது". என்று சொல்லி விட்டு சென்றார்கள். அதன்பிறகு பாரம்பரிய சபையின் பாதிரியாரை அழைத்து எனக்கு பாவசங்கீர்த்தனம் செய்யவேண்டும், திருவிருந்தில் பங்கெடுக்க வேண்டும். "என்னை மன்னித்துவிடுங்கள்" என்று சொன்னார்கள். பாதிரியார் ஒத்துக்கொண்டு திருவிருந்து கொடுத்தார். அதோடுகூட அந்த பெண்மணி வியாதிப்பட்டாள். குணமாக்க முடியாத பெரும் வியாதியினால் அவதிப்பட்ட அவர்கள் அந்த ஊரையே கூட்டுமளவிற்கு உரத்த சத்தமிட்டு கொண்டு மரித்தார்கள். அவர்கள்மேல் தேவனுடைய கோபம் அவ்வளவு பயங்கரமாயிருந்தது. மரணம்வரையிலும் உண்மையோடு இருந்தால்தான் மதிப்பு என்றார் ஆபிரகாம்.

சபையைச் சேர்ந்த ஒருவர் தன் மனைவியுடன் வந்தார். ஆபிரகாம் ஜெபித்து முடிந்தவுடன் ஒரு உறையை கொடுத்தார்கள். அதில் தாராளமாக பணமிருந்தது. எல்லா செலவுகளுக்கும் அது போதுமானதாக இருந்தது. செய்தி கொடுத்த துரை ஐந்து ரூபாய் கொடுத்தார். மறுநாள் காலையில் ஆபிரகாம் கடை வீதிக்குச் சென்று ஒரு பெரிய மீனை ஒரு ரூபாய்க்கு வாங்கினார். ஆபிரகாமும் குடும்பமும் அந்த நாளில் நன்றாய் சாப்பிட்டார்கள். கர்த்தர் பெரியவர் என்று ஆபிரகாம் சாட்சி பகருகிறார்.

ஆபிரகாமின் அறுபது ஆண்டு கால விசுவாச வாழ்க்கையில், ஊழியத்தில் யாரிடமும் பணம் கேட்டதில்லை என்று சொன்னால் ஆச்சரியப்படாமல் வேறென்ன செய்வது?

ஊழியத்திற்கு சைக்கிள் - ஒரு பழைய சைக்கிள் இருபத்தி ஐந்து ரூபாய் விலைக்கு வாங்கினார் ஆபிரகாம். அந்த சைக்கிளில் சென்று திருவனந்தபுரத்தின் பல பகுதிகளில் ஊழியம் செய்தார். மிகவும் பழைய இந்த சைக்கிளை பார்த்த ஒரு பொறியாளர் அதைக் கூடிய சீக்கிரம் விற்றுவிடச் சொன்னார். ஆபிரகாம் அந்த சைக்கிளை அதே இருபத்தி ஐந்து ரூபாய்க்கு விற்றார். அந்தப் பொறியாளர் ஆபிரகாமிற்கு ஒரு புதிய சைக்கிள் வாங்கிக் கொடுத்தார். அதன் பிறகு ஆபிரகாமின் பயணங்களெல்லாமே அந்த இரட்சிக்கபடாத பொறியாளரின் அன்பளிப்பான சைக்கிளிலேதான்.

பிறவம் என்ற ஊரில் ஊழியம் செய்த நாட்களில் ஆபிரகாம் சுவிசேஷக் கூட்டம் ஒன்றை ஒழுங்கு செய்தார். கூட்டத்திற்கு வருபவர்களுக்கு நான்கு வேளை உணவளிக்கப்படும் என்று விளம்பரம் செய்தார். கணக்குக் கேட்பவர்கள் அன்பளிப்பு

தரவேண்டாம் அன்பளிப்பு தருகிறவர்கள் கணக்கு கேட்க கூடாது என்பது அவருடைய நிபந்தனை கூட்டங்கள் வியாழக்கிழமை துவங்கயிருந்தது. புதன்கிழமை அந்தப் பகுதியிலிருந்த ஜாக்கோபேட் சபையின் பாதிரியார் அரை மூட்டை அரிசியும் ஐம்பது தேங்காயும் கொடுத்தனுப்பினார். இன்னும் பாரம்பரிய சபையை சேர்ந்தவர்கள் அநேகர் அரிசி, தேங்காய், சேனைக்கிழங்கு, வாழைக்காய் முதலியன கொண்டு வந்து கொடுத்தார்கள். சமையலுக்கு வேண்டிய பொருட்கள் இடம்கொள்ளாத அளவுக்கு நிறைந்து வழிந்தது. சிலர் பணம் கொடுத்து உதவினார்கள். செய்தி கொடுத்த துரை பாதிரியாரின் இல்லத்தில் தங்கினார். கூட்டங்கள் மிகவும் ஆசீர்வாதமாக நடந்து முடிந்தது. அநேகர் இரட்சிக்கப்பட்டார்கள். மீதி இருந்த பொருட்களால் வாரந்தோறும் சில நாட்களுக்கு கூட்டத்திற்கு

*கேரளாவிலுள்ள ஒரு சபையில் ஆபிரகாம் துணை ஊழியக்காரராக இருந்தார். எல்லா கூட்டங்களிலும் ஒரு பெண் அந்நியபாஷையில் பேசுவாள். ஒரு வாலிபன் இந்த பெண்ணின் அந்நியபாஷைக்கு வியாக்கியானம் செய்வான். அடுத்தமுறை அந்த வாலிபர் அந்நியபாஷையில் பேசுவான் அந்தப் பெண் அதற்கு வியாக்கியானம் சொல்வாள். கூட்டம் முடிந்து வெளியே வந்தால் இருவரும் தாங்கள் கண்ட தரிசனங்களை பற்றி பேசிக்கொண்டிருப்பார்கள். "நான் ஒரு பன்றியை பார்த்தேன். அதின் வால் நீட்டமாக கறுப்பு நிறத்தில் இருந்தது" இப்படியெல்லாம் பேசுவார்கள். வாலிபராயிருந்த ஆபிரகாமிற்கு விஷயம் புரிந்து விட்டது. ஆபிரகாம் சபை போதகரிடம் "இது சரியல்ல"*

பெருமக்களுக்கு உணவு கொடுக்க முடிந்தது. சில மாதங்களுக்கும் பிறகு ஒரு சம்பவம் நடந்தது. பாரம்பரிய சபையை சேர்ந்த வர்கீஸ் என்ற ஒருவர் ஞாயிறு சபைக்கூட்டம் நடந்துகொண்டிருந்த போது இரண்டு பெரிய நேந்திரங்காய் தாறுடன் வந்தார், அவைகளை சபைக் கூடத்தின் ஒரு மூலையில் வைத்துவிட்டு அவர்

என்று கூறினார். ஆனால் அவருக்கு அது பிடிக்கவில்லை. அவர் சொன்னார் "நீ சின்னப் பையன் உனக்கென்ன தெரியும்? அறிவில்லை". ஆனால் நடந்தது என்ன தெரியுமா? பறையர் சமுதாயத்தை சேர்ந்த அந்த வாலிபன் சிறியன் கிறிஸ்தவ சமுதாயத்தை சேர்ந்த அந்த பெண்ணை மணந்தான். இரண்டு குழந்தைகளான பிறகு மற்றொரு பெண்ணுடன் ஓடிவிட்டான். இவ்வாறான சில இரகசிய நோக்கங்களுடன் சபையில் நுழைபவர்கள் உண்டு. இந்நாட்களிலும் தங்களுடைய விருப்பங்களை சபையில் நிறைவேற்றுபவர்கள் உண்டு. இதன் விளைவோ கசப்புத்தன்மையே என்று கூறவேண்டியதில்லையே. அவமானமும் தாழ்வு மனப்பான்மையும் அடுத்த தலைமுறைகளையும் கூட தொடர்ந்து பிடிக்கும் இதுதான் உண்மை. அநேக நாட்களுக்கு பிறகு ஆபிரகாம் அந்த சபைக்கு சென்றபொழுது நிர்பாக்கியவதியான அந்த பெண்மணி வந்து ஆபிரகாமின் கைகளைப் பிடித்துக்கொண்டு இவ்வாறு கூறினார்கள். "டேய் குட்டப்பா அன்று நீ கூறியது முற்றிலும் உண்மையாயிருந்தது".

சற்று தூரமாக அமர்ந்தார். அதே சபையை சேர்ந்த ஏலி என்பவர்கள் ஒரு சேவலையும் கொண்டுவந்தார்கள். கூட்டம் முடிந்தவுடன் சபை செயலாளர் "இந்த பொருள்களெல்லாம் ஏலம்விட போகிறேன்"என்று சொன்னார் அப்பொழுது ஆபிரகாம் எழுந்து "இது என்ன? ஏலமிடுவதற்கு இது சந்தையா" என்று கேட்டார். அப்பொழுது எல்லோரும் சிரித்தார்கள். அங்கு அமர்ந்திருந்த வர்க்கிஸ் என்பவர் எழுந்து "இது ஏலம் போடுவதற்காக நான் கொண்டு வரவில்லை. பாதிரியாருக்கு சாப்பிடத்தான் கொண்டுவந்தேன்" என்று சொன்னார். அப்பொழுது ஏலி என்ற சகோதரியும் எழுந்து "பாதிரியாருக்கு கோழிக்கறி மிகவும் பிடிக்கும் என்பதால் அவர் சமைத்து சாப்பிடத்தான் சேவலை கொண்டு வந்தேன்" என்றார்கள். அப்பொழுது போதகர் ஆபிரகாம் சேவலினிடத்தில் இவ்வாறு சொன்னார் : "சேவலே! உனக்கு இங்கு வருவதற்கு அதிகாரமில்லை, ஆகையால் நான் உனக்கு மரணதண்டனை அளிக்கிறேன்; காலையிலே உன் தலை வெட்டப்படும். அதன் பிறகு உம் ஆடைகளெல்லாம் உரிந்து உம்மை துண்டு துண்டாக வெட்டப்படும். பிறகு மசாலா போட்டு கொதிக்கும் எண்ணையில் குளிப்பாட்டி உன்னை கறுக்கு, மொறுக்குனு தின்பேன்" என்றார். அதன் பிறகு ஒருவரும் ஒன்றும் பேசவில்லை. பிறவம் எனுமிடத்தில் நான்கு வருடங்கள் செய்த ஊழியம் மிகவும் ஆசீர்வாதமாக அமைந்தது.

தமிழ்நாட்டில் ஸ்ரீவைகுண்டம் என்ற இடத்தில்தான் ஆபிரகாம் முதலாவதாக ஊழியம் ஆரம்பித்தார். இப்பொழுதும் அவர் அங்கேதான் ஊழியம் செய்கிறார். ஆரம்ப நாட்களில் ஆபிரகாமும் குடும்பமும் பலவிதமான கடுமையான சூழ்நிலைகளினூடே கடந்துபோக வேண்டியிருந்தது. சொந்த ஊரில் படித்துக் கொண்டிருக்கும் மகன்,

அவருடைய செல்லமகள், மகள் [illegible] அப்பொழுது குழந்தையாக இருந்தாள். சகிக்கமுடியாத பட்டினி வரும்பொழுது "தமிழ்நாட்டிற்கு வரக் கர்த்தர் சொன்னாரா?" மனைவி சின்னம்மாள் பலமுறை கேட்டிருக்கிறாள். இப்படியாக இருந்த ஒரு குறிப்பிட்ட காலத்தில் சில நாட்கள் உணவில்லாமல் இருந்தோம். மகள் "இட்லி, இட்லி" என்று சொல்லி அழ ஆரம்பித்தாள். போதகர் சாய்வு நாற்காலியில் படுத்து கொண்டு கண்களை உயர்த்தி கர்த்தரிடத்தில் இவ்வாறாக கூறினார் "நாளைக்கு எங்களுக்கு உணவு கொடுக்க வேண்டும். கொடுத்துதான் ஆகனும். இல்லையென்றால் நமக்குள்ளே தகராறு வரும்". அடுத்த நாள் காலையில் யாரோ கதவை தட்டுகிற சத்தம் கேட்டு கதவை திறந்தார். ஒரு பெண்மணியும் புருஷனும் வெளியே நின்று கொண்டிருந்தார்கள். "யார் நீங்கள்?" என்று கேட்டார் போதகர். "இயேசுவை ஆராதிக்கிறவர்களாகிய ஒரு கூட்டம்" என்று பதில் வந்தது. "நாங்கள் உடனே வருவோம் எங்கேயும் போகாதீர்கள்" என்று சொல்லிவிட்டுச் சென்றார்கள். சற்று நேரத்திற்குப் பிறகு இட்லி சாம்பார் எல்லாம் வாங்கிக் கொண்டு வந்தார்கள். ஒரு இட்லியை எடுத்து மகளின் வாய்க்குள் வைத்தார். அங்கேயே அமர்ந்தபடி போதகர் மூன்று இட்லியைச் சாப்பிட்டார். பல் துலக்கவில்லை என்பது பிறகுதான் நினைவுகூர்ந்தார். பசியின் கொடுமை அவ்வளவு அதிகமாயிருந்தது. "நீங்கள் இதை இங்கே கொண்டு வர காரணம்?" என்ற போதகரின் கேள்விக்கு "நான் அனுப்பின என்னுடைய ஊழியர்கள் பசியாயிருக்கிறார்கள் அவர்களுக்கு நீ உணவைக் கொடு" என்று கடவுள் அவர்களோடு பேசியதாக பதில் வந்தது. கர்த்தர் அந்த இடத்தில் சில ஆத்துமாக்களைத் தந்தார். திங்கள் கிழமையிலும், வியாழக் கிழமையிலும் வேதாகம

வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டது. ஜனங்கள் பெரும் கூட்டமாக அதில் கலந்துகொண்டார்கள். போதகர் ஸ்ரீவைகுண்டம் வருவதற்கு ஒரு வருடத்திற்கு முன்னால் தென்னிந்தியத் திருச்சபையை சேர்ந்த ஒருவருக்கு ஒரு தரிசனம் உண்டாயிற்று "தேவ வசனத்தை உண்மையாகக் கற்றுக்கொடுக்கும் ஒருவர் ஸ்ரீவைகுண்டத்திற்கு வருவார் என்பதுதான் அந்தத் தரிசனம். அதன் நிமித்தமாக அவர் போதகரைத் தேடிக் கண்டுபிடித்தார். மிகுந்த மகிழ்ச்சியுடனே சத்திய வசனத்தை கலப்படமில்லாது கற்றுக்கொடுக்கும் தேவ ஊழியரைக் கண்டார். அவர் தொடர்ந்து கூட்டங்களுக்கு வந்து கொண்டிருந்தார்.

ஒரு சில மாதங்களுக்குப் பிறகு திருச்சியில் ஒரு தொடர்கூட்டம் நடந்தது. போதகர் அங்கு சென்றார். போதகர் கெ. ஜெ. ஆபிரகாமிற்கு ஸ்ரீவைகுண்டத்தில் எந்த ஊழியமுமில்லையென சில முக்கியமான நபர்கள் அங்கு வந்த துரையிடம் கூறினார்கள். அது மட்டுமின்றி மற்ற இடங்களுக்கு சென்று கூட்டங்களில் பேசுகிறார் என்றும் குறைகூறினார்கள். ஆனபடியால் போதகரை கேரளாவிற்கு அனுப்பவேண்டும் என்பது அவர்களுடைய கோரிக்கை. இது உண்மைதானா என்று துரை போதகரிடம் விசாரித்தார். ஞாயிற்று கிழமைகளில் ஸ்ரீவைகுண்டத்தில் ஆராதனை இல்லையென்றும் அவர்கள் கூறியிருந்தார்கள். போதகர் திடீரென்று எழுந்து இவ்வாறு கேட்டார் : "எங்கள் மாநில கண்காணியாளர் (State Overseer) ஆந்திராவில் விசேஷ கூட்டங்களுக்கு சென்றது உண்மைதானா?" "என்னை பற்றிப் பேசுவதற்கு உங்களுக்கு அதிகாரமில்லை" என்றார் கண்காணியாளர் போதகரிடம். எல்லோரும் இந்தக் கண்காணியாளருக்கு பயப்படுவார்கள். ஆனால், போதகர் இதற்கெல்லாம் பயப்படாதவர். எட்டாம் வகுப்பு வரை

ஸ்ரீவைகுண்டம் சபை கூட்டங்களில் நான் கலந்து கொண்டுள்ளேன். லோகத்து சபை கூட்டங்களிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாக அவைகள் காணப்பட்டது. எல்லா மாதமும் இரண்டாவது வெள்ளி சனி நாட்களில் உபவாச ஜெபம். ஒரு சிலர் சபைக் கூடத்திலேயே தங்குகிறார்கள். பழைய ஓர் இரண்டு மாடி கட்டிடம் கீழ் மாடியில் ஆபிரகாம் தங்கியிருக்கிறார். ஸ்நானத்திற்கான தண்ணீர் தொட்டியும் கீழேதான் உள்ளது. மேலே கூட்டங்கள் நடைபெறுகிறது. சர்ச் ஆப் காட் இன் இந்தியா (Church of God in India) என்று ஆங்கிலத்திலும், இந்திய தேவசபை என்று தமிழிலும் பெயர் பலகை வைத்த அந்த இரண்டு மாடி கட்டிடம். ஸ்ரீவைகுண்டம் பேருந்து நிலையத்தின் எதிரிலேயே உள்ளது. இரண்டு மூன்று கட்டிடங்களுக்கு அப்பால் த பெந்தெகொஸ்தே (The Pentecost Mission) மிஷனும் இருக்கிறது. அது ஐம்பது வருடங்களுக்கு முன்னே ஆரம்பிக்கப்பட்டது. அங்கு நாற்பது பேர் கூடி வருவதாக அறிந்தேன். அங்கே பாடல் முடியும் போது இங்கே பாடல் ஆரம்பிக்கும். ஞாயிற்றுக்கிழமைகளில் அவர்களும் நம்மை போலவே சங்கீதம் வாசிக்கிறார்கள். அதற்கு பிறகு ஒருவர் எழுந்து பழைய ஏற்பாட்டின் ஒரு அதிகாரத்தை வாசிப்பார். பிறகு வேறொருவர் புதிய ஏற்பாட்டின் ஒரு அதிகாரத்தை வாசிப்பார். பிறகு சாட்சிக்கான நேரமுண்டு ஒரு சிலர் மாத்திரம் சாட்சி சொல்வார்கள். ஏதாவது விசேஷமாக இருந்தால் சொல்வார்கள். அதனால் கொட்டாவியும் சிறுபிள்ளைகளின் விளையாட்டும் இல்லாமல் அந்த பகுதியும் முடிந்துவிடும். அதற்கும் பிறகு காணிக்கை. அதற்கான

மேஜைமேல் ஒரு பெட்டி வைக்கப் பட்டிருக்கிறது. ஒரு பாடல் பாடிக் கொண்டே காணிக்கை எடுப்பார்கள். பிறகு ஆபிரகாம் உட்கார்ந்து கொண்டே செய்தி கொடுப்பார். சரீர பெலவீனத்தினால் அவ்வாறு செய்கிறார். விசுவாசி களுக்கு வசனம் கற்றுக் கொடுப்பார். கூடவே பெலப் படுத்தும் ஆலோசனைகளும் இருக்கும். அதன்பிறகு கர்த்தருடைய பந்தி. அது நாம் செய்வது போலவேதான். அதன் பிறகு ஜெபம், ஆசீர்வாதம் ஒவ்வொருவராக வரிசையில் வந்து ஆபிரகாமின் முன் முழங்காலிடு வார்கள். ஆபிரகாம் தலையில் கைவைத்து ஆசிர்வதித்து அனுப்புவார். அதன்பிறகு அம்மாவிடம் செல்வார்கள். அவர்கள் ஜெபிப்பார்கள். அதன்பிறகு பாய்கள் எடுத்து வரிசையாக அமருவார்கள். எல்லாருக்கும் சில்வர் (Stainless Steel) தட்டுகள் கொடுத்து அதில் சாதம், சாம்பார், கூட்டு போன்றவைகள் பரிமாறுவார்கள். எல்லோரும் உணவிற்கு பிறகு தட்டுகள் கழுவுமிடத்தில் தட்டைவைத்து விட்டு கைகள் கழுவிச் செல்வார்கள். தட்டுகள் கழுவுகிறவர்கள் அதை செய்வார்கள். அதற்குப் பிறகு ஓய்வு எடுத்துக் கொள்ளலாம். மாலையில் அருகிலுள்ள கிராமங்களுக்குச் செல்வார்கள். ஒலிபெருக்கி மூலம் செய்தி கொடுப்பார்கள். பெண்கள் செய்தி கொடுப்பார்கள். ஆபிரகாம் பக்கத்தில் எங்கேயாவது உட்கார்ந்திருப்பார். இந்த ஊழியங்களில் என்னை அதிகமாக கவர்ந்தது அமைதியான உபவாச ஜெபமும் முற்றிலும் மாறுப்பட்ட ஞானஸ்நானமுமேயாகும்.

மாத்திரம் படித்த போதகர் இவ்வாறு சொன்னார்: "ஷட் அப் யுவர் மவுத். டோன்ட் ஸ்பீக் எனி வேர்ட். ஐயாம் ஸ்பீக்கிங் டு அவர் மிஷனரி" ("Shut up your mouth don't speak any word. I am speaking to our missionary") பெருமை வாய்ந்த ஓவர்ஸியர் தலைகுனிந்து உட்கார்ந்தார். அப்பொழுது துரை போதகரிடம் இவ்வாறு சொன்னார்: "நீங்கள் எங்கே செல்வதற்கும் உங்களுக்கு சுதந்திரம் உண்டு" அப்பொழுது போதகர் மிஷனரியிடம் "திங்கள் கிழமையும் வியாழக்கிழமையும் ஸ்ரீ வைகுண்டத்தில் வேதாகம வகுப்பு நடைபெறுகிறது. அதில் ஏதேனும் ஒருநாள் தாங்கள் வரவேண்டும்" என்று சொன்னார். "எப்பொழுது வரவேண்டும் என்பதை சரியாக சொல்லுங்கள்" என்றார் மிஷனெரி. ஆனால், போதகரோ "நீங்கள் வருகிற நேரம் சரியாக அறிந்தால் நான் ஆட்களை கூலி கொடுத்து கொண்டு வந்து சபைக்கூடத்தை நிரப்புவேன். ஆதலால் அது வேண்டாம் நீங்கள் எப்பொழுது வேண்டுமானாலும் வாருங்கள்" என்று சொன்னார். இதை கேட்ட துரை சிரித்தபடியே "அடுத்த வியாழக்கிழமை நானும் மனைவியும் மொழிபெயர்ப்பதற்காக போதகர் பிரதாப் சிங்கும் வருவோம்" என்றார். துரை சொன்னபடியே வந்தார். பெரிய ஜனக்கூட்டத்தை கண்டார். ஊழியத்தின் மூலம் இரட்சிக்கப்பட்டவர்கள் கைகளை உயர்த்துங்கள் என்றார் மிஷனெரி. அநேகர் கைகளை உயர்த்தினார்கள். "ஞானஸ்நானம் எடுத்தீர்களா?" என்ற கேள்விக்கு "போதகர் சொல்லும் போதுதான் எடுப்போம்" என்று பதிலளித்தார்கள். "போதகருக்கு தமிழ் தெரியுமா?" என்ற மிஷனெரியின் அடுத்த கேள்விக்கு "தமிழ் தெரியாது. ஆனால், தமிழும் மலையாளமும் ஆங்கிலமும் கலந்து பேசுவதால் எங்களுக்கு

புரிகிறது" என்று அவர்கள் பதிலளித்தார்கள். மத்திய அலுவலகத்திலிருந்து எவ்வளவு ரூபாய் கிடைக்கும் என்று போதகரிடம் கேட்டார். ஐம்பது ரூபாய் கிடைக்குமென்றார் போதகர். அடுத்த மாதம் முதல் நூறு ரூபாய் கொடுப்பார்கள். என்று சொன்ன மிஷனெரி ஜனங்கள் போய்விட்ட பிறகு நூறு ரூபாயை போதகரிடம் கொடுத்தார். "ஐயா இந்த பணத்தை இந்த தேவபிள்ளையிடம் (பக்கத்தில் ஒருவர் நின்று கொண்டிருந்தார்) கொடுங்கள். ஏனெனில், அவருடைய மனைவி காசநோயினால் அவதிப்படுகிறாள், வறுமையிலும் இருக்கிறார்கள்" என்று சொன்னார் போதகர். வியந்து போன அந்த வெள்ளைக்கார மிஷனரி அதற்குக் கீழ்ப்படிந்தார். ஆனால் போதகர் ஆபிரகாமிற்கும் நூறு ரூபாய் கொடுத்த பிறகுதான் அவர் திரும்பிச் சென்றார். அடுத்த ஆலோசனை கூட்டத்தில் துரை இவ்வாறு சொன்னார் "கெ. ஜெ. ஆபிரகாம் நீங்கள் நினைப்பது போலுள்ள ஒருவரல்ல. எதையும் ஒளிவு மறைவில்லாமல் பேசுபவர். அது ஒரு மலையாளியின் குணாதிசயம்." எவரும் ஒன்றும் பேசவில்லை. இப்படியாக அந்நாட்களில் இருந்த பிரதிகூலமான புயல் ஒடுங்கியது. அதன் பிறகும் உயர்ந்த பதவியில் இருப்பவர்களிடமிருந்து எதிர்ப்புகள் வந்தபொழுதும் சங்கதிகள் போதகருக்கு அநுகூலமாகவே இருந்தது.

இப்படியிருக்க கர்த்தர் நாசரேத்திலே ஒரு வாசலைத் திறந்தார். அங்கேயும் ஒரு சபை உருவெடுத்தது. ஒவ்வொரு மாதமும், இரு இடங்களில் வேதாகம வகுப்புகள் (இப்பொழுதும்) நடைபெறுகிறது. அது மட்டுமல்ல சபையில் எல்லா மாதமும் மூன்றாவது ஞாயிற்றுக்கிழமை ஆராதனையிலும் கலந்துகொள்கிறார்.

போதகரைக் கவனித்து பிறகு போதகர் வட இந்தியாவிலிருந்து சென்றார். அங்கே கூடாரத்தில் சகோதரிகளும் கூட்டங்கள் நடத்தினார். கைப்பிரதி அச்சிடுவதற்கு பணம் இல்லாததால் ஒரு ரூபாய்க்கு வெள்ளை காகிதம் வாங்கி கையினால் எழுதி ரெயில் வண்டியின் பெட்டிகளில் ஒட்டினார். அநேகர் கூடிவந்தார்கள். நிறையபேர் இயேசுவை ஏற்றுக் கொண்டார்கள். குருடர் பார்வையடைந்தார்கள், செவிடர் கேட்டார்கள். முடவர் நடந்தார்கள். "ஐ கான் ஸீ" என்று சத்தமிட்டுக் கொண்டே ஒரு வாலிபன் ஓடி வந்தான். அங்கேயும் மிஸோராமிலேயும் கர்த்தர் போதகர் மூலம் வல்லமையான காரியங்கள் நிகழ்த்தினார். மிஸோராமில் இருபத்தியேழு நாட்கள் ஊழியம் நடந்தது. ஒருநாள் ஒரு வாலிபர் ஒரு பாம்பை கொண்டு செல்வதை பார்த்தார். இரவிலே போதகர் சாப்பிட உட்கார்ந்தார் இறைச்சிக் குழம்பும் இருந்தது. சாப்பாடு முடிந்தவுடன் ஒருவர் இறைச்சிக் குழம்பு நன்றாக இருந்ததா என்று வினவினார். "ருசியாக இருந்தது" என்று பதிலளித்தார் போதகர். "அந்த வாலிபர் கொண்டு சென்ற பாம்பைதான் நீங்கள் ருசியோடு சாப்பிட்டீர்கள்" என்றார் அவர். அங்கிருந்து தொலைவிலுள்ள ஓர் இடத்திற்கு கூட்டங்களுக்கு சென்றார். அங்கு சமையல் அறையும் படுக்கை அறையும் ஒன்றாகத்தான் இருந்தது. ஒரு தாயார் மீன் ஆய்ந்துக் கொண்டிருந்தார். அதைக் கழுவாமலேயே குழம்பாக்கினார்கள். "மீனை ஏன் கழுவவில்லை" என்று கேட்டார் போதகர். எல்லோரும் ஒருமித்து கூட்டமாக சிரித்தார்கள். தென் இந்தியர்களுக்கு அறிவே இல்லை என்றார்கள். "இது பிறந்ததும் நீரில்தான்; வளர்ந்ததும் நீரில் தான்; இப்பொழுது பிடித்ததும் நீரிலேயிருந்து தான். பிறகு எதற்கு கழுவ வேண்டும்?" என்பது அவர்களுடைய

நியாயம். அது உண்மைதான் என்று போதகரும் ஒத்துக் கொண்டார். இருபத்தியேழு நாள் ஊழியத்திற்குப் பிறகு விமான நிலையத்திற்கு வந்தார் போதகர். இப்போது விமானமொன்றும் பறப்பதில்லை என்று ஒருவர் சொன்னார். ஆண்டவரே நான் எப்படி தமிழ்நாட்டிற்கு போய் சேருவேன் என்று போதகர் அழுதார். அப்பொழுது விமானநிலைய கட்டிடத்திலிருந்து ஒரு அதிகாரி வந்து மலையாளத்தில் போதகரை உள்ளே அழைத்தார். போதகர் சென்ற உடன் காப்பியும், பலகாரங்களும் கொடுத்து விருந்தோம்பினார். கல்கத்தாவிற்கு செல்லும் விமானம் உடனே வந்துவிடும் என்றார் அவர். அப்படியாக போதகர் கல்கத்தா வந்து சேர்ந்தார். அங்கிருந்து மற்றொரு விமானத்தில் சென்னை வந்தடைந்தார். மிஸோராமிற்குத்தான் போதகர் முதல் முறையாக விமானத்தில் பயணம் செய்தார். அப்பொழுது கல்கத்தாவிலிருந்துதான் புறப்பட்டு சென்றார். அன்று போதகர் ஆபிரகாம் பயந்தார். விமானம் மலைகளுக்கு மேலே பறந்து செல்வதை போதகர் கீழே பார்த்தவுடன் புரிந்துக்கொண்டார். “ஆண்டவரே பேருந்தில் பயணம் செய்ய பணமில்லாததால் நடந்தே சென்றுகொண்டிருந்த முண்டக்கயம் குட்டப்பனுக்கு நீர் விமானத்தில் செல்வதற்கு பாக்கியம் தந்தீரே” என்று கர்த்தரிடம் கேட்டார். “நீ இப்பொழுது சில மணி நேரம் மாத்திரம் விமானத்தில் பறப்பாய், ஆனால் வரும் நாட்களில் அநேக மணி நேரங்கள் விமானத்தில் பறந்து பிறகு மற்றொரு விமானத்தில் ஏறி திரும்பவும் பலமணி நேரங்கள் விமானத்தில் பறக்கப் போகிறாய்” என்று கர்த்தர் சொன்னார். கர்த்தர் தந்த அந்த வாக்குத்தத்தம் மூன்று முறை நிறைவேறியது. பிற்காலத்தில் அமெரிக்காவிற்கு சென்றபொழுது அது நிகழ்ந்தது.

போதகர் எங்கெல்லாம் ஊழியம் செய்தாரோ அங்கெல்லாம் ஆத்துமாக்கள் இரட்சிக்கப்பட்டு சபைகள் உருவெடுத்தன.

பல ஆண்டுகளுக்கு முன் மதுரை தமுக்கம் மைதானத்தில் வைத்து தெய்வீக சுகமளிக்கும் கூட்டம் நடத்துவதற்கு ஏதுவுண்டாயிற்று. அந்த கூட்டங்கள் ஒரு வாரகாலம் நடைபெற்றது. ஜனம் திரளாகக் கூடியிருந்தார்கள். அநேகருக்கு சுகம் கிடைத்தது. அநேகர் இரட்சிக்கப் பட்டார்கள். இங்கேயும் "எனக்கு கண் நன்றாய் தெரியுதே" என்று சொல்லிக் கொண்டு ஒருவர் குதித்தெழுந்தார். கர்த்தர் கிரியை செய்தார். கூட்டம் முடிந்தவுடன் ஒலிபெருக்கி முதலானவைகளின் வாடகை கொடுத்தார். எல்லோருக் காகவும் ஜெபித்தார். கிறிஸ்தவனாக மாறினதால் வீட்டிலிருந்து வெளியேற்றப்பட்ட, கருணாநிதி எனும் பெயர்கொண்ட வாலிபன் போதகருக்கு வேண்டிய தெல்லாம் செய்து கொடுத்தான். உனக்கென்ன வேண்டும் என்று தேவனுடைய தாசன் கருணாநிதியிடம் கேட்டார். எனக்கு ஒன்றும் வேண்டாம் இரு கரங்களும் என் தலையில் வைத்து என்னை ஆசீர்வதித்தால் போதும் என்றார் அந்த வாலிபர். ஜெபித்த பின்பு "நீ அமெரிக்காவிற்கு சென்று வெள்ளையர்கள் மத்தியில் ஊழியம் செய்வாய்" என்று சொன்னார் போதகர். எல்லோரும் நகைத்தார்கள். ஏன்? எதற்காக சிரிக்கிறீர்கள்? என்று போதகர் கேட்டபொழுது அவனுக்கு ஆங்கிலம் தெரியாது என்றார்கள். "அமெரிக்காவில் உள்ள எல்லோரும் ஆங்கிலம் தெரிந்தவர்களல்ல. மற்ற மொழிகள் பேசுபவர்களுமுண்டு" என்று சொன்னார் போதகர். அது எப்படி இருந்தாலும் சில மாதங்களுக்குள்ளேயே கருணாநிதி அமெரிக்கா சென்றடைந்தார். அங்கு சென்ற அவர் நன்றாக ஆங்கிலம்

கற்றுக்கொண்டார். நிலம் சொந்தமாக வாங்கி சபைக் கூடம் கட்டினார். அங்கு ஆராதனை நடத்துகிறார். என்ன ஆச்சரியம்! பிற்காலத்தில் நமது கதாநாயகன் அமெரிக்கா சென்றபொழுது ஆக்லஹோமா என்ற இடத்திற்கு அருகாமையிலுள்ள அந்தச் சபைக்கு சென்று எட்டு நாள் ஊழியம் செய்தார். இரண்டு வருடங்களுக்கு முன் கருணாநிதி ஸ்ரீவைகுண்டம் சபைக்கு வந்து மூன்று நாள் கூட்டங்கள் நடத்திவிட்டு சென்றார். இன்னமும் வருவதாக கூறிச் சென்றார்.

2003 ஆம் ஆண்டு சர்ச் ஆப் காட் (Church of God) திருவல்லா கூட்டங்களுக்கு பிறகு கேரளாவிலுள்ள பல இடங்களுக்குச் செல்ல வேண்டியதாயிற்று. ஆனதினால் தமிழ்நாட்டை சேர்ந்த ஊழியர்களுக்கு உதவி செய்ய கர்த்தருடைய தாசனிடத்தில் பணம் இல்லாதிருந்தது. அந்த நேரம் கருணாநிதி என்ற சகோதரன் போதகருக்கு ஒரு பெரும் தொகை அனுப்பிக் கொடுத்தார். அதை முழுவதும் ஊழியர்களுக்கு கொடுத்தார். அவர் அதிலிருந்து சிறிதும் தனக்கென்று எடுத்துக்கொள்ளவில்லை. அன்று ஆண்டவர் கருணாநிதியை சந்தித்ததினால் இங்குள்ள ஊழியக்காரர்களுக்கு உதவி செய்ய பலமுறை கர்த்தரால் தருணமுண்டாயிருக்கிறது. ஆண்டவர் கருணாநிதியை ஆசீர்வதிக்கட்டும் என்பதுதான் போதகரின் ஜெபம்.

பாளையங்கோட்டையில் சைமன் என்பவர் ஆண் குழந்தையில்லாததால் மிகவும் அவதிப்பட்டார். அவருக்கு இரண்டு பெண் குழந்தைகள் இருந்தார்கள். ஒரு ஆண் குழந்தைக்காக போதகரிடம் ஜெபிக்கச் சொன்னார். அடுத்த வருடம் உனக்கு ஓர் ஆண் குழந்தை பிறக்கும் என்று

சொன்னார் போதகர். போதகர் கூறின வண்ணம் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. தேவனுடைய தாசன் அவனுக்கு ஆபிரகாம் என்று பேர் வைத்தார்.

கேரளாவில் ஊழியம் செய்யும் நாட்களில் (இடத்தின் பெயர் சொல்ல விரும்பவில்லை) ஒரு நாள் ஆராதனைக்கு மத்தியில் இவ்வாறு உரத்த குரலில் கூறினார். "ஜோசப் அண்ணே, நீங்கள் தொடர்ந்து விபசாரம் செய்கிறீர்கள்" வாலிபரான போதகர் ஆபிரகாம் இவ்வாறு கூறினபோது சபை ஆச்சரியப்பட்டு அமைதியாயிற்று. ஏன் இப்படியெல்லாம்? என்று சிலர் கேள்வியெழுப்பினார்கள். அப்பொழுது போதகர் சொன்னார் "எனக்கு தெரியாது. ஆண்டவர் என்னிடம் இவ்வாறு சொல்லச் சொன்னார். நான் சொன்னேன் அவ்வளவுதான்" இந்த தீர்க்கதரிசனம் உண்மை தான் என்பது இரண்டு மூன்று நபர்களுக்குத் தெரியும். ஆராதனை முடிந்தவுடன் "முண்டக்கயம் ஆபிரகாமிற்கு சபையை நடத்தத் தெரியாது. ஆகையினால், வேறொருவரை கொண்டு வந்து இவரை இங்கிருந்து மாற்றிவிட வேண்டும்" என்றார்கள். அதற்குப் பிறகுதான் அவர் முண்டக்கயத்திற்கு மாற்றப்பட்டது. ஆனால், சில நாட்களுக்கு பிறகு ஜோசப் என்பவரின் இரண்டு குமாரர்கள் ஒரு கூட்டத்தில் வைத்து ஆவியில் நிறைந்து அவர்களின் தகப்பனாரின் தலையின் மேல் கைகளை வைத்து இவ்வாறு சொன்னார்கள். "மகனே நீ தொடர்ந்து பாவத்திலே வாழ்ந்து வருகிறாய் என்ற உண்மையை அறிவித்த முண்டக்கயம் குட்டப்பன் என்ற என் தாசனை நீ புண்படுத்தி அவனைக் கண்ணீரோடு இங்கிருந்து அனுப்பிவிட்டாய். தேவனுடைய கோபம் உன் மேல் வரும்" ஒரு சிறு குழந்தையை போல அந்த மனிதன் அழுதார். மனம் வருந்தி திரும்ப வந்தார். ஆண்டவரோ அவரை ஆசீர்வதித்தார்.

கேரளாவில் கல்வியை முடித்துக் கொண்ட மகன் அச்சன் குஞ்சு பி. ஏ. பட்டப் படிப்பை தூத்துக்குடியில் முடித்தார். எம். ஏ. பி.எட். பாளையங்கோட்டையில் சி. எஸ். ஐ. கல்லூரியில் படித்து தேர்ச்சி பெற்றார். அங்கு பேராசிரியராக பணியாற்றிய திரு. குருபாதம் என்பவர் பலமுறை தேவதாசனுடைய மகனுக்கு பணம் கொடுத்து உதவி செய்வதுண்டு. ஒரு திங்கள்கிழமை காலையில் கல்லூரிக்கு செல்வதற்கு முன் மகன் 300/- ரூபாய் தேவை என்று கூறினான். இருந்த பணம் முழுவதும் தேடி எடுத்தபொழுது சரியாக 300/- ரூபாய் இருந்தது. மதியம் மகன் வீட்டிற்கு வந்து இன்னமும் 300/- ரூபாய் வேண்டுமென்று கேட்டான். தேவனுடைய தாசர் கைவிரித்தார். ஜெபித்தால் கிடைக்குமென்றார் போதகர். மகன் தாயுடன் பேசிக்கொண்டிருந்தான். அப்பொழுது ஒரு தபால்காரர் வந்தார். மணியார்டர் உண்டா என்று கேட்டார் இல்லை என்று சொல்லிவிட்டு சென்றார் தபால்காரர். அப்பொழுதும் நம்பிக்கையுடன் ஜெபித்துக் கொண்டிருந்தார். ஒரு மணி நேரத்திற்கு பிறகு மற்றொரு தபால்காரர் வந்தார். "பாதர் (Father) உங்களுக்கு ஒரு தந்தி மணியார்டர் வந்திருக்கு" என்று சொன்னார். போதகர் கையெழுத்திட்டு அந்தப் பணத்தை பெற்றுக் கொண்டார். தபால்காரரிடம சற்று பணம் கொடுத்தவுடன் "வேண்டாம் ஜெபித்தால் போதும்" என்று சொல்லிவிட்டுச் சென்றார். அந்த மணியார்டரில் 300/- ரூபாய் இருந்தது. சில நாட்களுக்கு பிறகு, மத்திய அலுவலகத்திலிருந்த ஒருவரிடம் இப்படியாக 300/- ரூபாய் அனுப்புவதற்கு என்ன காரணம் என்று வினவினார். "யாரோ சில மிஷனெரிகள் அமெரிக்கா விலிருந்து வந்திருக்கிறார்கள். எல்லா ஊழியக்காரர்களை பற்றியும் விசாரித்தார்கள். அப்பொழுது அவர்கள் சொன்ன பதில்

என்னவென்று தெரியுமா? "அம்மா, இவர்களெல்லாம் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆனால், கெ. ஜெ. ஆபிரகாமிற்கு மட்டும் பணக் கஷ்டமில்லை" உடனே வெள்ளைக்காரர் சொன்னார் "ஓ... கோ... சபையில் நிறைய ஆத்துமாக்கள் உள்ளதினால் தான் கெ. ஜெ. ஆபிரகாமிற்கு பணக்கஷ்டமில்லை. ஏனென்றால் அவர் நன்றாக ஊழியம் செய்வார். ஆத்துமாக்களை ஆதாயப்படுத்துகிறார். மற்றவர்கள் எல்லாம் சும்மாயிருந்து நேரத்தை வீணாக்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆகையினால், பணக்கஷ்டம் அனுபவிக்கிறார்கள். ஆகையினால், உடனே 300/- ரூபாய் கெ. ஜெ. ஆபிரகாமிற்கு தந்தி மணியார்டராக அனுப்புங்கள்" இவ்வாறு மகனின் படிப்பு முடிந்தது.

போதகர் ஆபிரகாமும் மனைவியும் மகளை தூக்கிக் கொண்டு நடந்து போகிறதை சி. எஸ். ஐ. பிஷப் தானியேல் ஆபிரகாம் கண்டார். ஏன் இவர்கள் நடந்து செல்கிறார்கள் என்று பக்கத்தில் இருந்தவர்களிடம் கேட்டறிந்தார். வண்டிக்கூலிக்கு பணமில்லாததனால்தான் நடந்து செல்கிறார்கள் என்று சொன்னார்கள். இவர்களுக்கு வேறே குழந்தைகளுண்டா என்று கேட்டதற்கு ஒரு மகன் எம். ஏ. பி. எட் தேர்ச்சி பெற்றிருப்பதாக கூறினார்கள். மகனுடைய விலாசத்தை வாங்கிக் கடிதம் போட்டார். சான்றிதழ் களையெல்லாம் எடுத்துக்கொண்டு பிஷப்பை போய் பார்த்தார். முதல் தேதி முதல் உயர்நிலைப்பள்ளியில் வேலைக்கு சேரும்படி கூறினார் பிஷப். இவ்வாறாக. பாளையங்கோட்டை சி. எஸ். ஐ. பள்ளியில் ஆசிரியராக வேலை பார்த்து கொண்டிருந்த பொழுது ஒரு திருமண காரியம் வந்தது. வரதட்சனை எவ்வளவு வேண்டுமென்று கேட்டார்கள். பெண்ணின் குடும்ப சொத்தை தாருங்கள். இல்லையென்றால் வேண்டாம் என்று பதில் வந்தது.

புதுப்பள்ளி எனும் இடத்தில் சென்றடைந்தவுடன் ஊர் ஜனம் கூடிவந்தார்கள். பெண்ணின் தகப்பனாரின் பெயர் சாமுவேல் சார். மாப்பிள்ளையின்கூட வந்தவர்களில் அதிகமான பேரும் தமிழர்களாயிருந்தார்கள். அதைக் கண்டதினாலும் தமிழ் பேசுவதை கேட்டதினாலும் ஊர் ஜனங்கள் இவ்வாறு கூறினார்கள் "சாமுவேல் சார் அவர்களின் மகளை பாண்டிக்காரன் திருமணம் செய்தார்" தேவ தாசனுடைய மகள் லில்லி அவர்களுக்கும் மலையாளம் தெரியாது. பார்ப்பவர்களிடமெல்லாம் தடையின்றி தமிழ் பேசுவதை கண்டவுடன் ஊர் ஜனங்களுக்கு உறுதியாகிவிட்டது. "மாப்பிள்ளை வீட்டார் தமிழரே" திருமணம் மகிழ்ச்சியாக நடந்து முடிந்தது. கேரள விருந்தை உண்ட தமிழ் விசுவாசிகளுக்கும், அயலகத்தார்களுக்கும் பெரும் மகிழ்ச்சியாயிற்று. மகனின் மைத்துனர் மூலம் அமெரிக்காவிற்கு செலவதற்கான வாசல் திறக்கப்பட்டது. அவன் அமெரிக்காவில் சென்ற பிறகு வேறு சில பட்டங்களும் பெற்றான். உயர்ந்த வேலையில் அமர்த்தப்பட்டான். மனைவி செவிலியராக பணிபுரிகிறாள். அவர்களுக்கு இரண்டு பெண்பிள்ளைகள். மூத்த மகள் கல்லூரியில் படித்துக் கொண்டே ஏதோ வேலையும் செய்கிறாள். இளைய மகளும் படித்துக்கொண்டிருக்கிறாள்.

வேதாகமக் கல்வி முடித்த ஆபிரகாம் பல்வேறு இடங்களுக்குச் சென்று நற்செய்திப் பணிகள் ஆரம்பித்தார். வேதாகமம் கற்பிப்பதும் கூட்டங்களிலே செய்தி கொடுப்பதும் அவருடைய ஊழியங்களாக இருந்தது. அப்பொழுது அவர் ஏறத்தாழ 25 வயதுள்ளவராக இருந்தார். வெளிப்பிரசங்கங்களுக்காக, குந்நத்துங்கர குட்டியச்சன் என்ற பிரசித்தி பெற்ற தேவ தாசனுடன் ஆபிரகாம் செல்வது வழக்கம். முரசு கொட்ட தெரியாத ஆபிரகாம் முரசைச்

சுமந்து கொண்டு செல்வார். செய்தி கொடுக்கவும் இடத்திற்கு வந்து சேர்ந்தால் மூக்க கொட்டித் தெரிந்தவர்களை கொட்டுவார்கள். செய்தி கொடுக்க ஆசையுள்ள ஆபிரகாமிற்கு எவரும் செய்தி கொடுப்பதற்கு வாய்ப்பளிக்க மாட்டார்கள். அவ்வாறாக, சில நாட்கள் சென்றது. ஒரு நாள் யாக்கோபாய சமுதாயத்தை சேர்ந்த ஒரு தாயாரின் மகன் ஆபிரகாமை மதிய உணவிற்கு வீட்டிற்கு அழைத்தார். பெரிய விருந்துச் சாப்பாடு முடிந்தவுடன் ஆபிரகாம் சற்று உறங்கினார். அதன் பிறகு ஆபிரகாம் அந்த நண்பருடன் திருவல்லா பட்டணத்திற்கு வந்தார். ஆபிரகாமிடம் வேதாகமமும் நண்பனிடம் அவர்களின் திருப்பலி நூலும் இருந்தது. குருசடியினிடத்தில் பிரசங்கம் செய்யக் கூடாது என்று பாரம்பரிய சபையை சேர்ந்தவர்கள் தடை செய்தார்கள். அப்பொழுது ஆபிரகாம் "நான் முண்டக்கயம் ஆர்த்தடாக்ஸ் சபை கண்காணியாளரின் இரண்டாவது மகன் இங்கே நிற்பதற்கு எனக்கு அதிகாரமுண்டு" என்று சொன்னார். உமது வீட்டுப் பெயர் என்ன என்று கேட்டதற்கு "கொல்லம் பறம்பில்" என்று பதிலளித்தார் ஆபிரகாம். அப்படியானால் பிரசங்கம் செய்யலாம் என்று அவர்கள் அனுமதி வழங்கினார்கள். பிரசங்கம் ஆரம்பித்தது. "உங்கள் சபையின் இந்த பாதிரியார் சாராயம் குடிப்பவர் (பாதிரியாரும் அந்த கூட்டத்தில் நின்று கொண்டிருந்தார்) இவ்வாறு சாராயம் குடிக்கும் பாதிரியாரிடமா நீங்கள் பாவ மன்னிப்பிற்காக செல்வது?" பாதிரியார் சிரித்தபடி நின்று கொண்டிருந்தார். "இயேசு ஒருவரே பாவத்தை மன்னிக்க வல்லவர். இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு இரட்சிக்கப் படுங்கள்". நின்று கொண்டிருந்தவர்கள் அழுது புலம்பி இரட்சிக்கப்பட்டார்கள். அதற்கு பிறகு வியாதியஸ்தர் களுக்காகவும் ஜெபித்தார். அன்று மாலை நடந்த கூடுகை

விசேஷ கூட்டங்களில் இந்த ஜனங்களும் வந்து கலந்து கொண்டார்கள். "முண்டக்கயம் குட்டப்பனின் செய்தி இல்லையா" என்று அவர்கள் கேட்டபொழுது அவனுக்கு செய்தி கொடுக்கத் தெரியாது என்று கூட்டத்தை ஒழுங்கு செய்தவர்கள் பதிலளித்தார்கள். அப்பொழுது அவர்கள் ஒன்றும் பதில் கூறாமல் அமைதியாய் அமர்ந்தார்கள். ஆனால் அடுத்த நாள் சற்று தொலைவில் ஒரு தென்னந்தோப்பில் ஒரு வாரம் கூட்டம் நடைபெறுமென்று சொல்லி, செய்தியாளர் முண்டக்கயம் குட்டப்பன் என்று பேர் வைத்து கைபிரதிகளும் விநியோகம் செய்தார்கள். அந்த ஏழு நாள் கூட்டத்தில் பாரம்பரிய சபைகளிலிருந்து அநேகர் வந்து கலந்துக்கொண்டார்கள். அதற்குக் காரணமுண்டு குட்டப்பனின் செய்தியில் "சுறியானி" மொழி (பாரம்பரிய கிறிஸ்தவர்கள் கேரளாவில் திருப்பலிகளுக்கு பயன்படுத்தும் மொழி) கலந்திருக்கும். அப்போஸ்தலனாகிய பவுல் யூத மார்க்கத்தவர்களை ஆதாயப்படுத்துவதற்கு யூதர்களைப்போல ஆனார் என்று நாம் வேதத்திலே வாசிக்கிறோம். சுறியானி கலாச்சாரத்தி லிருந்து ஜனங்களை சுவிசேஷத்திற்கு திருப்புவதற்காக குட்டப்பனும் சுறியானிக்காரர்களை போலானார். அங்கு ஒரு சபை துவங்குவதற்கு இந்த கூட்டங்கள் காரணமாயிற்று.

பக்தனும் சிறந்த பேச்சாளருமாயிருந்த புத்தன்காவில் திருமேனியின் மரணச் செய்தியைப் போதகர் கெ. ஜெ. ஆபிரகாம் நினைவுகூறுகிறார். குந்நம்குளம் எனும் இடத்தில் போதகர் வேதாகமப்பாடம் நடத்திக் கொண்டிருந்தார். அதில் கலநது கொள்வதற்காக அநேகர் வந்துக் கொண்டிருந் தார்கள். அச்சமயத்தில் குந்நம்குளம் ஆர்த்தடாக்ஸ் தேவாலயத்தில் புத்தன்காவில் திருமேனியின் செய்தியை பற்றி கேள்விப்பட்டார். அது மூன்று நாள் கூட்டமாயிருந்தது.

போதகர் வேதாகம பாடத் திருத்தி விட்டார். மெய்நூரணியாளின் செய்தி கேட்க வேண்டும் என்று காரூராளையாக்குவான் அவ்வாறு செய்தார். குட்டப்பனின் மனம்திரும்புதலுக்கு காரணமானதும் புதுமையின் திருமேனியின் செய்தியல்லவா? குட்டப்பன் ஞானஸ்நானம் பெற்று பெந்தெகொஸ்தே சபையை சேர்ந்த பிறகும் திருமேனி அவனை சந்தித்தார். அப்பொழுது கேட்டார் "நீ இப்பொழுது பெந்தெகொஸ்தே சபையிலா இருக்கிறாய்? "ஆம்" என்றார் போதகர் "எவ்வளவானாலும் கொண்டும் பெந்தெகொஸ்தே சபையை விட்டு சென்றுவிடாதே" என்று கூறினார் திருமேனி. திருமேனி பாதிரியாவதற்கான கல்வி இங்கிலாந்தில் பயின்றவர். அங்கே வைத்து பெந்தெகொஸ்தே ஆராதனை என்ன என்பதை அவர் நன்கு அறிந்திருந்தார். ஆகையினால் தான் அவ்வாறு சொன்னார்.

குந்நம்குளத்தில் நடந்த அந்த கூட்டங்களில் கடைசி நாளில் திருமேனி இவ்வாறு கூறினார்: "இன்றோ, நாளையோ அல்லது நாளை மறுநாளோ நான் என்னை அன்பு வைத்தவரிடம் செல்வேன். திரும்பவும் நான் சொல்கிறேன் இன்றோ, நாளையோ நாளை மறுநாளோ நான் அன்பு வைத்தவரிடம் செல்வேன்" இதை திரும்பவும் ஒருமுறை சொன்னார். கடைசியில் "நீங்கள் யாருமே இயேசுவை விட்டுவிடக் கூடாது" என்றும் கூறினார். கூட்டம் முடிந்து எல்லோரும் போய் விட்டார்கள். ஆபிரகாம் திருமேனியிடம் சென்று இவ்வாறு கூறினார். "திருமேனி, இது ரொம்பவும் கடினமாக உள்ளது. என்னால் தாங்கமுடியவில்லை" ஆபிரகாம் அழுதார். அப்பொழுது திருமேனி: "நான் வேண்டுமென்று சொல்லவில்லை. என்னவோ தெரியவில்லை அது அப்படி வந்தது" மூன்றாம் நாளில்

திருமேனியும் இரண்டு இளம் பாதிரியார்களும் புத்தன்காவிற்கு செல்வதற்காக காரில் புறப்பட்டார்கள். ஆலுவாய் என்னுமிடத்தில் வந்தபோது ஓட்டுநரிடம் "மகனே! நிறுத்துடா" என்று சொன்னார். "நேரம் கடந்து விட்டது........ நான் போகிறேன். பரலோக தூதர்கள் அநேகர் என்னை அழைத்துக் கொண்டு செல்ல வந்திருக்கிறார்கள்" என்று கூறி கண்களை மூடினார். ஓட்டுனர் உரத்த சத்தத்தில் அழுதார். "ஆண்டவரே நான் இந்த வண்டியை ஓட்டிக்கொண்டு எவ்வாறு போவேன்..... என்னால் முடியாது" என்றார். பிறகு ஜெபித்து தைரியம் கொண்டு புறப்பட்டு வண்டியை ஓட்டிச் சென்றார். புத்தன் காவு போய் சேர்ந்தார்.

கும்பநாடு படித்துக் கொண்டிருந்த நாட்களில், வேதாகமப் பள்ளியில் பல வேளைகளிலும் சாப்பிடுவதற்கு ஒன்றுமிருக்காது. யாருக்காகிலும் நான்கு அணா கிடைத்தால் அதை வைத்து எதாகிலும் வாங்கி எல்லோரும் பங்கிட்டு சாப்பிடுவார்கள். இந்த எபிரோன்புரத்திற்கு அருகாமையில் கத்தோலிக்க சபையை சேர்ந்த ஒருவர் உணவுவிடுதி நடத்தி வந்தார். அந்த உணவுவிடுதியின் உரிமையாளர் ஆபிரகாமைப் பார்க்கும்பொழுது "குட்டப்பா, இன்று இங்குதான் இரவு சாப்பாடு. வந்து சாப்பிட்டு போ" என்று சொல்வார் "ஒருவர் பணம் தந்திருக்கிறார்" என்றும் சொல்வார். இவ்வாறு அநேக முறை அங்கிருந்து சாப்பிட்டதுண்டு. கல்வி முடித்து, எபிரோனில் இருந்து புறப்படும் போது ஆபிரகாம் உணவுவிடுதி உரிமை யாளரிடம் கேட்டார். " சாப்பாட்டிற்கு பணம் தந்துக் கொண்டிருந்தவர் யார்?" "யாரும் கொடுக்கவில்லை அது நானே குட்டப்பனுக்கு தந்தது. ஜெபித்தால் போதும்" இவ்வாறு கூறினார் அவர்.

பெரும்பள்ளி எனும் இடத்திற்கு அருகில் ஏதோ ஒரு வியாதியஸ்தராக படுக்கையாக கிடந்தார் ஆபிரகாம். அன்று பாதிரியாராயிருந்த "வானம் அய்யன்" என்பவரும் அங்கே வந்திருந்தார். இருவரும் அதிக நேரம் ஜெபத்தில் செலவழித்தார்கள். திடீரென்று ஆபிரகாம் வானம் அய்யனிடம் இவ்வாறு கூறினார். "நீங்கள் வரும் நாட்களில் பெருமிதமில்லாமலே சபையில் சேருவீர்கள்" அவர் பதில் பேசாது சிரித்தார். இந்த தீர்க்கதரிசனம் நிறைவேறியது என்று நான் சொல்லத் தேவையில்லையே.

ஸ்ரீ வைகுண்டம் சபையில் வேதாகம வகுப்புகள் ஆரம்பித்த நாட்களில் போகன், ஆபிரகாம் மற்றும் ஒரு கிராம ஊழியன் என்பவர்களெல்லாம் மாணவர்களாயிருந்தார்கள். காலையில் 10 மணி முதல் மாலை 3 மணி வரையிலும் வகுப்புகள் நடைபெறும். மதியம் மாணவர்கள் வெளியே சென்று ஓட்டலுக்கு போய் சாப்பிட்டு வருவார்கள். அதன்பிறகு திரும்பவும் வகுப்புகள் நடைபெறும். மாணவர்களுக்கு உணவு கொடுக்க வேண்டுமென்று போதகர் விரும்புவார். ஆனால், போதகரே பட்டினியாயிருக்கும்பொழுது மாணவர்களுக்கு எவ்வாறு கொடுப்பது? ஒரு நாள் சாப்பிட வெளியேச் சென்றவர்கள் திரும்பிவந்த பொழுது ஆசிரியரின் முகம் வாடியிருப்பதை கண்டார்கள். ஆசிரியர் முகமெல்லாம் கழுவி உட்கார்ந்திருந்தார். ஏன் இப்படி சோர்ந்திருக்கிறீர்கள் என்று மாணவர்கள் கேட்டபொழுது அதெல்லாம் ஒன்றுமில்லை என்று சொன்னார். மாணவர்கள் ஆசிரியரின் மகள் லில்லியிடம் வினவினார்கள் "எதுவும் சாப்பிடவில்லையா?" "இல்லை, அம்மா பெரிய சோம்பேறி ஒன்றுமே சமைக்கவில்லை". அவர்கள் சமையல் அறைக்குச் சென்று சமையல் பாத்திரங்களையெல்லாம் சோதித்தார்கள்.

செய்யவில்லை. இன்று மதியத்திற்கு பிறகு வேதாகம வகுப்பு வேண்டாமென்று சொல்லி விட்டு அவர்கள் வெளியே உணவுவிடுதிக்குச் சென்று சாப்பாடு வாங்கி வந்தார்கள். அடுத்த நாள் மோகனும் மற்றும் சகோதரர்களும் சேர்ந்து, அரிசி, மளிகை, காய்கறிகள் எல்லாம் வாங்கி வந்தார்கள். இந்த மோகன் யார் என்பதை அறிந்து கொள்ள வேண்டாமா? அவர் தான் இந்தியாவிலேயே மிகப் பெரிய சபையான சென்னையிலுள்ள ஏ. ஜி. சபை ஊழியர் போதகர். டி. மோகன்.

எபிரோனில் கல்வி முடித்த பிறகு ஊழியக்காரராக இருந்த நாட்களில், திருமண ஆலோசனைகள் வர ஆரம்பித்தன. அவைகளில் போதகர் கெ. ஜி. சாக்கோ (புத்தன் குரிசு சாக்கோச்சன்) வின் ஐந்தாவது மகள் சின்னம்மாவின் ஆலோசனையும் வந்தது. போதகர் கெ. இ. ஆபிரகாம் அதைக் குறித்துப் பேசினார். அவர் குட்டப்பனிடம் இதைக் குறித்து பேசிய பொழுது கல்யாணம் வேண்டாம் திருமணம் செய்து கொள்ளாமலேயே ஒரு "பரிசுத்த" னாக கர்த்தருக்கு ஊழியம் செய்ய விரும்புகிறேன் என்று பதிலளித்தார் குட்டப்பன். அப்பொழுது அவர் சொன்னார் "வேண்டாம், நான் உனக்காக ஒரு பெண்ணைப் பார்த்து வைத்திருக்கிறேன்" குட்டப்பன் பெற்றோர்களுக்கும் உறவினர்களுக்குமெல்லாம் தெரிவித்தார். ஆனாலும் ஒருவரும் வரவில்லை. அப்படியாக கல்லிசேரி போதகர் டி.என். ஆபிரகாம் எளியமுறையில் திருமணம் நடத்தி வைத்தார்.

மனைவியின் தகப்பனார் புத்தன்குரிசு சாக்கோச்சன் மேப்றால் சபையில் ஊழியம் செய்து வந்தார். அப்பொழுது குட்டப்பன் எபிரோனில் பயின்று கொண்டிருந்தார். தன்னுடன் இருந்த சில மாணவர்களுடன் அவர் மேப்றாலில்

சிரித்தார்கள். போதகர் டி. ஜி. உம்மன் சொன்னார். "நீங்கள் எல்லோரும் எதற்காக சிரிக்கிறீர்கள்? அவன் பாரம்பரிய சபையிலிருந்து வந்தவன். அவனுக்கு வசனம் தெரியாது. பாருங்கள், அவன் உங்களை விட பெரிய ஊழியக்காரனாவான்". அந்த தீர்க்கதரிசனம் எழுத்தின்படி நிறைவேறினபொழுது அதிக மதிப்பெண்கள் பெற்ற சமத்துகள் பேரூந்து நடத்துனர்களும், பொதுப் பணித்துறை குத்தகையாளர்களுமானார்கள் என்று குட்டப்பன் சாட்சி பகருகிறார்.

திரிச்சூரிலுள்ள கூட்டாலா சபை ஊழியத்திலிருந்து ஓய்வு பெற்ற பிறகு முண்டக்கயத்திற்குதான் நேரடியாக வந்தார். வீட்டிற்கு வந்தபொழுது தகப்பானார் அங்கு இல்லை. இரவுநேரத்தில் தகப்பனார் வந்தார். குட்டப்பனின் குழந்தை உரத்தகுரலில் அழ ஆரம்பித்தது. தகப்பனார் சாதாரணமாகவே அமைதலாகப் பேசமாட்டார். கடித்துக் குதறுவது போல்தான் பேசுவார். குழந்தையின் அழுகுரல் கேட்டபோது உதுப்பு கேட்டார் : "உம்!! யாரங்கே?!!". தாயார் பவ்யமாக சொன்னார்கள் "குட்டப்பன் வந்திருக்கிறான்" "தாலி கட்டாத பெண்ணையும் ஞானஸ்நானம் கொடுக்காத குழந்தையையும் கொண்டு இங்கு வர யார் சொன்னது? இதென்ன சத்திரமா? போடா வெளியே" குட்டப்பனின் மனைவி இதைக் கேட்டு அழ ஆரம்பித்தாள். தாயார் மருமகளை ஆறுதல்படுத்தினார்கள். "அவர்கள் தந்தையும் மகனும் ஏதாவது சொல்லட்டும் அதற்கு நீ ஏன் அழுகிறாய். நீ இங்கு வா சமையல் அறையிலே ஏதாவது செய்யப் பார்". குட்டப்பன் அதற்குப் பின் அங்கு இருக்கவில்லை. மனைவியையும், குழந்தையையும் கூட்டிக் கொண்டு புறப்பட்டார். மலைமீது ஒரு குடிசையில் தங்குவதற்கு

அனுமதி கிடைத்தது. பழைய சமுதாயத்தில் உள்ள ஒரு விசுவாசியின் வீடு. அங்கே தாங்க முடியாத நாற்றமெடுத்தது. எப்படியோ இரண்டு மாதங்கள் அங்கேயே தங்கினார்கள். பிறகு ஐ. பி. சி. கூடத்திற்கு வந்து தங்கலானார்கள்.

ஐ. பி. சி. கூடத்தில் தங்கி வரும் நாட்களில் பிரிவினை உண்டாயிற்று. கெ. இ. ஆபிரகாம் அவர்களுக்கு அனுகூலமாகவும், பிரதிகூலமாகவும் இரண்டு கூட்டம். குட்டப்பன் ஐயா அவர்களுக்கு அநுகூலமாக இருந்தார். ஆனால் சபையாரோ அவருக்கு எதிர்த்து நின்றார்கள். பிரச்சினை அதிகமாகிக் கொண்டே வந்தது. குட்டப்பன் அழுது ஜெபித்தார். "நீ வேறே இடத்திற்குச் செல்" என்று தேவனுடைய குரலை கேட்டார். இதற்குமேல் இங்கே இருக்க முடியாதென்பதை உணர்ந்தார். ஒரு ஞாயிறு அன்று சபைக் கூடி வந்திருக்கையில் குட்டப்பன் கூறினார் "நான் போகிறேன். இந்த வாரம் காணிக்கை பணம் பன்னிரண்டு ரூபாய் இருக்கிறது. இது எனக்குரியது" (அப்பொழுது குட்டப்பன் அவர்களுடைய போதகராயிருந்தார்) படுக்கையும், சாமான்களையும் எடுத்துக்கொண்டு மனைவியையும் குழந்தையையும் கூட்டிக்கொண்டு குட்டப்பன் புறப்பட்டார். நான்கு மைல் தொலைவில் ஒரு வீடு கிடைத்தது. அந்த வீடு குட்டிச்சேட்டன் எனும் ஒரு கத்தோலிக்க சகோதரனுடையது. மாத வாடகை ஏழு ரூபாய். பாட்டும், ஜெபமும் ஆரம்பித்தார்கள். ஜனங்கள் வரத்தொடங்கினார்கள். "நம்ம குட்டப்பனுடைய சபை" என்றார்கள் ஜனங்கள். அதே ஊரை சேர்ந்த ஆபிரகாமை ஆசையாக அழைத்த பெயர்தான் குட்டப்பன். முதல் தேதி வருவதற்கு முன்னமே எப்படியாகிலும் வாடகை ஏழு ரூபாய்

சேர்த்து வைப்பார். குட்டிச் சேட்டன் வாடகை வாங்குவதற்கு வருவார். வாடகை வாங்கின உடன் பணத்தை தொப்பிக்குள் வைப்பார். பிறகு வெளியே வந்து நலன் விசாரிப்பார். அதன் பிறகு தொப்பியிலிருந்த முழு பணத்தையும் எடுத்து மேஜை மேலிருக்கும் காணிக்கை பெட்டியில் போடுவார். மேலே பார்த்து கண்களை மூடி சிலுவை அடையாளம் போடுவார். பிறகு திரும்பி செல்வார். அப்பொழுது குட்டப்பன் சொல்லுவார் "குட்டிச்சேட்டா............வாடகை" "நீ வாடகை தந்தாய், நான் அதை வாங்கினேன். காணிக்கை பெட்டியில் எந்தப் பாவியும் காணிக்கை போடலாம். இது உனக்கு ஜெபித்து கிடைக்கிற பணம் இதை நான் வீட்டிற்கு கொண்டு சென்றால் நான் உருகிப்போய்விடுவேன் நன்மை வராது".

ஆபிரகாமின் மகனுக்கு மூன்று அல்லது நான்கு வயதிருக்கும். அப்பாவின் வீட்டிற்கு சென்றால் எந்தக் குறையும் இருக்காது, விருப்பம்போல் சாப்பிடலாம் என்பதையெல்லாம் அவன் தெரிந்துக் கொண்டான். ஆபிரகாமை அவன் கட்டாயப்படுத்துவான். "தாத்தாகிட்டே போலாம்" கட்டாயப்படுத்துவதை தாங்க முடியாது வந்தால் ஆபிரகாம் குழந்தையையும் தூக்கிக் கொண்டு வீட்டண்டை செல்வார். வீடு சற்று மேலே இருக்கிறது. ஆபிரகாம் கீழேயே நின்று கொண்டு மகனிடம் சொல்வார் "அதோ தாத்தா..... போ" குழந்தை உற்சாகத்துடன் மேலே ஏறிச் செல்வான். தாத்தா திண்ணையில் உட்கார்ந்துகொண்டே கூப்பிடுவார். "ஏண்டி இதோ குட்டப்பனின் குழந்தை வருகிறான். கண்டவனும் அவனைத் தொட்டிருப்பான். தூக்கிக் கொண்டு போய் குளிப்பாட்டி விட்டு கொண்டு வா" அந்த பாட்டி அதற்குக் கீழ்ப்படிவார்கள். அதன் பிறகு

குழந்தையை மடியில் வைப்பார் சோற்றை உருட்டி வாயில் வைத்து கொடுப்பார். அதோடுகூட தாத்தா, அறிவுரையும் சொல்லுவார் "பெந்தெகொஸ்தேகாரர்களெல்லாம் திருடர்கள்" குழந்தை அதை திரும்ப சொல்வான் "ஆம் திருடர்கள்" "அவனுங்ககூட போகக் கூடாது" "போகக்கூடாது" ஆபிரகாம் மரத்தின் பின்னாக மறைந்து நின்று எல்லாம் கவனிப்பார்.

சபைக்கு வரும் தாய்மார்கள் குழந்தைகளுக்காக பால்குப்பி கொண்டு வருவார்கள். அதை பார்க்கும்பொழுது ஆபிரகாமின் குழந்தை ஏக்கத்துடன் கேட்பான் "அப்பா பால்..........அப்பா பால்" "காப்பிக்கொட்டை தோலை வறுத்து தூள் செய்து கொதிக்க வைத்து குடிக்கும் போதகருக்கும் குடும்பத்திற்கும் பால் வாங்க பணம் எங்கே- இப்படியிருக்க ஒரு சம்பவம் நிகழ்ந்தது. வீட்டுக்காரர் குட்டிச்சேட்டனின் பசுமாடு பால் கறக்க மறுத்தது. குட்டிச்சேட்டன் ஆபிரகாமிடம் இதைக் குறித்து கூறினார். ஆபிரகாம் அங்கே சென்றார். ஒரு பாத்திரத்தில் சற்று தண்ணீர் கொண்டு வரக் கூறினார். ஜெபித்து விட்டு அந்த தண்ணீரைப் பசு மாட்டின் மேல் ஊற்றினார். "இப்பொழுது பால் கறக்கலாம். இதுவரையிலும் கிடைத்ததை விட அதிக பால் கிடைக்கும்" என்றார் ஆபிரகாம். சொன்னது போலவே அவர்கள் பால் கறக்க ஆரம்பித்தார்கள். பசுமாடு அமைதியாக நின்றது. பெரிய பாத்திரம் நிறைய பால் கறந்தார்கள். ஆபிரகாமிற்கு பால் சேர்த்து தேநீர் கொடுத்தார்கள். அநேக நாட்களாக தேநீர் அருந்தாதிருந்த ஆபிரகாம் அதை வாங்கிக் குடித்தார். அடுத்த நாள் முதல் அவர்கள் தினமும் ஒரு குப்பி பால் ஆபிரகாமின் வீட்டிற்கு இலவசமாக கொடுக்க ஆரம்பித்தார்கள். மகன் பால்

குடிக்கத் துவங்கினான். தெய்வீக நடத்துதலுக்கு எத்தனை எத்தனை நிகழ்ச்சிகள்.

முண்டக்கயம் ஐ.பி.சி யில் நேர்ந்த பிரிவினையைத் தொடர்ந்து ஆபிரகாம் மிகுந்த துக்கமடைந்தார். தனித்து செயல்பட விருப்பமில்லை. ஐ. பி. சி. யில் தொடர்ந்து ஊழியம் செய்யவும் முடியவில்லை. இப்படி இருக்கையில் தான் "சர்ச் ஆப் காட்" இன் களச் செயலாளராக இருந்த டி. எம். வர்கீஸ் ஆபிரகாமை "சர்ச் ஆப் காட்" இல் வரும்படி அழைத்தது. அவ்வாறாக ஆபிரகாம் சர்ச் ஆப் காட் இல் சேர்ந்தார்.

முண்டக்கயத்தில் சி. எம். எஸ். சபையை சேர்ந்த ஒருவரின் இல்லத்தில் பிசாசின் உபத்திரவம் உண்டாயிற்று. அவர்கள் அவர்களுடைய பாதிரியாரிடம் இதைக் குறித்து தெரிவித்தார்கள். குட்டப்பனை அழைத்து ஜெபித்தால் போதும் என்றார் பாதிரியார். குட்டப்பன் அங்கு சென்று ஜெபித்தார். பிசாசின் உபத்திரவம் போய்விட்டது. அவர்களுடைய வீட்டை குட்டப்பன் தங்குவதற்காக வாடகையின்றி இலவசமாக கொடுத்தார்கள். அந்த முழு குடும்பமும் இரட்சிக்கப்பட்டு ஞானஸ்நானம் பெற்று சபையில் அங்கத்தினர்களானார்கள். அவர்களுடைய மகன் இப்போது அமெரிக்காவில் போதகராக ஊழியம் செய்து வருகிறார். குட்டப்பன் அங்கே தங்கியிருந்து ப்ளாப்பள்ளி, பாய்ஸ் எஸ்டேட் போன்ற இடங்களில் சுவிசேஷ ஊழியம் செய்தார்.

பாய்ஸ் எஸ்டேட் அருகில் ஒரு விசுவாசியின் வீடிருக்கிறது. அந்த வீட்டில் நடைபெறும் ஜெபக் கூட்டத்திற்கு குட்டப்பன் குடும்பத்தோடு செல்வது வழக்கம். ஜெபத்திற்கு வரும் அத்தனை பேர்க்கும் அவர்கள் காப்பி கொடுப்பார்கள்.

கூட்டமைவருக்கும் குடும்பத்தாருக்கும் இரவு சாப்பாடு கொடுப்பார்கள். சோற்றைக் காணும்பொழுது மகன் அதிக சந்தோஷமடைவான். நன்றாக சாப்பிடுவான். "அப்பா...... சோறு......அப்பா......சோறு" என்று மகிழ்ச்சியோடு சொல்வான். சாப்பிட்ட பிறகும் அவன் சோறு சோறு என்று சொல்லிக் கொண்டேயிருப்பான். அந்த வீட்டுக்காரர், "என்னடா நீ சாப்பிட்டு விட்டாயே பிறகு எதற்கு சோறு சோறு என்று கத்துகிறாய்?" என்று கேட்டார். மகன் சொல்வான் "வீட்டிற்கும் போய் சாப்பிடுவதற்கு". "டேய் நீ கொல்லம் பறம்பில் வீட்டை சேர்ந்தவன்" என்று சொல்லி கண்ணீரைத் துடைத்து விட்டு அவர் சொன்னார்: "நாளை காலையில் நாங்கள் சோறு எடுத்துக் கொண்டு வருகிறோம்" அடுத்த நாள் காலையில் அரிசி மற்றும் சாமான்களையும் எடுத்துக் கொண்டு அவர்கள் வீட்டிற்கு வந்தார்கள்.

போதகர் ஆபிரகாம் சொல்லுகிறார்: "நாங்கள் எங்கெல்லாம் ஊழியம் செய்தோமோ அங்கெல்லாம் சபைகளும் உருவாகியுள்ளது".

குக்கு துரை எனும் வெளிநாட்டு ஊழியக்காரர் பொன்குந்நம் என்ற இடத்திற்கு வந்தார். சுவிசேஷக் கூட்டத்தில் செய்தி கொடுத்துக் கொண்டிருந்தார். செய்தியின் மத்தியில் அவர் ஒருவரிடம் எழுந்து நிற்கக் கேட்டுக் கொண்டார். மந்திரவாதம் செய்வதற்கான ஓலைச் சுவடிகளை எடுத்து வா சொன்னார். அவரோ கீழ்ப்படிந்தார். அந்த ஓலைச்சுவடிகளின்மேல் துரை மிதித்தார். அந்த மண்ணெண்ணையை ஊற்றித் தீ வைத்தார். அந்த மந்திரவாதி அன்றே இரட்சிக்கப்பட்டார். அவரும் அவருடைய பிள்ளைகளும் பிள்ளைகளின் பிள்ளைகளும் இன்றும் விசுவாசிகளாக இருக்கிறார்கள்.

முண்டக்கயத்தில் வைத்து சர்ச் ஆப் காடுடன் தொடர்பு கொள்ள நேர்ந்தது என்றாலும் சர்ச் ஆப் காடின் ஊழியக்காரனாக வேலை ஆரம்பித்தது வாழூர் எனும் இடத்திற்கு வந்த பிறகுதான். ஐந்து ரூபாய் வாடகையில் ஒரு வீடு கிடைத்தது. விசுவாசிகள் ஒருவரும் இல்லை. குட்டப்பனும் குடும்பமும் உரத்த குரலில் பாடுவார்கள். சங்கீதங்கள் வாசிப்பார்கள். குட்டப்பன் உரத்தகுரலில் செய்தி கொடுப்பார். அதைக் கேட்டு ஜனங்கள் வர ஆரம்பித்தார்கள். வந்து பார்த்தால் இங்கே ஒருவருமில்லை. அவர்கள் அங்கேயே உட்கார்ந்து செய்தியை கேட்டு இரட்சிக்கப்பட்டார்கள். ஞானஸ்நானம் பெற்றார்கள். வாழூரில் ஒரு வருடம் ஊழியம் செய்தார். அதன் பிறகு டி.எம். வர்கீஸ் ஐயா அவர்கள் சொன்னார் "குட்டப்பன் திருவனந்தபுரம் செல்ல வேண்டும் அங்கே சபையில் சற்று பிரச்சனை இருக்கிறது". போகிறேன் என்று ஒத்துக் கொண்டார் குட்டப்பன். இவ்வாறு செல்லும்பொழுதுதான் ஆண்டவருக்கு கடிதம் எழுதினதும் பதில் கிடைத்ததும் (அதை குறித்து மற்றொரு பகுதியில் எழுதியிருக்கிறது).

பிறவம் என்ற ஊரில் ஊழியம் செய்துவந்த நாட்களில் அவறாச்சன் எனும் ஒருவர் இரட்சிக்கப்பட்டார். ஞானஸ்நானம் எடுக்க வேண்டுமென்று கேட்டுகொண்டார் ஆபிரகாம். ஞானஸ்நான நாள் குறிக்கப்பட்டது. ஞானஸ்நானம் எடுப்பதற்கு வேறு சிலரும் இருந்தார்கள். ஞானஸ்நானம் கொடுக்கும் குளத்தின் படிகளில் நிறைய பேர் நின்று கொண்டிருந்தார்கள். அவறாச்சனின் தகப்பன் ஒரு பயங்கரமான நபர். ஏற்கனவே ஒருத்தரைக் கொலை செய்தவர். அவர் இவ்வாறு சொன்னார் : "என் மகனுக்கு ஞானஸ்நானம் கொடுத்தால் இந்தக் கத்தியை பாதிரியாரின்

மார்பில் இறக்குவேன்" மற்ற எல்லோருக்கும் ஞானஸ்நானம் கொடுத்த பிறகு அவறாச்சனுக்கு கொடுப்பதாகக் கூறி தன் வேலையை தொடங்கினார் ஆபிரகாம். கடைசியாக அவறாச்சனை அழைத்தார். ஞானஸ்நானம் கொடுப்பதற்கு முன்னே இவ்வாறு சொன்னார் "ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து ஞானஸ்நானம் பெற்றபொழுது ஆவியானவர் புறாவைப்போல இறங்கினார். பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினால் நான் உனக்கு ஞானஸ்நானம் தருகிறேன்" என்று சொல்லி கொண்டு அவறாச்சனை தண்ணீரில் மூழ்க செய்தார். பார்த்துக் கொண்டிருந்த ஜனங்களெல்லாம் என்ன நடக்குமோ என்று அங்கலாய்த்தபடியே நின்றுகொண்டிருந்தார்கள். ஆனால் ஒன்றும் நடக்கவில்லை. அந்தத் தகப்பனாரின் கோபம் தணிந்தது. அவர் திரும்பிச் சென்றார். ஆபிரகாம் தினமும் வேதாகம வகுப்புகள் நடத்துவார். வேதாகமம் கற்று கொள்வதற்காக ஜனங்கள் வருவார்கள். அவறாச்சனுக்கு சீக்கிரத்திலேயே ஒரு அரசாங்க வேலை கிடைத்தது. பிறகு அவர் ஓர் ஊழியக்காரராக மாறினார். தற்போது புத்தன்குரிசு என்ற இடத்தில் ஒரு சபை நடத்தி வருகிறார்.

## அமெரிக்கச் செய்திகள் :

ஏறக்குறைய எல்லா சுவிசேஷ ஊழியர்களும் வெளிநாடு செல்வதற்கு விரும்புவார்கள். நமது கதாநாயகன் குட்டப்பன் அமெரிக்காவிற்கு சென்றது அவ்வாறு பணம் சம்பாதிப்பதற்காக அல்ல, இந்த நூலை எழுதும் நான் அவ்வாறு அவரை குறித்து புகழ் பாடுவதல்ல, உள்ளவைகளை உள்ளது போல எழுதுவேன் இல்லாததை எழுதுவதுமில்லை. குறைந்த நாட்களே அவரோடு பழகினேன். ஆகிலும், பணத்தை குறித்ததான அவருடைய மனப்பான்மையை நான் புரிந்து கொண்டேன். கிடைக்கும்

பணமெல்லாம் ஊழியத்திற்காகவே செலவிடுகிறார். தானும் குடும்பமும் சாப்பிடுவதற்கு பயன்படுத்துகிறார்கள் அதல்லாமல், சொத்து சம்பாதிக்க வேண்டும் என்கிற மனப்பான்மை சற்றும் அவரிடத்தில் என்னால் காணமுடியவில்லை.

குட்டப்பன் அமெரிக்காவிற்கு சென்றதும் எவருடைய காலைப் பிடித்து கெஞ்சியும் அல்ல. அமெரிக்காவிலுள்ள அவருடைய மகன் அதற்காக முயற்சியெடுத்துதான் அவரை கொண்டு போனார். அமெரிக்காவில் குட்டப்பனுக்கு அநேக இடங்களில் செய்தி கொடுக்க வேண்டியிருந்தது.

அமெரிக்காவில் அன்று மலையாளிகளின் பெந்தெகொஸ்தே கூட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தது. கேரளாவிலிருந்து அநேக போதகர்களும் சுவிசேஷகர்களும் வந்திருந்தார்கள். குட்டப்பனும் ஒரு சபைக்கு ஆராதனைக்கு சென்றிருந்தார். அந்த ஆராதனைக்கு வெளியேயிருந்து இருபத்திரெண்டு போதகர்கள் வந்திருந்தார்கள். இந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும் அவர்கள் வந்திருந்தார்கள். ஒவ்வொருவருக்கும் பேசுகிறதற்கு ஒரு நிமிடம் அனுமதி வழங்கியிருந்தார்கள். ஒவ்வொருவரும் எழுந்து தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு ஒரே மூச்சில் தங்கள் தேவைகளையும் கூறிவிட்டு அமர்ந்தார்கள். கடைசியாக அந்த சபை போதகர் “இப்பொழுது தமிழ்நாட்டில் ஊழியம் செய்யும் போதகர் கெ. ஜெ. ஆபிரகாம் உங்களோடு பேசுவார்” என்று அறிவித்தார். அவருக்கு அரை மணி நேரம் பேச அனுமதியுண்டு என்றும் சொன்னார். “அங்கே குழுமியிருந்தவர்கள் பாண்டிக்காரன் தமிழில் பேசினால் எங்களுக்கு எவ்வாறு புரியும்?” என்று கேட்டார்கள். போதகர்

தில்லை. அமெரிக்காவில் நான் அநேக சபைகளுக்கு சென்றிருக்கிறேன். எங்கு சென்றாலும் சரி நான் வேண்டாமென்று கூறினாலும் கட்டாயப்படுத்தி பணம் கொடுப்பார்கள். அவ்வாறு கிடைத்தவைகளெல்லாம் நான் உண்மையோடு செலவு செய்திருக்கிறேன்".

பிறவம் என்ற இடத்தில் நடந்த ஒரு சங்கதியைக் கூட இத்தோடு சேர்த்து சொல்லலாம் என்று எண்ணுகிறேன். இரண்டரை வயதுள்ள ஒரு ஆண்குழந்தைக்கு ஏதோ குணமாக்கமுடியாத நோய் வந்தது. வைத்தியரும் முடியாது என்று கூறிவிட்டார். மரித்துப் போவான் என்று எண்ணினார்கள். அப்பொழுதெல்லாம் பெந்தெகொஸ்தேக் காரர்கள் மருந்து பயன்படுத்த மாட்டார்கள். குட்டப்பன் அந்த வீட்டிற்கு சென்று எல்லாவற்றையும் கேட்டறிந்தார். மிகுந்த துக்கத்திலிருக்கும் அந்த குடும்பத்தார்க்கு என்ன சொல்வது? குழந்தையின் தாய் அவனை தூக்கிக் கொண்டு வந்து அழுது கொண்டே இவ்வாறு கூறினார். "இவன் குட்டப்பன் அண்ணனின் மடியில் கிடந்து இறந்து விடட்டும்" குட்டப்பன் குழந்தையை மடியில் வைத்துக் கொண்டு ஜெபித்து கொண்டிருந்தார். சற்று நேரம் பொறுத்து குழந்தை கண் திறந்தது. குட்டப்பனின் தாடி முடியைப் பிடித்தது. கர்த்தர் ஆச்சரியகரமாக அந்தக் குழந்தைக்குச் சுகமளித்தார். அந்தக் குழந்தை வளர்ந்து தற்போது அமெரிக்காவில் பொறியாளராக வேலைப்பார்க்கிறார். குட்டப்பன் அமெரிக்கா சென்றபொழுது நான்கு மணிநேரம் அவருடைய காரில் பயணம் செய்தார். முடிவில் பிரிந்து செல்லும்போது ஒரு பெரிய தொகையைக் காணிக்கையாக கொடுத்தார்.

சபினேசு ஊழியத்தை குறித்து குட்டியப்பன் சொல்வதை கவனிப்போம். "ஜானவரை சபினேசு ஊழியத்திற்கென்று ஆண்டவர்தான் அழைத்து அனுப்பினார். வேதாகமத்தையும், பைபிள்களையும், பிரசுரங்களையும் அவர்தான் அனுப்பினார். அவர்கள் சென்று கர்த்தருடைய வேலையைச் செய்தார்கள். அது ஆசீர்வாதமாக இருந்தது. ஜானவர் தேவன் சொல்லும் இடத்திற்கு சென்று ஊழியம் செய்தால் அந்த நபரை ஆண்டவர் ஆசீர்வதிக்காமல் விடமாட்டார்."

தமிழ்நாட்டிற்கு வருவதற்கு முன்பு பீரஙம் என்ற இடத்தில்தான் ஊழியம் செய்து வந்தார். குட்டியப்பன் துரையிடம் சென்று ஆண்டவர் என்னிடம் தமிழ்நாட்டிற்குப் போக சொன்னார் என்று அறிவித்தார். அப்பொழுது வில்லியம் போஸ்டேபில் என்ற அந்த வெள்ளைக்காரர் "சரி மாதம் ஐம்பது ரூபாய் உதவித் தொகையாக தருகிறேன்" வாடகை முப்பது ரூபாய், மீதமுள்ளதிற்கு ஐந்து ரூபாய் பாக்கி பணத்தை வைத்துக்கொண்டு குட்டியப்பனும் மனைவியும் வாழ வேண்டும். ஊரில் படித்துக் கொண்டிருக்கும் மகனின் பள்ளிக் கட்டணம் செலுத்த வேண்டும். இதை துரையிடம் கூறினபோது அவர் என்ன சொன்னார் தெரியுமா? "நீ கூட்டங்களுக்கு செய்தி கொடுக்க செல்வாய் அல்லவா? அதனால் எல்லாம் சரியாக நடக்கும்".

ஸ்ரீவைகுண்டம் வந்த போதகர் ஆபிரகாம் வேதாகம வகுப்புகள் ஆரம்பித்தார். மாணவர்களில் ஒருவர் கூறினார் "ஒரு வருடத்திற்கு முன்னே எனக்கொரு தரிசனம் உண்டாயிற்று. கர்த்தருடைய வசனம் நன்றாக கற்பிக்கும் ஒருவர் இங்கு வந்து வசனத்தை கலப்படமில்லாமல் கற்பிப்பார். அது குட்டியப்பனை குறித்து தான் என்று தனியாக

சொல்லத் தேவையில்லையே. ஆண்டவருடைய செய்கைகளெல்லாம் எவ்வளவோ அற்புதமானவைகள்! இந்த நேரத்தில் காலம் கடந்த தேவதாசர் எம். இ. செறியன் சார் என்பவரின் அனுபவம் எழுதுவது ஏற்றதாக இருக்கும் என்று கருதுகிறேன். அவருக்கு சுவிசேஷம் சொல்வதற்காக ஓர் இடத்துக்கு செல்ல வேண்டியிருந்தது. அங்கு செல்வதற்காக வண்டிக்கு பணமில்லை. தன் கையிலுள்ள பணத்தைக் கொண்டு எதுவரையிலும் செல்லமுடியுமோ அதுவரை ஒரு பயணச்சீட்டு வாங்கி ரெயில் வண்டியில் பயணமானார். அந்த ரெயில் நிலையம் வந்தவுடனே அங்கு இறங்கினார். உடனே வியாபாரியும் சுவிசேஷ ஊழியக்காரருமான இ. பி. வர்கிஸ் என்றவர் ஓடி வந்தார். அங்கமாலியை சேர்ந்த அவர் இவ்வாறு கூறினார் "செறியன் அண்ணே, ரொம்ப நாளா உங்களுக்கு காணிக்கை அனுப்ப நினைக்கிறேன். எனக்கு நேரம் கிடைக்காது என்பது உங்களுக்கு தெரியுமே. இந்தா இதை வைத்துக் கொள்ளுங்கள்" என்று சொல்லி சற்று பணம் சாரிடம் கொடுத்தார். உடனே சார் அவர்கள் செல்ல வேண்டிய இடத்திற்கு பயணச்சீட்டு வாங்கி அதே வண்டியில் பயணம் ஆரம்பித்தார். கர்த்தருடைய ஊழியத்திற்காக ஆண்டவர பலவிதங்களில் வழிகளை ஆயத்தப்படுத்துகிறார். தரிசனங்கள், அற்புதங்கள், இன்னமும் அதிகார பதவிகள் மூலமாகவும் அவர் கிரியை செய்கிறார்.

சி. எஸ். ஐ. ஆயரின் மகன் ஆபிரகாமின் மகன் யூசுப் க்கு வேலை வாங்கிக் கொடுக்க தீர்மானித்தபொழுது சி. எஸ். ஐ. போதகர் அதை தடைசெய்தார். அவர் சொன்னார்: "ஐயா அவர் நாடார் அல்ல, மலையாளி சிரியன் கிறிஸ்தவ பெந்தெகோஸ்தே" அதற்கு ஆயர் சொன்னார். "நீ எத்தனை இந்துக்களிடம் சுவிசேஷம் சொல்லியிருக்கிறாய்? எத்தனைபேர் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டார்கள்? அவர் ஆத்துமாக்களை ஆதாயம் செய்கிறார். இதை போலவே தடை செய்த மற்றொருவரோடு ஆயர் கேட்டார். சபையிலிருந்து நீ எவ்வளவு பணம் திருடியிருக்கிறாய்? நான் வேலை வாங்கிக்கொடுக்க தீர்மானித்தது தீர்மானித்ததுதான்".

# 7

## "தொடர்ச்சி"

### a. யூசுப்

போதகர் கெ. ஜெ. ஆபிரகாமின் மகன் யூசுப் ஆபிரகாம் அமெரிக்காவிலுள்ள "விச்சிற்ற" எனும் இடத்தில் தங்கி வேலை செய்துவருகிறார். பதிமூன்று மருத்துவமனைகளின் மேற்பார்வையாளராகப் பணிபுரிகிறார். பழையவைகளை மறந்துவிடாமல் அவர் கூறின அவருடைய நினைவுகள் நம்மைச் சிந்தனைக்குள் ஆழ்த்தும். இஸ்ரவேல் ஜனங்களை கர்த்தர் வழிநடத்தின விதங்கள் அவர்கள் மறந்துவிடாம லிருக்க ஒருபடி மன்னாவைப் பொற்பாத்திரத்தில் பத்திரப் படுத்தி வைக்க கர்த்தர் கட்டளையிட்டார். பிற்காலத்தில் வழிகளை மறந்துவிடாமல் தாழ்மையோடிருக்க இது உதவியாயிருக்கும். மேற்கத்திய நாடுகளில் அநேக

ஆண்டுகள் தங்கியிருந்தும்கூட நம் நாட்டையும் கலாச்சாரத்தையும் மறவாது கர்த்தரை நேசித்தும் ஊழியங்களுக்கு உதவியும் வருபவர்களை குறித்து நாம் சந்தோஷமடைகிறோம். அமெரிக்காவில் பிறந்த பேரபிள்ளைகளைக்கூட தேவபக்தியில் வளர்க்கும் விசுவாசிகள் இருக்கிறார்கள். அதே நேரத்தில் துன்மார்க்கமான வழிகளில் செல்லும் பிள்ளைகளுள்ள ஊழியக்காரருமிருக்கிறார்கள்.

சிறுவயதிலேயே கர்த்தரை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்ட பூசப் ஒன்பதாவது வயதில் பிறவம் என்னுமிடத்தில் ஞானஸ்நானம் பெற்றார். தொடர்ந்துள்ள காரியங்களை அவர் வார்த்தைகளாலேயே கேட்போம்.

"என் தகப்பனார் திருவனந்தபுரத்தில் சர்ச் ஆப் காட் சபை போதகராக இருந்த நாட்களில் ஒரு சம்பவம் நேர்ந்தது. தங்குவதற்கு ஒரு பெரிய வீடு கிடைத்தது ஒரு சிறுபெண் தற்கொலை செய்து கொண்டபடியினால் அந்த வீட்டை மற்றொருவரும் வாடகைக்கு எடுத்துகொள்ள வில்லை. அந்த வீட்டிலே நாங்கள் மூன்று வருடங்கள் தங்கினோம். நான் அப்பொழுது சிறுபையனாக இருந்தேன். பலமுறை கதவை தட்டுகிற சத்தமும் கதவைத் திறக்க சொல்வதையும் கேட்போம். ஆனால் கதவை திறந்தால் ஒருவரும் இருக்கமாட்டார்கள். இந்த வீட்டில் எப்பொழுதாவது வந்து தங்குபவர்களுக்கும் இதேபோல் அனுபவம் உண்டாயிருக்கிறது - கழுத்தை நெரிப்பதுபோல உணருவார்கள். ஆனால் என் பெற்றோர்களுக்கு எந்த பிரச்சினையும் ஒரு பொழுதும் உண்டானதில்லை. மூன்று வருடங்கள் அங்கே தங்கி ஊழியம் செய்தோம். அங்குள்ள சபை ஒரு நல்ல சபையாக இருந்தது.

திருவனந்தபுரத்திலிருந்து பிறவம் என்ற இடத்திற்கு என் இடமாற்றம் கிடைத்தது. பிறவத்தில்வைத்து என்

தகப்பனாருக்கு ஒரு தரிசனம் உண்டானதின் விளைவாகத் தான் அவர் தமிழ்நாட்டிற்கு வந்தார். ஒன்பதாம் வகுப்பில் படித்துக்கொண்டிருந்த நான் பிறவத்திலுள்ள ஒரு விசுவாசியின் வீட்டிலேயே தங்கி தொடர்ந்துபடித்தேன். பத்தாம் வகுப்பு வரையிலும் பிறவத்தில் தங்கினேன். அதன்பிறகு தூத்துக்குடியிலுள்ள ஒரு கல்லூரியில் படித்தேன். B.A.வும், M.A. வும் செயின்ட் ஜான்ஸ் கல்லூரி யில் விடுதியில் தங்கிக் கொண்டே படிப்பதற்கு என் தாய்மாமன் உதவிசெய்தார். அதன்பிறகு சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக் கழகத்திலிருந்து M.Phil., முடித்தேன்.

தகப்பனாரின் எல்லாக் கூட்டங்களிலும் பங்குபெற்று முடிந்தவரை உதவியாயிருந்தேன் ஆனால் சபை ஊழியங்களில்தான் அவ்வளவு விருப்பம் காட்டவில்லை. செய்தி கொடுப்பதற்கோ வேதஆராய்ச்சி நடத்துவதற்கோ நான் ஒருபொழுதும் துணிந்ததில்லை. தகப்பனாரின் ஊழியங்களுக்குப் பொருளுதவி செய்து வருகிறேன். அதிலும் இவ்வாறு தொடர நான் விரும்பவில்லை. காரணம் சுவிசேஷ வேலை என்பது அவருடைய அழைப்பில்லாமல் செய்யக்கூடாது. அவ்வாறு செய்தால் அது சரிவராது என்று தான் நான் எண்ணுகிறேன். எனக்கு அப்பேர்பட்ட அழைப்பு இல்லை. அழைப்பு வந்தால் நான் அதற்கு ஒருபொழுதும் தடையாக இருக்கமாட்டேன். என் தகப்பனார் அநேக பாடுகளைச் சகித்து ஊழியம் செய்தார். அநேக சபைகளை ஸ்தாபித்தார். அவருடைய முதிர்வயதான இந்த நாட்களில் நான் அவரைக் கேட்டு கொண்டதின்படி இதுவரையும் உள்ள எல்லாச் சபைகளையும் சபைகளின் அனைத்துச் சொத்துக்களையும் சர்ச் ஆப் காட்டிற்கு இலவசமாக

கொடுத்தார் தகப்பனார் அவ்வாறு செய்ததில் நான் அதிக மகிழ்ச்சியடைகிறேன். நான் படித்ததும் வளர்ந்ததும் எல்லாம் விசுவாசிகளின் உதவியால்தான். இன்று நான் இந்த அளவிற்கு இருப்பதும் தேவனுடைய கிருபையினாலும் ஆசீர்வாதங்களினாலும் மாத்திரமே. இதற்கு நான் என்றும் என் ஆண்டவருக்கு நன்றியுள்ளவனாக இருக்கிறேன். என்னுடைய தசமபாகம் என்பது 25% என வைத்திருக்கிறேன். இது வருமானவரிபோக அல்ல. மொத்த வருமானத்தின் 25% கொடுத்து வருகிறேன்.

புதிய இடங்களுக்கு செல்லும் ஊழியக்காரர்களுக்கு உதவிசெய்வது. விதவைகளுக்கு உதவிசெய்வது. திருமணத்திற்கு வழியில்லாதவர்களுக்கு பணஉதவி செய்வது போன்ற நல்ல தேவைகளுக்கும் பணம் செலவு செய்கிறேன்.

இப்பொழுதும் கூட தமிழ்நாட்டில் சில புதிய பகுதிகளை சுவிசேஷ ஊழியத்திற்கென்று கண்டிருக்கிறேன். அங்கேயும் இடம் வாங்கி சபைக் கூடம் கட்டிச் செயல்படுவதற்காக சர்ச் ஆப் காட் டிற்கு கொடுக்க திட்டமிட்டுள்ளேன். இப்பேர் பட்ட காரியங்களில் நான் அதிக மகிழ்ச்சியடைகிறேன்.

எனக்கு மூன்று வயதிருக்கும்பொழுது முண்டக்கயத்தி லிருந்து வாழூருக்கு வந்தோம். காலையில் பத்துமணி யளவில் அங்கே வந்து சேர்ந்தோம். எங்களுக்கு வீடு தருவதாக கூறினவர்கள் நாங்கள் பெந்தெகொஸ்தே சபையை சேர்ந்தவர்கள் என்று அறிந்தபொழுது வீடு தர மறுத்தார்கள். நாங்கள் மிகவும் துக்கித்தோம். கட்டிலும் மற்ற சாமான்களும் எல்லாம் வீதியோரத்தில் இறக்கி வைத்திருக்கிறோம். மாலை நேரம் வந்தவுடன் நான் பயப்பட ஆரம்பித்தேன். அப்பொழுது ஒருவர் வந்து

இவ்வாறு கேட்டார். "காலைமுதல் நீங்கள் இங்கேயே நிற்கிறீர்களே ஏன்?" அப்பொழுது தகப்பனார் நடந்ததைக் கூறினார். "நீங்கள் என் வீட்டிற்கு வாருங்கள். தங்குவதற்கு நான் இடம் தருகிறேன்" என்றார். நாங்கள் கட்டிலும் மற்ற பொருட்களும் எடுத்துகொண்டு அவருக்குப் பின் சென்றோம். அங்கே துணிகள் ஆவியில் வைக்கும் ஓர் அறை இருந்தது. அங்கே தங்க அனுமதித்தார். அந்த அறை முழுவதும் அழுக்குத் துணிகள் அவிக்கும் துர்நாற்றம் இருந்தது. எட்டு மாதங்கள் அங்கே தங்கினோம். அதன்பிறகு ஒரு பெரிய வீடு வாடகைக்கு கிடைத்தது. அந்த வீட்டில் பிசாசின் கிரியைகள் இருந்ததினால் குறைந்த வாடகைக்குத் தந்தார்கள். அந்த வீட்டில் தங்கிக் கொண்டு தான் தகப்பனாரின் ஊழியமும் என் கல்வியும் நடந்தது. அதிக நாட்களும் பட்டினியாகத்தான் இருக்கும். ஒருமுறை தொடர்ந்து ஏழுநாள் பட்டினி கிடந்தோம். நான் தாயாரின் மடியில் படுத்துக்கொண்டு இவ்வாறு கேட்டேன் "அம்மா, இன்றாகிலும் ஏதாவது கிடைக்குமா?" என் தாயார் அதற்குப் பதில் கூறவில்லை. ஆனால் அதற்குப் பதிலாக கண்களிலிருந்து சுடுநீர் என் முகத்தில் விழுந்தது. ஆகிலும் அதன் பிறகு அற்புதமாக ஆண்டவர் உணவைத் தந்தார். இது மறக்கமுடியாத ஓர் அனுபவம். அதன்பிறகு பள்ளியில் முதலாம் வகுப்பில் சேர்ந்தேன். பள்ளியின் பக்கத்தில் ஒரு கோயில் உண்டு. அங்கே குடிப்பதற்கு மோர் தருவார்கள் நான் அதை வாங்கிக் குடிப்பேன். இது வீட்டில் தெரிந்து விடக்கூடாது. பசி தாங்கமுடியாமல்தான் மோர் வாங்கி குடித்தேன். அதுமட்டுமல்ல, பள்ளியிலிருந்து பால் பொடியும் கஞ்சியும் கிடைக்கும். இவைகள்தான் என் முக்கியமான உணவு. ஒரு நாள் வீட்டில் திருடன் புகுந்தான். மறுநாள் சாப்பிடுவதற்காக நாங்கள் வைத்த உணவை

திருடன் சாப்பிட்டுச் சென்றான். அது என்னால் தாங்கமுடியவில்லை. திருடனும் நம்மைப் போல பட்டினியாயிருப்பான். சரியான நேரத்தில் உணவு கிடைக்கவில்லை என்பதற்காகவோ அல்லது வீட்டில் பட்டினியானதினாலோ நான் ஒரு பொழுதும் ஒருவரிடமும் வெறுப்பு காண்பிப்பதில்லை. சிறுவயது முதற்கொண்டே அவ்வாறாகத்தான் வளர்ந்தேன்.

சுவிசேஷ ஊழியங்களுக்கான உதவிகள் தொடர்ந்து செய்ய வேண்டுமென்று தான் விரும்புகிறேன். ஆனால் அதற்கென்று ஓர் ஸ்தாபனம் (Trust) துவங்கி அதன்மூலம் உதவிசெய்ய எனக்கு விருப்பமில்லை. உதவிக்கு தகுதியானவர்கள் நேரடியாக எனக்கு கடிதம் எழுதுவீர்களானால் அவர்களுக்கு நேரடியாக அனுப்பி உதவுவேன். புதிய இடங்களிலே ஊழியம் துவங்குபவர்களுக்கு ஒரு வருடம் வரை உதவிசெய்வேன். இவைகளெல்லாம் சபையினூடே செய்ய வேண்டுமென்று எண்ணுகிறேன். கடந்த வருடத்திலே 22 நபர்களுக்கும் 16 சபைகளுக்கும் உதவி செய்ய கர்த்தர் தருணம் தந்தார்".

தகப்பனாரின் அடிச்சுவட்டின் வழியே செல்லும் ஒருவரின் அனுபவங்கள்தான் இவைகள். உள்ளத்தைத் தொடுகின்ற வண்ணம் இவர் பேசினதை ஒலிநாடாவில் பதிவுசெய்து தான் எழுதினேன். மேற்கத்திய நாடுகளில் குடியேறினவர்கள் வழக்கமாகக் காண்பிக்கும் பெருமைகளோ அல்லது அபிப்பிராயங்களோ இதில் இல்லை. ஏற்றுகொள்ளக்கூடிய வாழ்க்கையின் உண்மைகள் மாத்திரம். இந்த சகோதரர் கர்த்தருக்கென்று செய்யும் காரியங்கள் தொடர்ந்து செய்யட்டும் என்று ஜெபிக்கிறேன்

* * * * * *

## b. திருமதி. கே. ஜெ. ஆபிரகாம்

கெ. ஜி. சாக்கோ, அன்னம்மா என்பது என்னுடைய பெற்றோர்களின் பெயர்கள் எனக்கு இரண்டு சகோதரர் களும் நான்கு சகோதரிகளுமுண்டு. தகப்பனார் மேப்றால் எனற் இடத்தில் சபைஊழியராக இருந்தார். எனக்கு ஐந்து வயதிருக்கையிலே மூன்று நாள் புசிப்பதற்கு ஆகாரமில்லாததினால் நான் மயங்கி விழுந்தேன். தகப்பனார் "ஒன்றும் செய்யாதே ஜெபம் முடியட்டும்" என்று சொன்னார். மேப்றால் பள்ளியில் எட்டாம் வகுப்பு வரையிலும் படித்தேன். உடன்பிறந்தவர்களெல்லாமே விசுவாசிகள்தான். ஒரு சகோதரரின் மகன் அமெரிக்காவில் வேலைசெய்துகொண்டு ஊழியமும் செய்கிறார். ஒரு சகோதரியும் கணவரும் புதுப்பள்ளி என்ற இடத்தில் ஊழியம் செய்கிறார்கள். (சர்ச் ஆப் காட் போதகர் எம். வி. ஜார்ஜ்குட்டி).

பதினெட்டாவது வயதில் திருமணம் நடந்தது. திருமணத்திற்கு முன்னமே போதகர் ஆபிரகாமை அறிமுகமுண்டு. பலமுறை வீட்டிற்கு வந்திருக்கிறார். அப்பொழுது நான் சிறுபெண்ணாக இருந்தேன். என் தாயார் உணவு கொடுப்பார்கள். அது மட்டுமல்லாமல் தொடர் கூட்டங்களில் (Convention) செய்தி கொடுக்கவும் அழைப்பார்கள். போதகரை குறித்ததான எல்லா காரியங்களும் திருமணத்திற்கு முன்னமே எனக்கு தெரியும். போதகருக்கு சொத்துக்களோ, நிரந்தர வருமானமோ இல்லாமலிருந்தது. சபை ஊழியமுமில்லை. சுற்றித்திரிந்து சுவிசேஷம் அறிவிப்பவர் என்பதை விட மற்றொன்றும் அவருக்கு இல்லாமலிருந்தது. அணிந்திருந்த ஆடையை தவிர மாற்று ஆடை கூட இல்லாமலிருந்தார். ஐயா

கெ. இ. ஆபிரகாம்-அவர்கள் தகப்பனாரிடம் திருமணத்தை குறித்து பேசினபொழுது மற்றெதெயும் குறித்து யோசிக்கவில்லை. எங்கள் வீட்டிலும் வருமானம் குறைவுதான். மேப்றால் என்ற இடத்தில் இருந்த நிலத்தை விற்றுவிட்டு புத்தன்குரிசு என்ற இடத்தில் நிலத்தை வாங்கிய நாட்கள். என் தகப்பனார் போதகர் ஆபிரகாமிடம் சொன்னார் "அவள் சிறுவயதிலிருந்தே நன்றாக பயிற்சி பெற்றிருக்கிறாள் உணவில்லை என்றாலும் துணியை இறுக்க கட்டிக்கொண்டு இருந்து விடுவாள்".

திருமணத்திற்கு பிறகு ஒரு வருடம் சொந்த ஊரிலேயே இருந்தோம். அதன் பிறகு திரிச்சூரிலுள்ள கூட்டாலா ஐ.பி.சி. சபையில் ஊழியம் செய்தார். அங்கேதான் மகன் பிறந்தான். அந்த சபையில் நடந்த சில பிரச்சனைகளினால் அந்த ஊழியத்தை விட்டு பல இடங்களில் போய் ஊழியம் செய்தார். அப்பொழுது நானும் மகனும் என் வீட்டிலேயே தங்கியிருந்தோம்.

சில நாட்கள் முண்டக்கயத்தில் ஊழியம் செய்தோம். இரவு வேளையில் வீட்டுக்கு வந்த எங்களை தகப்பனார் திட்டினார். வெளியே போகும்படி சொன்னார். திருமணம் முடிந்து ஒரு வருடத்திற்குப் பிறகு குழந்தையுடன் முதல்முதலாக கணவரின் இல்லத்திற்கு வந்தபோது இவ்வாறு நடந்துவிட்டதே என்று எண்ணி உள்ளத்தில் அதிகமாக கலங்கினேன். நான் அழ ஆரம்பித்தேன். அம்மா எனக்கு ஆறுதல் கூறினார்கள். போதகர் என்னிடம் சொன்னார் "அம்மாவுக்கு உதவிசெய்ய இங்கு யாருமே இல்லை அதனால் நீ இங்கே வேலைசெய்" எனக்கு 19 வயதுள்ள அந்நாளில் கூறின அந்த வார்த்தைகள் நேற்று கூறினது போல எனக்கு இன்னமும் நினைவிருக்கிறது-

அதற்குப் பிறகு ஒரு ஏழை விசுவாசியின் வீட்டில் சில நாட்கள் தங்கினோம். அவர்களும் பட்டினியால் அவதிப்படுபவர்கள். எங்களுக்கு உணவு தருவதற்காக அவர்கள் அதிக பாடுபடுவதை நான் போதகரிடம் கூறினேன். அதன் பிறகு மலைமீது ஒரு குடிசையின் சிறுபகுதி வாடகைக்கு எடுத்தோம். வீட்டுடமை கூலி வேலை செய்பவர். அவருடைய மனைவி பிரசவத்திற்காக சென்றிருந்தார்கள். அங்கு கிடந்த காப்பிக்கொட்டை தோலை வறுத்து பொடிசெய்து அதை போட்டு தண்ணீர் கொதிக்கவைத்து குடிப்பேன் இனிப்பும் இல்லை, பாலும் இல்லை கசப்பு. அப்பொழுதெல்லாம் ஜெபிப்பேன் சிலநேரங்களில் அழுவேன். போதகர் போகும்போது கூடச் செல்வேன். மற்றவைகளை ஒன்றுமே யோசிப்பதற்கான அறிவு அன்று இல்லை. மகனுக்கு 12 வயதான பிறகுதான் மகள் பிறந்தாள். என் தகப்பனார் 90 ஆவது வயதில் இறந்தார். பல இடங்களில் போதகராக ஊழியம்செய்தார். புத்தன்குரிசில் இடம் வாங்கி வீட்டை கட்டினார். விவசாயமும் செய்தார். கூடவே ஊழியமும் தொடர்ந்தது. அதன்பிறகுள்ள நாட்களில் பெரிதான கஷ்டம் ஒன்றும் உண்டாகவில்லை.

நாங்கள் தமிழ்நாட்டிற்கு வந்து அநேக வருடங் களாயிற்று. ஆனாலும் தமிழ் சரியாக எழுதவோ, பேசவோ வாசிக்கவோ எங்களுக்கு தெரியாது. தமிழும், மலையாளமும் கலந்து பேசுவோம் ஜெபிப்போம். அது ஜனங்களுக்கு புரியும். கர்த்தர் ஜெபத்தை கேட்பார். அற்புதங்கள் செய்வார் ஜனங்கள் விசுவாசிப்பார்கள். தமிழ்நாட்டில் இவ்வாறு 37 வருடங்கள் ஊழியம் செய்திருக்கிறோம்.

ஸ்ரீவைகுண்டம் வந்தபிறகு அதிகமான பாடுகள் அனுபவித்தோம். கேரளாவில் ஓரளவிற்கு பரவாயில்லாமல்

வாழ்ந்து வந்தோம். தமிழ்நாட்டிற்கு வா கர்த்தர் கூறினார் என்று பலமுறை யோசித்ததுண்டு. மகன் கோளாவில் படித்துக் கொண்டிருந்ததால் அவனுக்கு அவ்வளவு பாடுகள் இல்லை. ஆனால், மகளுக்கு 3 வயது. அவளுக்கு இட்லி மிகவும் பிடிக்கும். இட்லி விற்கும் கடையருகே வரும்போதெல்லாம் "இட்லி, இட்லி" என்று அழுவாள். வாங்கிக் கொடுக்க பணமிருக்காது.

ஆனாலும் இவ்வளவு பாடுகளின் மத்தியிலும் கர்த்தர் எங்களை வழிநடத்தினார். கர்த்தருடைய நாம மகிமைக்கென்று இவ்வளவும் கூறினேன்.

* * * * * *

## C. போதகர். கெ. சி. வர்க்கீஸ்

### முண்டக்கயம் குட்டப்பன்
### (Pastor K.J. Abraham)

போதகர் கெ. ஜெ. ஆபிரகாமை பொதுவாக கேரளாவில் அல்லது வடக்கு திருவாங்கூரில் முண்டக்கயம் குட்டப்பன் என்றுதான் அழைக்கிறார்கள். அவர் என்னுடைய மைத்துனர் ஆவார். என்னுடைய இளைய சகோதரி சின்னம்மாவைத் தான் அவர் திருமணம் செய்திருக்கிறார். எங்கள் பெற்றோர்களுக்கு நாங்கள் ஏழு பிள்ளைகள். அதில் முதலாவது நான், எனக்கடுத்தது சின்னம்மா.

பெந்தெகொஸ்தே சபைகளின் ஆரம்பநாட்களில் முன்னுக்கு வந்தவரும் கர்த்தரின் கரங்களில் மிகப் பெரிய ஊழியம் செய்தவருமான போதகர் கெ. ஜீ. சாக்கோ என்பவர்தான் எங்கள் தகப்பனார், தாயார் அன்னம்மா சாக்கோ. அவர் வடக்கு திருவாங்கூரில் தலைமைப் போதகராக 20 வருடமும், கோயில் தலைமை போதகராக 3 வருடமும்

ஐ.பி.சி.யின் மாநில தலைவராக 3 வருடமும் சேவை செய்தார். அவர் இறந்து 10 வருடங்களாகிறது.

1940ஆம் ஆண்டில் போதகர் கெ. ஜெ. ஆபிரகாம் ஊழியம் செய்ய ஆரம்பித்தார் என்று நினைக்கிறேன். அப்பொழுது நான் மாணவனாக இருந்தேன். மேப்றால் எனும் இடத்திற்கு குழுவாக ஊழியத்திற்கு வந்தபோது நான் அவரை முதல்முதலாக பார்த்தேன். அவருடைய சாட்சியும் பொதுகூட்டங்களும் என்னை அதிகமாக கவர்ந்தது.

போதகர் கெ. ஜெ. ஆபிரகாம் அவருடைய சாட்சியில் "நான் விசுவாசத்திற்கு வந்ததினால் முண்டக்கயத்தில் உள்ள என்னுடைய வீட்டிலிருந்து என் தகப்பனார் கருணையின்றி என்னை வெளியேற்றினார். தேவபிள்ளைகளின்றி எனக்கு உதவினவர்கள் எவருமில்லை" என்று சொன்னார். அவ்வாறாக அவர் பல இடங்களில் சென்று சுவிசேஷம் அறிவித்தார். இவருடைய ஊழியத்தின்மேல் உள்ள வாஞ்சையை கண்ட என்னுடைய தகப்பனார் அவரை உள்ளத்தில் அதிகமாக நேசித்தார்.

நான் வெளிநாட்டில் இருந்தபொழுது 1951ஆம் ஆண்டு என் சகோதரியை தகப்பனார் அவருக்குத் திருமணம் செய்து கொடுத்தார். செய்தியறிந்த நான் அதிகமாக வருந்தினேன். ஒன்றுமேயில்லாமல் சுவிசேஷம் என்று சொல்லி அலைந்து திரிகிற ஒருவனுக்கு என் சகோதரியை கொடுத்தார்களே என்று எண்ணி நான் வருந்தினதுண்டு.

தமிழ்நாட்டிற்குச் சென்று ஊழியம் செய்வதற்கான குறிப்பிட்ட அழைப்பு இருந்ததினால் 7 ஆண்டுகளுக்கு முன்னே மனைவியோடும் மகளோடும்கூட திருநெல் வேலியில் ஸ்ரீவைகுண்டம் எனும் இடத்திற்குச் சென்று

ஊழியம் செய்ய ஆரம்பித்தார். மூத்தமகன் பள்ளியில் படித்துக் கொண்டிருந்ததினால் சில நாட்களுக்குத் தொடர்ந்து வெளியேயே இருந்தான். உதவுவதற்கு ஒருவரும் இல்லாத இடத்தில் தங்குவதற்கு ஏற்ற ஒரு வீடுமில்லாமல் இருந்தபொழுது அவர்கள் கர்த்தரின் கரங்களையே நம்பி ஊழியத்தில் தொடர்ந்தார்கள். வாரத்தில் அதிக நாட்களும் பட்டினி கிடந்தார்கள். மகளுக்குப் பால் வாங்குவதற்குக்கூட வழியில்லை. கர்த்தர் அங்கே ஆத்துமாக்களை எழுப்பினார். அவர்கள் மத்தியில் அற்புதங்களையும் அடையாளங்களையும் நடப்பித்து ஊழியங்கள் பெருகச் செய்தார்.

பீட்டர் செல்லய்யா என்றொரு விசுவாசி இருந்தார். அவருடைய மகள் பெயர் மேரி. திருமணமான மேரிக்கு குழந்தை பிறக்கவில்லை. இவர்களுடைய உறவினர்களில் ஒருவரான மருத்துவர் ஒருவர், மேரியை மருத்துவ பரிசோதனை செய்துவிட்டு "கர்ப்பப்பை சுருங்கிவிட்டது. இனி குழந்தை பேறு சாத்தியமல்ல" என்று கூறினார். ஒருநாள் மேரி தன் கணவருடன் போதகர் ஆபிரகாமை காண வந்தார்கள். "மேரி குழந்தையை ஏன் கொண்டுவரவில்லை?" என்று கேட்டார் போதகர். அவள் மனமுடைந்து அழுதாள். ஆபிரகாம் அவளுக்காக ஜெபித்துவிட்டு "அடுத்த மாதம் நீ கர்ப்பிணியாவாய்" என்று கூறினார். சொன்னபடியே நடந்தது மேரிக்கு குழந்தை பிறந்தது.

ஒரு தகப்பனைப் போல அன்புகாட்டும் தமிழ் சகோதரர்களை வசதி படைத்தவர்களிலிருந்தும், ஏழைகளிலிருந்தும் கர்த்தர் எழுப்பினார். அவர்களுக்கு வேதாகம பாடங்கள் நடத்தினார். ஏற்றவர்களை ஊழியத்திற்கென்று தெரிந்துகொண்டார். தன்னுடைய கடினமான உழைப்பாலும் உற்சாகத்தினாலும் ஜெபத்தினாலும் பதினைந்திற்கும் மேற்பட்ட இடங்களில் ஊழியம் துவங்குவதற்கும், அங்கெல்லாம் சபைக் கட்டிடம் கட்டவும் கர்த்தர் உதவி செய்தார். ஊழியங்கள் இப்பொழுதும் தொடர்ந்து நடைபெறுகின்றன. பொருளாதார ரீதியாகவும் கர்த்தர் உதவி செய்து வருகிறார். அவ்வாறு கிடைக்கும் உதவிகளை ஊழியத்திற்காகவே பயன்படுத்தி வருகிறார். மகன் திருமணத்திற்குப் பிறகு அமெரிக்கா சென்றுவிட்டார். அவரும் தமிழ்நாட்டில் நடைபெறும் ஊழியங்களைத் தாங்குகிறார்.

என் சகோதரி சின்னம்மாவை அங்குள்ள விசுவாசிகள் சொந்த தாயாரைப்போல கனம்செய்து அன்பு செலுத்துகிறார்கள். ஜெபத்திற்காக வருபவர்களுக்காக அவள் ஜெபிப்பதையும் நான் பார்த்திருக்கிறேன்.

இருவரும் வயது சென்றவர்களானபடியால் இன்னமும் அவருடைய ஊழியத்தைத் தனிமனிதனாக பொறுப்பேற்று நடத்த வேண்டாம் என்றெண்ணி, தன்னுடைய ஊழியத்தின் நிமித்தமாக எழும்பிய எல்லாச் சபைகளையும் சர்ச் ஆப் காட் (Church of God) இன் பெயரில் பதிவுசெய்து கொடுத்து விட்டார். ஆகிலும் அந்தச் சபையார் போதகர். கெ.ஜெ. ஆபிரகாமுக்கு தன்னுடைய வாழ்நாள் முழுவதும் சபைகளின் மேல் சுதந்திரம் உண்டு என்று ஒப்புதல் அளித்திருக்கிறார்கள். கேரளாவில் வந்து தங்குவதற்கு நாங்கள் அநேக முறை அழைத்தோம். ஆனால் அவர் அதை

விருப்பமில்லை. தன் விசுவாசிகளின் மத்தியிலேயே தன் முடிவும் அமையவேண்டுமென்பதுதான் அவருடைய விருப்பம். இதுவரை பலமுறை அவர் அமெரிக்காவிற்கு சென்றிருக்கிறார்.

கர்த்தர் இன்னமும் ஆயுளும் ஆரோக்கியமும் கொடுத்து அவரை ஆசீர்வதிக்கட்டும் என்பது தான் என்னுடைய ஜெபம்.

இப்படிக்கு அவருடைய மைத்துனர்<br>
போதகர் கெ. சி. வர்க்கீஸ்<br>
ஐ.பி.சி. புத்தன்குருசு

## d. குடும்பத்தைக் குறித்து

போதகர் ஆபிரகாமிற்கு இரண்டு சகோதரிகளும் நான்கு சகோதரர்களும் உண்டு. ஆண்பிள்ளைகளில் இரண்டாவது குட்டப்பன். மூத்தமகன் இராணுவத்தில் கமாண்டராக இருந்தார். காஞிரப்பள்ளி என்ற இடத்திலிருக்கிறார். எல்லோரும் ஆர்த்தடாக்ஸ் சபையாராகவே இருக்கிறார்கள்.

இரட்சிக்கப்பட்டு ஞானஸ்நானம் பெற்றதினால் பெற்றோர் களுக்கு பெரும் எதிர்ப்பு இருந்தது. "சொத்தில் கொஞ்சமும் தரமாட்டேன்" என்று தகப்பனார் கூறினபொழுது "தந்தாலும் வாங்கமாட்டேன்" என்றார் ஆபிரகாம்.

தகப்பனார் இறக்கும்போது ஆபிரகாம் ஸ்ரீவைகுண்டத்தில் ஊழியம் செய்து கொண்டிருந்தார். மகள் லில்லி அப்பொழுது இரண்டு வயது குழந்தையாயிருந்தாள். அதிகாலை ஒரு மணியளவில் தூக்கத்திலிருந்து விழித்த

மகள் "கேரளாவிலுள்ள தாத்தா" என்று அழ ஆரம்பித்தாள். ஆபிரகாம் குழந்தையை தட்டிக்கொடுத்து கொண்டு தூங்கவைத்தார். திரும்பவும் அவள் அழுதாள். விழித்தெழுந்து மூன்றாம் முறையும் தாத்தா என்று அழுதாள். ஏதோ நடந்திருக்கிறது என்று ஆபிரகாம் புரிந்துகொண்டார். பொழுது விடிந்தவுடன் தந்தி கிடைத்தது. அதில் தகப்பனாரின் மரண செய்தி இருந்தது. ஆபிரகாமும் குடும்பமும் உடனே முண்டக்கயத்திற்கு விரைந்தார்கள். அடக்க ஆராதனையில் பங்கெடுத்தார். தகப்பனார் இறப்பதற்கு முன் ஓர் ஊழியக்காரர் அவரிடத்தில் வந்தார் ஆபிரகாமின் சபை ஊழியக்காரர் என்று தம்மை அறிமுகப்படுத்தினார். கிட்டேவரும்படி அவர் கை அசைத்து காண்பித்தார். ஊழியக்காரர் கூறினார், "மாதா நம்மை இரட்சிக்கமாட்டார்கள். பாதிரியாருக்கு பாவத்தை மன்னிக்க அதிகாரமில்லை. இயேசுவினிடத்தில் பாவ அறிக்கையிட்டு மன்னிப்பு பெற்றிருக்கிறீர்களா" என்று கேட்டார் "இல்லை" என்று சைகை காட்டினார். பாவத்தை அறிக்கையிட்டு கர்த்தரிடத்தில் ஜெபிக்க சொன்னார். தகப்பனார் அண்ணார்ந்து பார்த்துக்கொண்டு சற்று நேரம் அப்படியே கிடந்தார், மௌனமாயிருந்தார். கண்களிலிருந்து தாரை தாரையாக நீர் வடிந்தது இவ்வாறு மனம்திரும்புதல் நடந்தது. அதன்பிறகு ஊழியக்காரர் இவ்வாறு கேட்டார். "கர்த்தர் பாவத்தை மன்னித்தார் என்கிற நம்பிக்கை யிருக்கிறதா?" இருக்கிறது என்று தலையாட்டினார். பிறகு தகப்பனார் கண்களை மூடினார். கர்த்தருடைய அளவற்ற கிருபை இதற்குக் காரணமாயிற்று.

ஆபிரகாமின் தாயார் ஆபிரகாமின் மகள் லில்லியை 12 வயதில்தான் முதல்முதலாக பார்த்தார்கள். மகள்தான் தாயாரை காணவேண்டுமென்று முதலில் சொன்னது. முண்டக்கயம் வந்து தாயாரை பார்த்ததும் அவர்கள்

இவ்வாறு கேட்டார்கள் "குட்டப்பனின் மகள்தானே, இவளுடைய காது குத்தவில்லையே, காது குத்தனும், இல்லைனா இவளை யாரும் கட்டிக்கமாட்டார்கள்." அப்பொழுது ஆபிரகாம் சொன்னார்: "இவளை யாரும் கட்டிக்கமாட்டாங்க. ஆனால் திருமணம் நடைபெறும்" (லில்லியின் கணவர் ஒரு பொறியாளர்).

ஆபிரகாமின் தகப்பனார் உதுப்புவின் அடக்க ஆராதனைக்காக அவர் முண்டக்கயம் ஆர்த்தடாக்ஸ் தேவாலயத்திற்கு சென்றார். தேவாலயத்தின் பதிவேட்டில் தன் பெயர் இருக்கிறதா என்று பார்த்தார் - இருக்கிறது. இட்டியென்று பெயர் எழுதியிருந்தது. இந்த "இட்டி" என்பவர் யார்? என்று பாதிரியாரிடம் கேட்டார் ஆபிரகாம். "அது உதுப்புவின் ஒரு மகன், இப்பொழுது பெந்தெகொஸ்தே போதகராக இருக்கிறார்" என்று பதிலளித்தார் பாதிரியார். பிறகு ஏன் பதிவேட்டிலிருந்து பெயர் நீக்கவில்லை என்று கேட்டதற்கு, பெயரை நீக்கினால் இந்த ஜனங்கள் என்னை அடிப்பார்கள் என்றார் பாதிரியார். பாதிரியார் பெயரை கேட்டார். கெ. ஜெ. ஆபிரகாம் என்று பதில் சொன்னார் போதகர். அருகில் நின்றவர்கள் இவ்வாறு கூறினார்கள். "இவர்தான் முண்டக்கயம் குட்டப்பன், தேவாலய பதிவேட்டில் "இட்டி" என்று காண்பது இவருடைய பெயர்தான்". பாதிரியார் கட்டிப்பிடித்துக் கொண்டு சொன்னார்: "பார்த்ததில் மிகுந்த மகிழ்ச்சி".

## e. அனுபவ சாட்சிகள்

**CHURCH OF GOD IN INDIA**
27/65, 9th Street, Shanthi Nagar,
Palayamkottai, Tirunelveli - 627 002

**Pr. G. Jeyaseelan** **Date :** 23.02.04
Editor : "Athuma Athayam"

என்னுடைய பெயர் ஜி. ஜெயசீலன். நான் பாளையங் கோட்டை சாந்தி நகரில் குடியிருந்து வருகிறேன். நான் பாரம்பரிய சி. எஸ். ஐ. குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவன். என்னுடைய வாலிப நாட்களில் சிகரெட், சினிமா, மது போன்ற எல்லா பாவ வாழ்க்கையிலும் நான் வாழ்ந்து வந்தேன். 1969 ம் ஆண்டு என்னுடைய திருமணம் நடைபெற்றது. அப்பொழுது நான் பாளையங்கோட்டை ஜான்ஸ் கல்லூரியில் எழுத்தராக பணிபுரிந்து வந்தேன். எப்படியாவது என்னுடைய பாவ வாழ்க்கையிலிருந்து விடுபட வேண்டும் இரட்சிக்கப்பட வேண்டும் என்று விரும்பியும் என்னால் கூடாமற்போயிற்று. இந்த சூழ்நிலையில் 1977ம் வருடம் அக்டோபர் மாதம் மாலை அன்று நகரில் ஒரு வீட்டு முன்பாக ஒரு நற்செய்தி கூட்டம் நடந்தது. அக்கூட்டத்தில் ஸ்ரீவைகுண்டத்திலிருந்து வந்த பாஸ்டர் கெ. ஜெ. ஆபிரகாம் அவர்கள் பேசினார்கள். கடைசியில் ஐயா எனக்காக ஜெபித்தார்கள். அன்று என்னை இயேசுவுக்கு ஒப்புக் கொடுத்தேன். பாவங்களை நான் அறிக்கைச் செய்தேன். பாவமன்னிப்பு பெற்றுக் கொண்டேன். கிறிஸ்துவின் மெய்யான அன்பையும் சமாதானத்தையும் சந்தோஷத்தையும் நான் பெற்றுக் கொண்டேன். மிகவும் சந்தோஷமான அந்த நாள்

என்னுடைய இரட்சிப்பின் நாள்.

அந்த வாரத்தில் முதன்முதலாக நான் மட்டும் ஸ்ரீவைகுண்டம் தேவசபையில் ஆராதனையில் கலந்து கொண்டேன். பரிசுத்தஆவி அபிஷேகம் பெற்றேன். பரலோகத்தின் ஆராதனையை பூமியில் கண்டது போல ஒரு மகிழ்ச்சி. ஐயா எனக்கு தீர்க்கதரிசனமாக ஒரு வார்த்தை சொன்னார்கள். என்னுடைய வாழ்க்கையில் அது உண்மையாயிருந்தது. தொடர்ந்து குடும்பமாக ஞாயிற்றுக்கிழமை ஆராதனையில் கலந்து கொள்ள கொண்டோம். வேத சத்தியங் களையும் உபதேசங்களையும் நாங்கள் கேட்டு, நானும் மனைவியும் மூழ்கி ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டோம்.

1983ம் வருடம் எங்கள் வீட்டுமாடியில் ஒரு ஹால் கட்டும்படி ஐயா சொன்னார்கள். அதன்படி நான் செய்தேன். 1983ஆம் வருடம் மே மாதம் மூன்று நாட்கள் சாந்தி நகரில் ஒரு கன்வென்ஷன் வைத்து ஒரு ஊழியரைக் கொண்டு ஆராதனையை ஆரம்பித்தோம். கர்த்தர் என்னை ஊழியத்திற்கு அழைத்தும் அதை நான் நிறைவேற்ற விரும்பாததினால் பல சோதனைகள், நஷ்டங்கள் பல பிரச்சனைகள் எனக்கு உண்டாயிற்று. ஊழியம் செய்யமாட்டேன் என்ற நிலையிலிருக்கும் போது என்னுடைய $3^1/_2$ வயது மகள் திடீர் நோய் பட்டு இறந்தாள். மிகவும் வேதனைப்பட்டேன். சோர்ந்து போனேன். அந்த நாளில் கர்த்தர் என்னோடு பேசினார் "எத்தனை நாள் நீ இவ்விதமாய் மவுனமாயிருப்பாய்". அன்று கர்த்தரிடத்தில் ஒரு பொருத்தனை செய்தேன். எந்த மகளை, நீர் எடுத்தீரோ அந்த மகளை எனக்குத் திரும்ப தாரும். நான் உமக்காக ஊழியம் செய்வேன் என்றேன். அப்படியே சரியாக பத்தாம் மாதம் அந்த மகளை தந்தார். அவள் பெயரையே

J. ரோஸ்டஸ் (Rosetus) சூட்டினேன். இன்று கல்லூரியில் படிக்கிறாள்.

நான் கல்லூரியில் வேலைப் பார்த்துக் கொண்டே என்னுடைய சபை ஊழியத்தை 1987 ஜூலை மாதம் முதல் செய்ய ஆரம்பித்தேன். என்னுடைய மூத்த மகள் J. ஜஸ்டஸ் இரட்சிக்கப்பட்டு ஞானஸ்நானம் பெற்று அபிஷேகம் பெற்றாள். 1993ம் வருடம் கயத்தார் வட்டாரப் பகுதியில் ஊழியம் செய்து கொண்டிருக்கும்போது அங்கு சில அற்புத அடையாளங்கள் மூலம் அநேகர் தொடப்பட்டார்கள். அங்கு ஒரு கன்வென்ஷன் நடத்தி அங்கு ஒரு சபையைக் கட்டக் கர்த்தர் கிருபைச் செய்தார். அதே 1993ம் வருடம் மணியாச்சி மற்றும் கல்லத்தி இன்று கிராமங்களுக்கு ஊழியம் சென்றோம். அதன் பயனாக கல்லத்திகிணறு கிராமத்தில் ஒரு சபையை உருவாக்கக் கர்த்தர் உதவிச் செய்தார். ஐயா மலம் கன்வென்ஷன் நடத்தி சபையை திறந்து வைத்தார்கள். இரண்டாவது மகன் J. பாஸ்டஸ் கணக்கபிள்ளை வலசையில் I.T.I. பிட்டர் கோர்ஸ் படித்துக் கொண்டிருக்கும் போது இரட்சிக்கப் பட்டான். ஞானஸ்நானம் பெற்றான். 1996ம் வருடம் கீழநத்தம் வடக்கூர் பகுதியில் ஊழியம் சென்றோம். அதன் பயனாக கீழநத்தம் வடக்கூரில் ஒரு சபையைக் கட்டக் கர்த்தர் கிருபைச் செய்தார். மருத்துவ பிரதிநிதியாக இருந்து கொண்டு இந்த ஊழியத்தை இரண்டாவது மகன் செய்து வருகிறான்.

1998ம் வருடம் பாவூர்சத்திரம் பக்கம் ஊழியம் செய்ததின் பலனாக செல்வ விநாயகர் புரம் என்ற ஒரு இடத்தில் ஒரு சபையை உருவாக்க கர்த்தர் உதவிச் செய்தார். முழு நேர ஊழியராக பாஸ்டர் எபனேசர் செய்து வருகிறார் 2004ம்

## கர்த்தருக்கு ஸ்தோத்திரம்

ஐயா, நான் ஒரு இந்து குடும்பத்தில் பிறந்தவன். என்னுடைய சொந்த ஊர் நட்டாத்தி, என் பெயர் பெரியநத்தம். நான் பயங்கர குடிக்காரன். எனக்கு மூன்று ஆண்பிள்ளைகள் உண்டு. என் மனைவி என் நிமித்தம் பட்ட வேதனைகள் கொஞ்சம் நஞ்சம் அல்ல. காரணம், நான் பிசாசு பிடித்தவனாக குடிகாரனாக வீட்டுக்கு வராமல் எங்கேயாவது படுத்துக்கொள்வேன். அப்படியே என்னுடைய சொத்துக்கள் எல்லாம் அழித்துவிட்டேன். கடைசியாக குடித்து குடித்து மரணப்படுக்கைக்கு வந்துவிட்டேன். அப்படிபட்ட நிலைமையில் அன்று காலை ஞாயிற்றுகிழமை எங்கள் வீட்டுபக்கத்தில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. ஆனால் சுவிசேஷம் அறிவித்தவர்களை அழைத்து ஜெபிக்கும்படி கேட்டுக்கொண்டேன் அவர்கள். வந்து பயந்து வந்து ஜெபித்தார்கள். அவர்கள் இடத்தில் சாயங்காலம் வந்து ஜெபியுங்கள். நான் பிழைத்து கொள்வேன் என கூறிவிட்டு நான் அப்படியே படுத்துக் கொண்டேன். 1975 டிசம்பர் 18ம் தேதி அதே நாட்களில் ஸ்ரீவைகுண்டத்தில் கர்த்தர் தமது தாசனுக்கு ஆராதனை வேளையில் என்னை பற்றி, நட்டாத்தில் ஒரு வாலிபனுடைய உயிர் மரணத்தோடு போராடிக் கொண்டிருக்கிறான் என்று சொல்ல சபையார் ஊக்கமாக ஜெபியுங்கள் என்று சொல்லி யிருக்கிறார்கள். அன்று சாயங்காலம் எனக்காக சபையி லிருந்து இரண்டு விசுவாசிகளை அனுப்பி ஜெபிக்கும்படி அனுப்பினார். அதில் ஒருவர் இன்ஸ்பெக்டர் துரைராஜ் அய்யா அவர்கள். அன்று என்னிலிருந்து பிசாசு துரத்தப் பட்டு குடியிலிருந்தும் தேவன் விடுதலை கொடுத்தார். அன்றே நான் என் மனைவி பிள்ளைகள் இயேசுவை சொந்த

இரட்சகராக ஏற்றுக்கொண்டோம்.

2தீமோ. 3 : 14 ன்படி நான் என் நிலையில் இருந்தேன். இன்னார் இடத்தில் கற்றேன் என்பதை ஒருநாளும் மறக்கமுடியாது. உபா. 8 : 16,17 என் சாமர்த்தியம் அல்ல சரியான நேரத்திலிருந்து கேரளா மாநிலத்திலிருந்து என் போன்ற குடிக்காரனை மாற்றவும் பாவத்திலிருந்தும், சாபத்திலிருந்தும் விடுவிக்கவும் எங்கள் குடும்பம் சமாதானம் சந்தோஷ அடையவும் என் ஆவிக்குரிய தகப்பனை தேவன் அனுப்பினதோடு மட்டும் அல்ல. அவர்கள் குடும்பம் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறது. என்பதை மனப்பூர்வமாக நான் சொல்லமுடியும். நான் இரட்சிக்கப்பட்ட நாளில் என் தகப்பனார் அப்படியே விட்டுவிடவில்லை. சாயர்புரம், நட்டாத்தி, ஏரல் முதலிய இடங்களில் Bible Study எடுத்து. கலா. 4. 19ன் வசனத்தின் படி எங்களை வளர்ப்பதற்கு ஆவிக்குரிய பிள்ளைகளாக மாற்றுவதற்கு எங்களுக்காக அவர்கள் கால்நடையாக நடந்து வந்து நட்டாத்தியில் மழைகாலமானாலும் தண்ணீரில் நடந்து வந்து Bible Study முடிந்தவுடன் பஸ் இல்லாமல் பெருங்குளம் வரை நடந்து ஸ்ரீவைகுண்டம் செல்லுவார்கள். அதை மறக்கமுடியாது. அத்துடன் காலேஜில் என்னோடு வேலைப் பார்த்து வந்த சகோதரன் சாலமோன் ஊழியத்திற்கு செல்லுவேன். அவர்களும் ஒரு ஆவிக்குரிய மகனாக என்னை வளர்த்தார் கள். குலையன் கரிசலில் ஒரு ஆவிக்குரிய போதகர் திடீர் என்று இறந்து விட்டார்கள். பிறகு கர்த்தருடைய பெரிதான கிருபையால் அதே குலையன் கரிசல் சபையில் ஒரு ஊழியக்காரனாக தேவசித்தப்படி ஸ்ரீவைகுண்டம் கெ. ஜெ. அய்யா அவர்கள் என்னை நியமித்தார்கள். அன்றிலிருந்து கர்த்தருடைய கிருபையால் அப்பகுதியில் ஊழியஞ்செய்து

கொண்டு வருகிறேன். பிள்ளைகளையும் கர்த்தர் ஆசீர்வதித்திருக்கிறார். கர்த்தருக்கே மகிமையுண்டாவதாக.

பாஸ்டர் தாமஸ் (இந்திய தேவ சபை)
குலையன்கரிசல்,
தூத்துக்குடி மாவட்டம்.

---

"நான் உபத்திரவப்பட்டது எனக்கு நல்லது அதினால் உமது பிரமாணங்களைக் கற்றுக்கொள்ளு கிறேன்."

நான் மேனிலைப்பள்ளியில் இடைநிலை ஆசிரியனாக பணியாற்றிக் கொண்டிருந்தேன். அந்நாட்களில் உபத்திர வத்தின் நாட்களில் கடந்து வந்து கொண்டிருந்தேன். அந்நாட்களில் அநேக ஊழியர்களின் தொடர்பு கிடைத்தது.

குறிப்பாக 1947ம் ஆண்டு தேவனுடைய தாசன் பாஸ்டர் கே. ஜெ. ஆபிரகாம் அவர்கள் சந்திப்பு மிகவும் ஆச்சரியமானது. கர்த்தரே அந்த ஐக்கியத்தை தந்தார்.

அந்நாட்களில் பிரயாணவசதி மிகவும் குறைவு. அப்படியிருந்தாலும் மாதம் ஒருமுறை வீட்டிற்கு வருவார் கள். நாங்களும் குடும்பமாக மாதந்தோறும் உபவாச ஜெபத்திற்கு திருவைகுண்டம் செல்வோம். பரிசுத்த வேதத்தின் இரகசியங்களை அறியும்படியாக தேவன் கிருபை செய்தார்.

உபவாசநாட்களில் ஊழியத்தின் தரிசனத்தை தேவன் தந்தார். குடும்பமாக கர்த்தரை சேவிக்கும் பாக்கியம் கிடைத்தது. உக்கிரன்கோட்டையில் 1979ம் ஆண்டு டிசம்பரில் ஆராதனை ஆரம்பித்தோம். ஊழியத்தின்

நிமித்தம் பல நெருக்கங்கள் ஏற்பட்டது. கர்த்தரின் கிருபை தாங்கிற்று.

தேவனுடைய தாசனின் ஜெபத்தினாலும் ஆலோசனையினாலும் கர்த்தரின் கிருபையால் தற்சமயம் ஏழு கிராமங்களில் ஆராதனை நடைபெறுகிறது. சில ஊழியர்களையும் உருவாக்குவதற்கு கர்த்தர் கிருபை செய்தார்.

கர்த்தருக்கே கனமும் மகிமையும் உண்டாவதாக.

தா. வில்லவதாஸ்
பெயிலோவாயீர் தேவ சபை
உக்கிரன்கோட்டை
திருநெல்வேலி மாவட்டம்

---

கிறிஸ்துவுக்குள் எனது சாட்சியை பற்றி கூற விரும்புகிறேன். என்னுடைய குருவும், பாஸ்டருமான கே. ஜெ. ஆபிரகாம் அவர்கள் மூலம் சீஷத்துவத்தில் பலப்படவும், உன்னத மேன்மையான ஊழியத்திற்கு அனுபவங்கள் பெறவும் காரணமாக இருந்தபடியினால் சுயசரித்திரமாகிய இப்புத்தகத்தில் கூற விரும்புகிறேன்.

இந்து மார்க்கத்தில் பிறந்து, இந்து முறையில் வளர்க்கப்பட்ட பெற்றோர்களுக்கு ஒரே மகனாகப் பிறந்தேன். பள்ளியில் என்னுடைய பள்ளித் தகுதி முடியும் வரையிலும் இந்து முறையில் விக்கிரகாராதனை செய்து கொண்டிருந்தேன். பின்பு வருவாய் துறையில் துணை தாசில்தாராக வேலை பார்த்துவந்தேன்.

கிறிஸ்துவைக் குறித்து அறிய வேண்டுமென்று என் உள்ளத்தில் வாஞ்சையிருந்தது. அதற்காகவே ஒரு கிறிஸ்தவப் பெண்ணை விவாகம் பண்ணினேன். ஒரு

வருடங்கள் சி. எஸ். ஐ முறையில் இருந்தேன். 1975ம் வருடம் ஒரு பெந்தெகொஸ்தே முறையிலுள்ள பாஸ்டர் ஒருவர் பிரசங்கத்தில் நான் உணர்த்தப்பட்டேன். "நீங்களே அந்த ஆலயம்" அந்த வசனம் என் உள்ளத்தைத் தொட்டது. அன்று முதல் வேதாகமம் ஒன்றை வாங்கி வாசிக்க ஆரம்பித்தேன். என் மனைவியிடம் கர்த்தரிடத்தில் எப்படி ஜெபிக்க வேண்டுமென்று கேட்டேன். "பரமண்டலங்களில் இருக்கிற எங்கள் பிதாவே" என்ற ஜெபத்தை சொல்லி ஜெபம் பண்ணவேண்டுமென்று சொன்னார்கள். அதை என்னால் சொல்லி ஜெபிக்க முடியாததால் ஒரு பேப்பரில் எழுதி வாசித்து கர்த்தரிடத்தில் ஜெபித்தும், வேதாகமம் வாசித்தும் வந்தேன். கர்த்தர் என்னைத் தொட்டது முதல் விட்டு கர்த்தரோடு மனதை விட்டுக் கொடுத்து வந்தேன். என் இருதயத்தில் சந்தோஷம் வந்தது. "நீங்களே அந்த ஆலயம்" என்ற வசனம் என் உள்ளத்தைத் தொட்டதும் அதை சிந்தித்துக் கொண்டே வீட்டிற்குத் திரும்பினேன். அன்று இரவு என்னுடைய சரீரம் முழுவதும் ஒரே சூடாக இருந்தது. குளிரும் (விரைப்பும்) இருந்தது. காய்ச்சல் என்று எண்ணி ஒரு போர்வையால் போர்த்திக் கொண்டேன். தூங்கிக் கொண்டிருக்கிற வேளையில் கர்த்தர் என்னோடு பேசினார். திறக்கப்பட்ட வேதாகமத்தை காண்பித்து இதை வாசி என்ற சத்தத்தை கேட்டேன். உடனே எழுந்திருந்து சரி கர்த்தாவே! என்றேன். இப்படி மனந்திரும்பி இரட்சிப்பின் அனுபவத்தைப் பெற்றேன். 1977-இல் சென்னை ஏ.சி.ஏ சர்ச் பாஸ்டர் சாட் சுந்தரம் அவர்கள் நான் வளர்ந்து வந்த ஊரில் கன்வென்ஷன் நடத்தினார். மறுநாள் அந்த கன்வென்ஷன் கூட்டத்தில் ஜெபிக்கிற வேளையில் என்னை கர்த்தர் அபிஷேகம் பண்ணினார். பாஸ்டர் சாம் சுந்தரம் அவர்களால் ஞானஸ்நானம் பெற்றேன். ஒருநாள் பாஸ்டர் கே. ஜெ. ஆபிரகாம் அவர்களை சந்தித்தேன். அவர் மறுநாள் காலை வீட்டிற்கு வாருங்கள் என்று சொன்னார்கள்.

அந்தபடியே அவரிடம் சென்றேன். தினமும் காலை ஒரு மணிநேரம் பைபிள் ஸ்டடி ஸ்பெஷலாக நடத்துகிறேன் என்று சொன்னார். ஒரு வாரம் ஆராதனைக்கு வாருங்கள் என்று சொன்னார். ஆராதனை முறைமை என் உள்ளத்தை அதிக உற்சாகப்படுத்தியது.

1985 ல் பேய்க்குளத்தில் ஒரு பையனுக்கு பிசாசு பிடித்திருந்தது. அந்த பையனுக்கு ஞாயிறுடைய ஆராதனையில் கர்த்தர் விடுதலை கொடுத்தார். பின்பு அந்த பையனுடைய தாய்க்கும் பிசாசு பிடித்திருந்தது. அவர்களுக்காகவும் ஜெபித்தபோது கர்த்தர் விடுதலை கொடுத்தார். 1986 ல் ஜெபவீடு புதிதாக கட்டி சபை உருவானது. பதினைந்து விசுவாசிகள் இருந்தார்கள். என்னை அந்த சபையை நடத்தும்படி கூறினார். எனக்கு சபை ஊழியம் 1986ல் அவர்களால் ஆரம்பமானது. இப்போது சுமார் இருநூறு (200) விசுவாசிகளை கர்த்தர் கொடுத்திருக்கிறார். சபை ஹாலும் விசாலமாக்க பட்டுள்ளது. புதிதாக இரண்டு இடங்களிலும் ஊழியங்கள் ஆரம்பிக்கும்படி கர்த்தர் கிருபை செய்தார். அந்த இடங்களில் ஜெபவீடு கட்டி ஆராதனை நடத்தி வருகிறோம். அங்கும் சுமார் நூறு (100) ஆத்துமாக்களை கர்த்தர் கொடுத்திருக்கிறார். இவ்வாறு சபை ஊழியத்தின் முறைமையை எனது குருவாகிய சுயசரித்திரக்காரரான பாஸ்டர் கே. ஜெ. ஆபிரகாம் மூலம் கர்த்தர் என்னை உயர்த்தினார் என்பதை சாட்சியாகக் கூறுகிறேன். இந்த மார்க்கத்தில் வளர்க்கப்பட்டுவந்த என்னை கர்த்தருடைய ஊழியத்திற்காக பயிற்றுவித்து கர்த்தருடைய அநுக்கிரகம் கிடைத்தது அவர்மூலம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

ரூ. பி. அதிசயம் சாமுவேல்
இந்திய தேவசபை
பேய்க்குளம்

# 8

## "முடிவுரை"

குட்டப்பன் இன்று வாழ்வின் அந்திசாயும் நேரத்தை நெருங்கியிருந்தாலும்கூட குட்டப்பன் என்ற போதகர் கெ. ஜெ. ஆபிரகாம் ஊழியத்தில் இன்றும் சுறுசுறுப்போடு விளங்குகிறார். நான் அவரைச் சந்தித்த மூன்று முறையும் அவர் வேதாகம வகுப்புகளிலும் ஜெபத்திலும் முழுமை யாகத் தன்னை ஈடுப்படுத்தி கொண்டிருந்தார். பாளையங் கோட்டையில் காமராஜர் நகரில் உள்ள இல்லத்தில் நிறையப்பேர் அவரைச் சந்திக்க வருகிறார்கள். திங்கள், செவ்வாய், புதன்கிழமைகளில் பாளையங்கோட்டையிலும், வியாழன் முதல் ஞாயிற்றுகிழமை வரை ஸ்ரீவைகுண்டத் திலும் தங்குகிறார். குட்டப்பனின் சபைகளில் போதகர் களுக்கு இடமாற்றம் இல்லாதது போல குட்டப்பனும் இடம் மாறுவதில்லை. இருநூறு பேர் கூடி வரும் சபைகள்

வேறேயும் இருக்கிறது. ஆனாலும் அங்கெல்லாம் அவர் செல்வதில்லை. தொலைபேசி இணைப்பு இல்லாத ஸ்ரீவைகுண்டத்தில் தங்குவதுதான் நான் அதிகம் விரும்புகிறேன் என்று அவர் என்னிடம் கூறினார். நான் அங்கு சென்ற நாட்களிலெல்லாம் ஒரு தேவதூதனைக் காண வருவதுபோல் விசுவாசிகளும், அல்லாதவர்களும் அவரைக் காண வருவதை கண்டேன். சிலர் ஏதாகிலும் காணிக்கைகளோடு வருகிறார்கள். அவைகள் பல காரங்களோ அல்லதோ பணமோ ஆகலாம். எல்லோருக்கும் அய்யாவின் ஜெபம் வேண்டும். அவர்கள் வந்து முழங்காலில் நிற்பார்கள். அய்யா தலையில் கை வைத்துகொண்டோ அல்லாமலோ ஜெபிப்பார். அவர்கள் மனநிறைவோடு திரும்புவார்கள். ஒவ்வொரு வருடமும் ஏழைகளுக்கு குட்டப்பன் ஆடைகள் வாங்கி கொடுப்பார். அணிந்து தேய்ந்து போன பழைய துணிகளைக் கொடுத்து எப்படியாவது இடம் .காலியாகட்டும் என்று எண்ணுகிற விசுவாசிகளைப் போல அல்ல. உயர்ந்த ரக ஆடைகளை நல்ல கடைகளிலிருந்து வாங்கி ஏழை விசுவாசிகளுக்கு எல்லா வருடமும் கொடுப்பார். குட்டப்பன் கடைகளுக்குச் சென்றால் கடைக்காரருக்கு பெரிய மகிழ்ச்சி. மரியாதையுடன் அவரை வரவேற்று உபசரிப்பார்கள். பெண்களுக்கான ஆடைகள் வாங்கி ரசீது போடும்போது அதில் சற்று விலையும் குறைப்பார்கள். கடைக்காரர்கள் சொல்வார்கள் : "ஒரு மலையாளி தமிழ்நாட்டிற்கு வந்து தமிழர்களுக்கு இத்தனை நன்மைகள் செய்கிறார். அப்பொழுது நாமும் அதில் ஒரு பங்கைக் கட்டாயமாகத் தாங்கவேண்டும்"

தன் கார் ஓட்டுநரை தனக்குச் சமமாக மேஜையின் மீதுதமர்ந்து சாப்பிட அனுமதிக்கும், ஏழைகளுக்காக

அயராது உழைக்கும் ஓர் தேவனுடைய தாசர்தான் குட்டப்பன். அப்படித்தான் வேண்டும். இல்லையென்றால் கிறிஸ்தவ வாழ்க்கைக்கு அர்த்தமே இல்லையே. குட்டப்பன் ஒருமுறை ஒரு பணக்காரரிடம் இவ்வாறு கேட்டார் "தங்களுடைய வண்டி ஓட்டுநரின் சகோதரியுடைய திருமணத்திற்கு தாங்களை அழைத்தால் எவ்வளவு மொய் எழுதுவீர்கள்" அவர் பதிலளித்தார் "நூறு ரூபாய் கொடுப்பேன்". ஆனால் குட்டப்பன் கொடுத்தது எவ்வளவு தெரியுமா? பத்தாயிரம் ரூபாய். இப்படிக் கொடுக்க வேண்டும் என்பதுதான் அவருடைய கொள்கை. குட்டப்பனின் இந்த வள்ளல் தன்மையை நானே அனுபவித்திருக்கிறேன். என் தலையின்மீது கை வைத்து ஆசீர்வதித்துதான் என்னை வழியனுப்பினார். கேரளாவில் ஊழியம் செய்யும் ஒவ்வொருவரும் எப்பேர்பட்டவர்கள் என்று தமிழ்நாட்டில் வாழும் குட்டப்பனுக்கு நன்றாகத் தெரியும். சுவிசேஷம் அறிவித்து தாராளமாகச் சம்பாதித்த பிறகும் ஒரு சிறு உதவி கூட செய்யாதவர்களை குறித்து அவர் சொல்வதுண்டு. அவர்கள் மிகவும் பிரசித்தி பெற்றவர்கள். அவர்களை குட்டப்பன் மதிக்கிறார். ஆனால் உதவி செய்யாத குணத்தை அவரால் ஏற்றுகொள்ளமுடியாது. "அவர் தரவில்லையா.............அய்யோ........கொடுக்கணும்...............கொடுக்கலனா எப்படி?...... வாங்கினால் மட்டும் போதுமா?........

வெளிநாடுகளில் இருந்து வரும் மலையாள விசுவாசிகள், திருவல்லாவிலும் எர்ணாகளத்திலும், திருச்சூரிலும் உள்ள மிகப்பெரிய துணிக்கடைகளுக்கு சென்று, நாம் மீன் வாங்குவதைவிடத் திறமையோடு துணிமணிகள் வாங்கிக்குவிப்பதுண்டு. அதிகபணம் செலவழித்து சுற்றுலா மையங்களுக்குச் செல்வதுண்டு. இதைக் குறித்து

விலையினால் ஒரு மாத சம்பளம் கூட இவைகளுக்குச் செலவிடுவதில்லை என்று சொல்வார்கள். நம் கண் முன்னாலேயே போதிய உணவில்லாமலும் உடையில்லாமலும் தங்குவதற்கு இடமில்லாமலும் ஜனங்கள் தத்தளிக்கையிலே பல உணவின்றி இவ்வாறு செய்து சரிதானா என்று சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். விலையேறப்பெற்ற ஆடைகள் அணிவதை பாவம் என்று திருவசனம் கூறுகையில் ஆயிரக்கணக்கில் ரூபாய் விலைமதிப்புள்ள ஆடைகள் அணிவதில் அவர்கள் தவறேதும் காணவில்லை. ஊழியக்காரர்களுக்கு நூறு அல்லது இருநூறு ரூபாய் கொடுத்து இவர்கள் மனநிறைவைத் தேடிக்கொண்டிருக்கிறார்கள். கடந்த கால நிகழ்வுகளை பெற்றோர்கள் இவர்களுக்கு சொல்லவே இல்லை என்பதற்கு இவைகளே ஆதாரம். சோதோமையும் கொமோராவையும் அவைகளுக்குச் சுற்றிலுமுள்ள மற்றும் பட்டணங்களையும் தேவனானவர் அழித்ததின் காரணம் பால்வினை பாவங்கள் மட்டுமல்ல, மாறாக கர்வம், அகங்காரம், பெருந்தீனி, எளியவர்களைக் கவனிக்காமல் இருப்பது போன்றவைகளுமே. (எசேக்கியேல் 16:49) இவைகளில் ஏதாகிலும் ஒன்றை என்னிடத்தில் இல்லை என ஒரு மத்திய திருவான்கூர் விசுவாசி சொல்லமுடியுமா? “தரித்திரரைக் கவனிக்க வேண்டும்” என்கிற முக்கியமான அறிவுரை எருசலேம் சங்கத்திலும்கூட இருந்தது. “காலம் அச்சன்” என்பவர் இவ்வாறு சொல்லக் கேட்டிருக்கிறேன். “உன் கையின் பிரயாசத்தை நீயே தனியாக புசிக்க வேண்டும்” என்று அல்ல. தரித்திரர் எப்பொழுதும் உங்களோடுகூட இருக்கிறார்கள் என்று கர்த்தர் கூறியிருக்கிறார். நமது நிறைவு தரித்திரரின் குறைவுக்கு

உதவவேண்டுமென்று கர்த்தர் விரும்புகிறார். நாங்கள் கர்த்தரை பின்பற்றினோம் அவர் எங்களை ஆசீர்வதித்தார் என்று சாட்சிகளில் பலமுறை கேள்விப்பட்டிருக்கிறேன். எனக்கு அருமையானவர்களே, நீங்கள் தவறிவிட்டீர்கள். நீங்க மாத்திரம் நன்மையடைவதற்கல்ல. உங்கள் பிள்ளைகளுக்கு ஞானத்தை கொடுத்து அவர் அமெரிக்காவிற்கு அனுப்பினது. மற்றவர்களையும் நீ நினைக்கவேண்டும். வெளிநாட்டிலே நீண்ட நாட்கள் வேலைசெய்த ஒரு சகோதரரை நான் அறிவேன். பெரிய சம்பளம் ஒன்றுமில்லை. ஓரளவிற்கு வாழலாம் என்ற நிலை. அவர் ஒருநாள் செய்தித்தாளில் படத்துடன் வந்த ஒரு குடும்பத்தின் கதையை வாசித்தார். தாயார் இறந்துபோன மன்று சிறுகுழந்தைகள் மூத்தவளுக்கு ஆறு வயதிருக்கும். தகப்பனாருக்கு கருங்கல் வெட்டியெடுக்குமிடத்தில் வேலை. தகப்பனார் வேலைக்கு சென்றுவிட்டால் மாலையில் திரும்பும வரையிலும் சிறிய இரண்டு குழந்தைகளையம் கவனித்து கொண்டு இந்தச் சிறுபெண் குடிசையிலேயே இருக்கவேண்டும். இந்தச் செய்தியை வாசித்த அந்தச் சகோதரர் அழுதார். தன் சொந்த ஊரில் விட்டு வந்த குழந்தையை நினைத்தார். செய்தியில் கண்ட சிறுமிக்கும் அதே வயது. தன் மகளுக்கு பிறந்தநாள் பரிசாக அனுப்புவதற்கு சற்று பணம் சேர்த்து வைத்திருந்தார். அதை முழுவதும் தன் மகளின் பெயரில் அந்த குடும்பத்திற்கு அனுப்பிவைத்தார். எவ்வளவு சந்தோஷம்! எவ்வளவு திருப்தி! இப்பேர்ப்பட்ட அநேகர் இருக்கிறார்கள். கைபிரதிகள் அச்சடிப்பதற்கு சற்றுப் பணம் கேட்டால் தராத கோடீஸ்வரர்கள் உண்டு. “இப்பொழுது கொஞ்சம் “டைட்” என்பார்கள், இவர்கள் எப்பொழுது தான் “லூஸ்” ஆகுவார்களோ?

முண்டக்கயம் குட்டப்பன் தாராளமாகக் கொடுப்பவர் ஆனால், அவருக்கு வாங்குவதற்கு தெரியாது. ஏன் என்றால் அவர் பணம் கேட்பதில்லை. மகளிடத்தில்கூட ஊழியத்திற்காகப் பணம் கேட்டதில்லை என்று கேள்விப்பட்டபொழுது நான் ஆச்சரியப்பட்டேன். காரணம் நான் கேட்பதுண்டு, கைபிரதிகள் அச்சடிப்பதற்கும் கோட்லஸ் மைக் (Cordless Mike) வாங்குவதற்கும் கேலிச்சித்திரம் வரைவதற்கான வெள்ளை அட்டை வாங்குவதற்கும் நான் சிலரிடத்தில் பணம் கேட்டிருக்கிறேன். ஒருவர் தவிர நான் கேட்டவர்களெல்லாம் தந்தும் இருக்கிறார்கள். பயணத்திற்காக செலவை தவிர மீதி பணமெல்லாம் அவைகளுக்கே செலவும் செய்திருக்கிறேன். ஆனால் போதகர் கெ. ஜெ. ஆபிரகாம் கேட்பதில்லை. கேட்காமலேயே அவருக்குப் பணம் கிடைக்கிறது. அவர் என்னிடம் கூறினார் "கேட்பதில் தவறில்லை. கர்த்தரும் கேட்டிருக்கிறார் (உங்களிடத்தில் என்ன இருக்கிறது?) பவுல் அப்போஸ்தலனும் கேட்டிருக்கிறார். இன்னும் அநேகரும் கேட்ருக்கிறார்கள். "ஆனால் கேட்கக்கூடாது என்பதுதான் என்னை குறித்த தேவசித்தம்." சில நாட்களுக்கு முன் அமெரிக்காவில் இருந்து வந்த மகன் பழைய டாடா சுமோ (TATA SUMO) விற்கச் சொன்னான். புதிய சுமோ வாங்கிக் கொடுத்துவிட்டு திரும்பிச் சென்றான். அவன் திரும்பிப் போன பிறகுதான் பதினைந்து வருடத்திற்கான சாலை வரி (ROAD TAX) ஒரே தடவையாகக் கட்டவேண்டும் என்று தெரியவந்தது. குட்டப்பன் மகனிடத்தில் இதைக் குறித்து கூறவில்லை. அதன் நிமித்தமாக "பணக்கஷ்டம்" உண்டு என்று அவர் என்னிடத்தில் கூறியதுண்டு.

போதகர் ஆபிரகாம் நகைச்சுவையாகப் பேசுவார். தொலைக்காட்சியில் செய்தி பார்ப்பதுண்டு. உணவிற்கு பிறகு “துப்பாக்கி” என்று கேட்டபொழுது புரியாத நான் விழித்தேன். உடனே மனைவி தொலைக்காட்சியின் ரிமோட் (REMOTE) கொண்டு வந்து கொடுத்தார்கள். அப்பொழுது தான் எனக்கு புரிந்தது. செய்தி முடிந்தவுடன் ஆப் (OFF) அமுக்கி நிகழ்ச்சி முடிப்பதற்காக தொலைக்காட்சிக்கு நான் விரோதியல்ல, ஆனால் விலையேறப்பெற்ற நம் நேரத்தை அது சாப்பிட்டுவிடும் என்பதை நான் அனுபவபூர்வமாக உணர்ந்திருக்கிறேன். இவரைப் போல் கட்டுப்பாடு உள்ளவர்கள் மட்டுமே அதை வாங்கிப் பயன்படுத்த வேண்டும். ஜார்ஜ் வெர்வர் கூறினது போல், “சில நல்ல காரியங்கள் மிகவும் நல்லகாரியங்களுக்கு எதிரிகளே” தொலைக்காட்சியைப் பொருத்தவரை இது மிகவும் உண்மை.

முண்டக்கயம் குட்டப்பன் இன்று மனநிறைவுடன் காணப்படுகிறார். ஆனால் கர்த்தருடைய ஊழியத்தில்தான் நிறைவே என்பதில்லையே. ஒரு இலட்சம் பேர் இரட்சிப்புக்குள் வந்தாலும் பல கோடிக்கணக்கானவர்கள் நரகத்திற்கு செல்கிறார்களே. ஆகையினால் உண்மையான ஓர் ஊழியக்காரருக்கு ஊழியத்தில் திருப்தி அடையவே முடியாது. ஆர். ஸ்டான்லி என்பவர் கூறினது என்னவென்றால் Never be disappointed, Never be satisfied. (ஊழியத்தில் ஒருபொழுதும் மனமடிவும் வேண்டாம். ஒருபொழுதும் மனநிறைவும் வேண்டாம்.) சர்ச் ஆப் காட் இன் ஊழியக்காரராக தமிழ்நாட்டிற்கு குட்டப்பன் வந்தார், இருந்தாலும் சபைகள் ஆரம்பித்ததும் இடங்கள் வாங்கினதும், கட்டிடங்கள் கட்டினதும் மேலிடத்தி லிருந்துள்ள உதவிகளினாலல்ல. விசுவாசத்தினால் எல்லாம்

கைகூடியது என்பது தான் உண்மை. ஆகிலும் வாழ்வின் அந்திசாயும் நேரத்தில், ஆவியானவரின் ஏவுதலின்படி அந்த இடங்களும் கட்டிடங்களெல்லாம் தன் பெயரிலிருந்து மாற்றி சர்ச் ஆப் காட்டின் பெயருக்குப் பதிவு செய்து கொடுத்தார். ஏறத்தாழ 98 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள சொத்துக்கள். பதிலாக ஏதாகிலும் கொஞ்சம் பணம் வாங்கிக் கொள்ள மேலிடத்திலிருந்து கேட்டுக்கொண்டபொழுதும் இலவசமாய் பெற்றதை அவர் இலவசமாய் கொடுத்தார். ஊழியத்திற்கான பணத்தை திருடி பங்களா, வாகனங்கள் வீட்டுப் பொருட்கள், தோட்டங்கள் போன்றவைகளை வாங்கி, பிறகு பிள்ளைகளை உயர்ந்த நிலைமைக்கு கொண்டு வர முயற்சியும் செய்பவர்கள் தாராளமாக இருக்கையிலே தான் குட்டப்பன் இப்படியொரு "வீரச் செயல்" செய்தார். அந்த இடத்தில் நானாயிருந் தாலும் அப்படி செய்வேனா என்பது சந்தேகமே. சூழ்நிலைகள்தான் ஒருவருடைய ஆவிக்குரிய தரத்தை வெளிகொணர்கிறது. தருணம் கிடைக்காததால்தான் பலர் தவறு செய்யாமல் இருக்கிறார்கள். தருணம் கிடைத்தாலும் தவறை விட்டு விலகுவதுதான் உண்மையான ஆவிக்குரிய அடையாளம். இந்நாட்களில் வாழ்க்கையல்ல மாறாக மேடைமேல் காண்பிக்கும் திறமைகளும் காட்சிகளும் ஆவிக்குரிய அடையாளங்களாக மாறியிருக்கிறது.

போதகர் குட்டப்பனின் கூட்டங்கள் கூச்சல் நிறைந்தவைகளல்ல. உரத்த சத்தத்தோடு கூச்சலிடுவதை ஆராதனை என்று தவறாகப் புரிந்துகொண்டுள்ளனர். ஒரு பாட்டைத் துவங்கி அதன் வேகத்தை கூட்டி ஒன்பதாவது பாட்டில் முடிப்பது. குட்டப்பனால் அதை பொறுக்கமுடியாது. தேவ வசனத்தையும் கர்த்தரையும்

தியானிக்கும் பாட்டுகள் அதனுடைய பொருள் புரிந்து பாடவேண்டும். உரத்த சத்தத்தில் கத்திக்கொண்டு காதுகளுக்கும் பிரச்சினை உண்டாக்கி கேட்கக்கூடாத அளவிற்கு அபஸ்வரங்கள் எழுப்பி பாடல்களை ஏன் அருவருப்பாக்கவேண்டும். இந்த கேள்விகளெல்லாம் மனதில் வைத்தால் போதும், வெளியே காட்டவேண்டாம்.

எண்பது வயதான போதகர் ஆபிரகாமை கண்டால் தொண்ணூறு வயதானவர் போல் இருப்பார். வாலிப நாட்களில் கர்த்தருக்காக அனுபவித்த பட்டினியும் பாடுகளுமே இதற்கு காரணமாகும். இன்றும்கூட ஆபிரகாமின் தமிழைக் கேட்டு நான் வியந்தேன். தாராளமாக மலையாளம் கலந்த ஒரு "தமியாள" மாகத்தான் இருக்கிறது. மனைவிக்குத் தமிழ் வாசிக்க தெரியாது. ஆனால் தமிழ்நாட்டிலுள்ள ஊழியக்காரர்களுக்கு அது தடையா யிருந்ததே இல்லை. இதுவரையிலும் பல நூல்கள் அவர் தமிழில் எழுதியிருக்கிறார். அவைகளெல்லாம் சுடச் சுட உடனுக்குடன் தீர்ந்துவிட்டது. சொல்லுமளவிற்கு எந்த நோயும் உடம்பிலில்லை. ஜெப வாழ்க்கையில் எந்தக் குறையுமில்லை. திருநெல்வேலியிலிருந்து பாளையங் கோட்டைக்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்ட போது மனைவி சொன்னார்கள். "அப்பா மேல் மாடியில் ஜெபிக்கிறார்." அப்பொழுது மதிய நேரமிருக்கும். மேல் மாடியில் என்று சொல்லவே வாசிப்பவர்கள் மனதில் பெரிய கட்டிடம் தான் நினைவிற்கு வரும். ஒரு சாதாரணமான சிறிய வீடு ஒரே அடுக்கு. சாதாரணமான வசதிகள். மினுக்கும் "மொஸைக்" (Mosaic) இல்லை, பளிங்கில்லை (Marble) அலங்கார விளக்குகளில்லை. பளபளக்கும் திரைச்சீலைகள் (Screens) இல்லை. ஒரு சாதாரண

மனிதனின் வீடு, ஒரு வேலைக்காரி, ஓட்டுநர், வெளியே செல்லும்பொழுது வீட்டை பாதுகாக்க ஒருவர். இவர்களெல்லாம் அங்கேயே தங்கியிருந்தார்கள்.

போதகருக்கு தமிழ் மட்டுமல்ல, ஆங்கிலமும் தெரியும். அமெரிக்காவிலிருந்து பேரப்பிள்ளைகள் தொலைபேசியில் பேசும்போது இலக்கணம் தவறாது ஆங்கிலப் பேசுவதை நான் கவனித்தேன். நீண்ட நேரம் பேசினார். இடையில் இவ்வாறு கூறினார்: *I want to meet Saddam Hussein, so, he will become a member of my church.* அமெரிக்காவும் பிரிட்டனும் இராக்கைக் கைப்பற்றிய நாட்களில்தான் இது நடந்தது.

எந்த ஒரு ஆணின் வெற்றிக்குப் பின்னாலும் ஒரு பெண் இருப்பாள் என்பது நன்கு தெரிந்த ஒரு பழமொழியாகிவிட்டது. அதே நேரத்தில் பெண் பின்னால் இல்லாமலேயே வெற்றி பெற்றவர்களுமுண்டு. பெண் காரணத்தால் தோல்வியைத் தழுவியவர்களும் அநேகருண்டு. "குணசாலியான ஸ்திரீயைக் கண்டு பிடிப்பவன் யார்?" என்று கேட்கிறார் சாலொமோன். எல்லோருக்கும் கிடைக்காது என்பதை அறிந்திருந்தார். ஆகையினால்தான் ஆயிரம் பேரில் ஒரு "ஸ்திரீயை" காண முடியவில்லை என்று அவர் அங்கலாய்த்தார். [illegible] கெ. வி. சைமன் அவர்களின் மனைவி அவருக்குப் பெரிய ஆசீர்வாதமாகவே இருந்தார்கள். கெ. இ. ஆபிரகாமின் மனைவியும் ஓர் உத்தம குடும்ப பெண்ணாக வாழ்ந்தார்கள் என கேள்விப்பட்டிருக்கிறேன். தன் மனைவியால் மிகுந்த மனவருத்தத்தோடு வாழ்ந்த ஒரு சபைத் தலைவரையும் நான் அறிவேன். ஆனால் இதோ இங்கே புத்தன் குரிசு சாக்கோச்சன் என பிரசித்தபெற்ற தேவதாசர் கெ. ஜி.

சாக்கோ என்பவரின் மகள் "சின்னம்மா". உறவினர்களாலும் நண்பர்களாலும் கைவிடப்பட்ட எந்த ஆஸ்தியுமில்லாத, பட்டினிக்காரனான சுவிசேஷகரைக் கணவராக ஏற்றுக் கொண்டார். கணவரின் ஊழியத்தில் உறுதுணையாய் நின்றார்கள். இவர்கள் சொல்வதை கேளுங்கள்.

எண்பதாவது வயதிலும் உற்சாகத்துடன் இருக்கும் போதகர் கெ. ஜெ. ஆபிரகாமுக்கு நன்றியுள்ள இருதயம் உண்டு. டாக்டர் அம்பேத்கருக்கு அவர் படித்த பள்ளியின் தலைமை ஆசிரியர் தான் அந்த பெயரை வழங்கியது. அது அவருடைய பெயர் தான். அந்நாட்களில் அது ஒரு பெரிய சம்பவமாயிற்று. பீமாராவ் ராம்ஜி அம்பவடேக்கா அவ்வாறாக அம்பேத்கரானார். பீமன் அகந்தையை போக்குவதற்கு அது மிகவும் உதவியது என்று வாழ்க்கை வரலாற்று ஆசிரியர் கூறியுள்ளார். அதைபோலவே கெ. யு. இட்டி என்ற படிப்பறிவில்லாத சாதாரண ஆர்த்தடாக்ஸ் சிறுவனுக்கு தன் பெயரை சூட்டி கர்த்தரின் ஊழியத்திற்கு கரம்பிடித்து உயர்த்தின போதகர் கெ. இ. ஆபிரகாம், வசனம் கற்றுக்கொடுத்த போதகர் டி. ஜி. உம்மன், ஊழியங்களில் பயிற்சியளித்த பக்தன் குட்டியச்சன், போதகர் டி. எம். வர்க்கீஸ் மனந்திரும்புவதற்கு காரணக்காரரான புத்தன்காவில் திருமேனி. சுவிசேஷம் அறிவித்த அறிமுகமில்லாத பெண்மணி. போஸ்பெஸில் துரை, குக்கு துரை இவர்களெல்லாம் மறைந்து விட்டார்கள். அவர்களுடைய உழைப்பின் பலன் இதோ நூறும் அறுபதும் முப்பதும் மேனியாக விளைந்திருக்கிறது. அமெரிக்கா விலோ கேரளாவிலோ அவர் விரும்பினால் சுகமாக வாழலாம். ஆனால் மரணம் வரையிலும் ஊழியம் என்பதுதான் அவரின் கொள்கை. கர்த்தருடைய

ஊழியத்தின் "ஓய்வுபெறுதல்" இல்லை. உலகத்தை வெறுத்ததின் மதிப்பை நாம் புரிந்துகொள்ளும் அந்த நாளை நோக்கி நாம் ஓடிக்கொண்டிருக்கும் பயணம் செய்கிறோம்.

இந்த தேவமனிதரைச் சந்திக்கவும் பழகவும் எனக்கு கிடைத்த வாய்ப்பைப் பெரிய பாக்கியமாக கருதுகிறேன். புதிதாக விசுவாச வாழ்க்கைக்குள் வந்திருக்கும் எனக்குப் பல தேவ மனிதர்களையும் இங்கும் சந்திக்க முடியவில்லை. அதை ஒரு குறையாக கருதுகிறேன். அதே நேரத்தில் சிலரைச் சந்திக்க நேர்ந்ததே என்று நான் வருந்தவும் செய்கிறேன். துன்மார்க்கரும் பணஆசைபிடித்தவர்களும் அதிகார ஆசை உள்ளவர்களும் நிறைந்திருக்கும் இந்த காலத்தில், ஊழியத்திற்கான பணத்தால் வழக்குகளை நடத்தும் இந்த காலத்தில், பணக்கொழுப்பினால் குற்றமற்றவர்களை சிக்கவைத்து, உபத்திரவப்படுத்தும் இந்த நாட்களில், இப்படியொருவர் வாழ்ந்து கொண்டிருக்கிறார் இது ஒரு அற்புதம். இயேசுவின் பின்னால் தன் சிலுவையையெடுத்து சென்ற முண்டக்கயம் குட்டப்பன் என்னுடைய கிறிஸ்தவ வாழ்க்கையை ஆராய்ந்து பார்ப்பதற்கு, குட்டப்பனோடுள்ள எனது பழக்கம் எனக்கு உதவியது. 'நீ' என்றோ 'டேய்' என்றோ ஒருபொழுதும் சொல்லக்கேட்டதில்லை. அன்புடனும், கனத்துடனும் என்னை உபசரித்தார். பாளையங்கோட்டைக்கும், ஸ்ரீவைகுண்டத்திற்கும் நான் சென்றேன். எல்லாவற்றையும் குறித்துக்கொண்டேன். போதகர் ஆபிரகாமோடு இன்னும் சற்று நாள் தங்கியிருந்தேனாகில் இந்த நூல் இன்னும் பெரியதாக இருந்திருக்கும். ஆனாலும் இது போதும் என்று நினைக்கிறேன். இரட்சிக்கப்பட்டவர்களுக்கும் அல்லாதவர்களுக்கும் இந்த நூல் பயன்படவேண்டுமென்று நான்

எண்ணுகிறேன்! உங்களுக்கும் இந்தப் பக்கங்கள் ஆசீர்வாதமாக இருக்க நான் வாஞ்சிக்கிறேன். வரும்-தலைமுறைகள் (கர்த்தர் வருவதற்கு தாமதித்தால்) இப்படியும் ஒருவர் இங்கு வாழ்ந்தாரா? என்று ஆச்சரியப்படுவதற்கு வாய்ப்புண்டு. அதற்காகவும் இந்த நூலை "இராஜா" பயன்படுத்தட்டும்.

## போதகர். கெ. ஜெ. ஆபிரகாம்

நான் ஊழியத்திற்கு ஒப்புக்கொடுக்க துவங்கிய நாட்களில் இந்த தேவமனிதனுடைய தொடர்பு கிடைத்தது. இவர் நல்ல வேதஅறிவு படைத்தவர், தீர்க்கதரிசன வரம்பெற்ற ஊழியர். இவருடைய பாதத்தில் உட்கார்ந்து நல்ல வேதசத்தியங்களை பல மாதங்கள் கற்றறிந்திருக்கிறேன். தீர்க்கதரிசனவரம் கிரியை செய்வது எப்படி? மற்றும் ஆவியினாலே ஞானத்தைப் போதிக்கும் வசனமும் அந்த ஆவியினாலேயே அறிவை உணர்த்தும் வசனமும் எப்படி கிரியை செய்கிறது? என்றும் விசுவாசம் எப்படி கிரியை செய்கிறது? என்றும் இவரிடம் நான் அதிகம் கற்றுக் கொண்டேன். *Evangelist C.I. GEORGE* என்பவரை இவருடைய வாழ்க்கை சரித்திரத்தை எழுதும்படி ஆவியானவர் உணர்த்தி, இதை வெளியிட்டிருக்கிறார். "இந்த புத்தகத்தை படித்து மற்றவர்களுக்கும் இதை அறிமுகப்படுத்தி தேவனுடைய நாமத்தை மகிமைப் படுத்தும்படி அன்பாய் கேட்டுக் கொள்ளுகிறேன்".

இப்படிக்கு கிறிஸ்துவின் பணியில்

**Rev. D. Mohan**
Senior Pastor
New Life AG Church, Chennai